வெளியீடு 17-6-98 Issued 17-6-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, அக்டோபர் 17, 1997 – தொகுதி 38 – எண் 2

**Friday the 17th October, 1997 – Volume 38 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

**[Price Rs. 3.00**

28445

408/99

## 17-10-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் - விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 159-201 |
| 2. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 202 |
| (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 202 |
| (இ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு | 202 |
| 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 | 203 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1997 | 300-301 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை, 1997-98 (ஆசெ.) | 203-204 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு 1997, (ஆசெ.) | 300 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, **1997-98** மீது பொது விவாதமும், கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்— | 204-209 211-290 291-300 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 204, 216-217, 236-237, 238, 245, 249, 277-295 |
| திரு. சி. ஞானசேகரன் | 211-219 |
| * திரு. சி.டி. தண்டபாணி | 219-224 |
| திரு. டி. மணி | 224-228 |
| திரு. இ. கணேசன் | 229-234 |
| * திரு. இரா. தாமரைக்கனி | 234-244, 246-247 |
| திரு. பி.என். வல்லரசு | 243,247-251 |
| திரு. சி. வேலாயுதன் | 251-255 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 255-260 |
| திரு. ஜி. பழனிசாமி | 261-265 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 265-270 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 241-242, 270-277 |
| 6. பேரவை விதி 110-ன் கீழ் பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை— | |
| வைகை அணையிலிருந்து பெரியாறு பிரதானக் கால்வாய் மூலம் நன்செய் நிலங்களுக்காகத் தண்ணீர் திறந்து விடுதல் | 210-211 |
| 7. அரசினர் தீர்மானம்— | |
| பேரவை விதி 189 (3)-ஐத் தளர்த்தல் | 290-291 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 301-302 |


218445

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஐப்பசி 1, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு, 2028**

**1997, அக்டோபர் 17, வெள்ளிக்கிழமை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைப் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 61, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**61—**

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

***6391 — திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கோனுலாம்பள்ளம் நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கோனுலாம்பள்ளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவது சார்ந்த கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன.

V211,51'N97 N97.38.2

[1997 அக்டோபர் 17

(ஆ) 1997-98ஆம் கல்வியாண்டில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்யும்பொருட்டு அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரையில் இப்பள்ளி இடம் பெறாததால் இந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் இப்பள்ளி தேர்ந்தெடுக்கப்படவில்லை.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோனுலாம்பள்ளம் நடுநிலைப் பள்ளிக்குத் தேவையான அளவுக்கு நிலம் வழங்கியிருக்கிறோம். போதுமான அளவுக்கு அதாவது, சுமார் 400 மாணவர்களுக்கும் மேல் இந்த் நடுநிலைப் பள்ளியில் பயிலுகிறார்கள். அருகில் 5 கி.மீ. தொலைவில் வேறு உயர்நிலைப் பள்ளிகளே கிடையாது. அதோடு மட்டுமல்லாமல், இந்த உயர்நிலைப் பள்ளி அரசுக்குக் கட்டவேண்டிய பணத்தைக் கட்டி நான்கு ஆண்டுகள் ஆகின்றன. எனவே, வருகின்ற கல்வியாண்டிலாவது இந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை கடந்த ஆண்டு வாய்க்கவில்லை. வருகின்ற ஆண்டில் வாய்க்கும் என நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர் ஒரு பட்டதாரி ஆசிரியராகவோ அல்லது தமிழ்ப் புலவராகவோ இருக்க வேண்டுமென்று முறை இருக்கிறது. யாருக்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்த முன்னுரிமையில் வாய்ப்பு அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான வால்பாறை தொகுதியில் 10 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் வால்பாறையில் ஒரே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி மட்டும் இருக்கிறது. முடீஸ் அல்லது சோழகர



1997 அக்டோபர் 17]

அணையில் ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியை அமைக்க வேண்டுமென்று எங்களுடைய மாவட்டத்தின் அமைச்சர் மரியாதைக்குரிய வனத்துறை அமைச்சர் அவர்கள் முன்முயற்சி எடுத்து வருகின்றார்கள். எனவே, அங்குள்ள உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தனிக் கேள்வியைச் சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். இருந்தாலும்கூட, உரிய முறையில் விண்ணப்பங்கள் வருமேயானால், மலைப்பகுதி என்ற காரணத்தால் முன்னுரிமை தந்து கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சில உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் மேல்நிலைப் பள்ளிக்குரிய ஆசிரியர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை என்று பரவலாகச் சொல்கிறார்கள். அவர்கள் எப்போது நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடமாற்றம்மூலமாக அந்தக் குறை ஓரளவுக்கு நிவர்த்திக்கப்பட்டுள்ளது. புதிய நியமனங்கள் ஆசிரியர் வாரியத்தின் மூலமாகத்தான் செய்யவேண்டுமென்ற ஒரு கட்டாயமான நிலை இருப்பதன் காரணமாக இன்னும் ஓரிரு திங்களில் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர்களைப் போடலாம் என்ற விதியைக் கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் மாற்றிவிட்ட காரணத்தால், தற்போது கல்வியினுடைய தரத்தை மனதில் வைத்து, பட்டதாரி ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின்படி என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் - ஒரு பட்டதாரி ஆசிரியராவது நடுநிலைப் பள்ளிகளில் இருந்தாக வேண்டும், ஒரு புலவர் இருந்தாக வேண்டும். அப்படி இல்லாவிட்டால் உடனே நியமிக்க ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 5 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களை அரசு வழங்கி உள்ளது. ஆனால், சுயநிதிப் பள்ளிகளிலே 5 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களை ரோஸ்டர் முறையிலே நியமிக்காமல், அவர்களுடைய விருப்பம்போல் ஆசிரியர்களை நியமித்துக் கொள்கிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட இடங்களில நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை ரத்து செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களே செலவுக்கான பொறுப்பை ஏற்று, ஊதியம் வழங்கி ஆசிரியர்களை நியமிக்கிறபோது, அது அவர்களுடைய பொறுப்பாக அமைகிறது. அதிலே நேரடியாகத் தலையிடுவது நியாயமாகத் தோன்றவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் மேம்படுத்துகிறபோது கட்டிட வசதி இல்லாமல் அவர்கள் சிரமப்படுகிறார்கள் எனவே, அவற்றுக்கெல்லாம் கட்டிட வசதி செய்து தரப்படுமா? என்னுடைய தொகுதியிலே குடக்கூர் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கு கட்டிட வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அங்கு கட்டிட





வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் கட்டிட வசதிக்காக நிதி ஒதுக்கப்பட்டாலும்கூட, எல்லாப் பள்ளிகளுக்கும் அந்தப் பங்கீடு கிடைப்பது இல்லை. 100-க்கு 10 அல்லது 12 பள்ளிகளுக்குத்தான் கிடைக்கிறது. தேவை மிக அதிகமாக இருக்கிறது. அதனால்தான் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிறபோது அமைச்சர் ஏற்றுக்கொள்ள மறுக்கிற நிலைமையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளுக்கு தலைமையாசிரியர்களை நியமிக்கிறபோது பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்படுபவர்கள் 5 ஆண்டு காலம் இடைநிலை பள்ளிகளிலே ஆசிரியராகப் பணியாற்ற வேண்டும் என்ற விதி இருக்கிறது. சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு அத்தகைய விதி இல்லை. எனவே, அந்த விதியை நீக்கி தலைமையாசிரியராக நியமிக்கப்படக்கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் 5 ஆண்டு காலம் அனுபவம் பெறத் தேவையில்லை என அரசு ஆணையிட்டுள்ளதை மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில துவக்கப் பள்ளிகளிலேகூட பட்டதாரி ஆசிரியர்கள் இடம் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, 5 ஆண்டு காலம் அவர்கள் பாடம் நடத்தி பட்டறிவு பெற்றவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்குத் தர வேண்டிய முன்னுரிமை புதிதாக ஒரு பட்டதாரியை நியமிப்பதன் மூலமாக பறிக்கப்படக் கூடாது. ஆனால் எந்த காரணத்தினாலோ, அந்தப் பள்ளியிலே—உடனே நியமிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டு - பட்டதாரி ஆசிரியரை நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் 5 ஆண்டு காலம் பட்டறிவு பெறாதவர்களாகவும் அனுபவம் பெறாதவர்களாகவும் இருப்பார்களேயானாலும், விதிவிலக்கு தருவது பற்றி அதற்குரிய வேண்டுகோளை அடிப்படையாக வைத்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*62—*

**சிற்றூர் விளையாட்டு மேம்பாட்டுக் கழகம்**

***10431— திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிற்றூர்களில் உள்ள விளையாட்டு வீரர்களை உற்சாகப் படுத்துகின்ற நோக்கத்துடன் அவர்களுக்கென சிற்றூர் விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் என்ற பெயரில் உருவாக்கி, கிராமப்புற இளைஞர்களை ஊக்கப்படுத்திட அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சிற்றூர் விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகியும்கூட, கிராமப் பகுதிகள் நாட்டினுடைய முதுகெலும்பு என்று கூறிக் கொண்டிருந்தாலும் கூட, 96 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியத் திருநாட்டில் - சிறிய நாடுகள்கூட விளையாட்டில் முதன்மை பெறக்கூடிய சூழ்நிலை இருக்கக்கூடிய காலகட்டத்தில் - வீரமிக்க, சக்தி வாய்ந்த இளைஞர்கள் வாழக்கூடிய கிராமப் பகுதிகளில்-எதிர்காலத்தில் விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் அமைக்க முடியாத சூழ்நிலை இருந்தாலும்கூட - ஒன்றிய அளவிலாவது விளையாட்டிலே சிறந்த இளைஞர்களை ஊக்குவிக்க அரசு திட்டம் தீட்டி ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விளையாட்டுத் துறையில் இளைஞர்களுக்கு ஆர்வத்தினை ஊட்டக்கூடிய அளவிற்கு மாநில





அளவில் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலேயே இயங்குகிறது. அதிலே முதலமைச்சர் என்ற முறையில் அவர்கள் அதிக கவனம் எடுத்துக்கொண்டு அந்தக் கூட்டங்களுக்கு தலைமை வகித்து என்னென்ன செய்யப்பட வேண்டுமென்ற ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ஏற்கெனவே உள்ள திட்டத்தின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் ஊரக விளையாட்டு மையத்தினை ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஊரக விளையாட்டு மையங்களில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளவும் அரசு ஆணையிட்டிருக்கிறது.

ஓடுபாதை வேலை அமைப்பிற்காக ரூ.50,000/-மும்; பண்டகம் (ஸ்டோர்) மற்றும் உடை மாற்று அறைக்காக ரூ.50,000/-மும் விளையாட்டு உபகரணங்களுக்காக ரூ.10,000/-மும் இதன் ஆரம்ப நிலையாக, அனைத்து மாவட்டங்களிலும் 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒவ்வொரு விளையாட்டு மையம் நிறுவப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர் பணியாக இருக்கிறது. அது தவிர, இந்த ஆண்டு 50-ஆம் ஆண்டு சுதந்திர நாளையொட்டி தமிழகம் முழுவதும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று, அது கடந்த 15-தேதி நிறைவுற்றது. மறுபடியும் பொங்கல் நாளையொட்டி கிராம மக்கள் அதிகம் ஈடுபடக்கூடிய அளவிற்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இது ஆங்காங்குள்ள பள்ளிகளிலே தோன்றுகிற ஊக்கத்தின் அடிப்படையிலேயும், அந்த வட்டாரத்திலுள்ள இளைஞர்களை இணைப்பதற்காக இருக்கிற அலுவலர் மூலமாகவும் இந்த விளையாட்டுப் போட்டிகளை ஊக்கப்படுத்துவது மேலும் மேலும் அந்த வளர்ச்சிக்கு வழி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கென்று தனிச் சிறப்பு எல்லா துறைகளிலேயும் உண்டு. கோயில்களை எடுத்துக்கொண்டால் தமிழ்க் கடவுள் என்று முருகனை வணங்குவதும், அதுபோல திருநாள் என்று எடுத்துக்கொண்டால் தைத் திருநாளை தமிழர் திருநாளாகக் கொண்டாடுவதும் உண்டு. அதுபோல விளையாட்டுத் துறையை எடுத்துக்கொண்டால் தமிழர்களுக்கென்று சிறப்பு தரக்கூடிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகள் உண்டு.

[1997 அக்டோபர் 17

அதுபோல, இதிலே முக்கியமானது கபடி. இந்த கபடி விளையாட்டு தமிழ்நாட்டுக்குரிய தனி முத்திரையோடு விளங்குகிறது. இந்த விளையாட்டை பிரபலப்படுத்த மறைந்த அமைச்சர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள்கூட முயன்றார்கள். நேற்று முதலமைச்சர் அவர்களும், அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களும் பங்கேற்ற விழாவிலேகூட கபடி கோர்ட்டிற்கும் எல்லைக் கோட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை நம்முடைய பிரபல நடிகர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எனவே, அந்த அளவிற்கு தமிழகத்திற்கே உரித்தான இந்த கபடி விளையாட்டை சர்வதேச அளவிலே பிரபலப்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கபடி விளையாட்டை ஆதரிக்கலாம், ஆர்வம் தரலாம். கபடர்கள் விளையாட்டைத்தான் அனுமதிக்க முடியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திருவாரூர் பெரம்பலூர் மாவட்டத்திற்கு மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களில் இப்படிப்பட்ட மாவட்ட விளையாட்டு மையம் -'ஸ்டேடியம்' இவற்றை- அமைப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசை அணுக வேண்டியிருக்கிறது. மத்திய அரசு 50 விழுக்காடு அளவிற்கு நிதி உதவித் தொகையாக தருவதற்கு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்வதில் நீண்டகாலமாகிறது. எனவே, இதுகுறித்து மத்திய அமைச்சருக்கு எழுதப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரங்கில் நடைபெறுகிற ஆசிய விளையாட்டுப் போட்டிகளானாலும் சரி, ஒலிம்பிக் போட்டிகளானாலும் சரி, பதக்கம் பெறுகிற பட்டியலில் இந்தியா பின்தங்கி இருப்பதைத் தொடர்ந்து



1997 அக்டோபர் 17]

நாம் வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். உலகிலுள்ள பிற நாட்டு இளைஞர்களோடு போட்டியிட ஆற்றலற்றவர்கள் அல்ல இந்திய இளைஞர்கள். அவர்களின் நெஞ்சுக்குள் தேங்கியிருக்கிற ஆற்றலை உரியபடி வெளிக்கொண்டு வரக்கூடிய வாய்ப்புகள் வழங்கப்படாத காரணத்தினாலேதான் அவர்களுடைய திறமைகள் கூர் ஏற்றப்படவில்லை என்பதை உணர்ந்து தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு விளையாட்டுத் திடலை உருவாக்குவதற்குரிய முயற்சிகளை மாநில அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் இதிலே எழுப்பியிருப்பது தேசியப் பிரச்சினை; அதிலே உள்ளடங்கியிருப்பது உணவுப் பிரச்சினை; அதைத் தாக்கிக் கொண்டிருப்பது வறுமைப் பிரச்சினை; அதையும் கடந்து நிர்வாகப் பிரச்சினை. ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் அமைக்க முடியாவிட்டாலுங்கூட ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனை முழு அளவில் அமைத்து, முழு அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள ஒரு தொடர் முயற்சி தேவை. அதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் ஆங்காங்கே ஊக்கம் தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

முற்பகல் 9-45

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களிலே வசிக்கக்கூடிய இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் விளையாட்டுத் துறையிலே பல்வேறு வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்ற காரணத்தால், அவர்களும் சிறந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இருக்கின்ற இளைஞர்களுக்கு இந்த வாய்ப்புகள் குறைவாக இருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய அரசு கிராமப்புறங்களில் ஏற்கெனவே இருக்கின்ற உடற்பயிற்சி ஆசிரியர்களைக் கொண்டே தடகள மற்றும் தனித் திறன் போட்டிகளில் பங்கேற்றுச் சிறப்பாக விளங்கக்கூடிய வகையில், இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், 10,15 கிராமங்களைத் தேர்வு செய்து அங்கேயே உள்ள ஆசிரியர்களைக் கொண்டு, இளைஞர்களுக்கு

உடற்பயிற்சிகளிலும், விளையாட்டுகளிலும் ஊக்கம் தருகின்ற நிலையை உருவாக்க முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புகுதியிலே தேர்வு செய்வது என்புதைத் தனி வழி முறையாக ஏற்படுத்துவது இயலாத ஒரு காரியும். ஆனால் கிராமப் பகுதியிலே உள்ள புள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களில் இந்தத் தேர்ச்சி மிகுதியாக இருக்கிற மாணவர்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு விடுதிகள் அமைத்து தனிப் பயிற்சி வழங்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. ஈரோட்டிலே மகளிருக்காக இருக்கிறது; நெய்வேலியிலே இருக்கிறது; அதுபோல தர்மபுரியிலே இருக்கிறது; மதுரையிலே இருப்பதாக நினைக்கிறேன். அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் மிகத் தேர்ச்சியுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இடம் கொடுத்து அவர்களுடைய தேர்ச்சியை மேலும் வளர்ப்பதற்குத் தனிப் பயிற்சி வழங்குவதற்கும் ஏற்பாடு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையிலே, நம்முடைய இளைஞர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் மத்திய அரசு இப்போது போர்ட் டிரஸ்ட், இரயில்வே, வங்கி போன்ற அலுவலகங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலை கொடுத்து அவர்களுக்கு -- அந்தந்தத் துறையிலே வேலை செய்யாமல் -- விளையாடுவதற்கு மட்டும் ஊக்கம் கொடுக்கிறார்கள். அதுபோல நம்முடைய தமிழக அரசிலேயும், பல துறைகளிலே உள்ள பல விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தந்தத் துறைகளிலே வேலை செய்யச் சொல்வதற்குப் பதிலாக, விளையாடுவதற்கு ஊக்கம் கொடுத்து, விளையாட்டுத் துறையிலே அவர்களைச் சிறந்த விளையாட்டு வீரர்களாகக் கொண்டு வருவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் மனதிலே படுவதை, சொல்வதை அரசினுடைய கருத்தாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்போது விளையாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். வேலை வாங்குவதுதான் கடினமாக இருக்கிறது. (சிரிப்பு) இருந்தாலும்கூட விளையாட்டிலே தேர்ந்தவர்கள் என்று வருகிறவர்களுக்கு சில வகையில் முன்னுரிமை தந்து வேலையும் தரப்படுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட





கார்ப்பரேஷனுக்குள் அவர்கள் அதிகம் பேர் — 10 பேர் — 12 பேர், சேர்ந்து ஒரு டீமாக உருவாவதைப்போல நம்முடைய மாநிலத்திலுள்ள ஒவ்வொரு அலுவலகத்திலேயும் அந்த அளவுக்கு இடம் தரக்கூடிய வாய்ப்பு இல்லை. இருந்தாலும்கூட அவர்கள் விரும்பி, 10 பேர், 20 பேர் சேர்ந்து ஒரு குழுவாக ஆகி, ஒரு டீமாகச் செயல்படுவார்களேயானால், அதை ஊக்கப்படுத்த ஆவன செய்யப்படும். அதைப்போல, மின்சார வாரியத்திலே அத்தகைய குழு இருக்கிறது என்பதாக அந்தத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, . திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மினசாரத் துறை அமைச்சர்.

**63—**

### போச்சம்பள்ளியில் மருத்துவமனை அமைத்தல்

***9716— திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் மேம்படுத்தப்பட்ட (Upgraded) ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வந்தது. இதை அரசு மருத்துவமனையாக மாற்ற அரசாணை (நிலை) எண் 311, சுகாதாரம், நாள் 23-6-1997-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அரசு வட்ட மருத்துவமனையாக மாற்ற தர்மபுரி மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மருத்துவமனை அமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவமனை ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது; அங்கே 2, 3 படுக்கை அறைகள்தான் இருக்கின்றன; ஒரே ஒரு மருத்துவர்தான் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்; ஆகவே அருள்கூர்ந்து - அந்தக் கிராமப் பகுதியிலே நிறைய மக்கள் இருக்கிற காரணத்தால் - அதிகமான மருத்துவர்களை நியமித்தும், 32 படுக்கை வசதி கொண்ட படுக்கை அறையும், அவசரப் பிரிவுக்காக ஒரு ஆம்புலன்சும், செவிலியர்களையும் உடனடியாக அமர்த்தவும், ஏற்பாடு செய்து தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவமனை என்று சொன்னாலே குறைந்தபட்சம் 32 படுக்கை வசதிகள் கொண்டது. அதற்கேற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாலுகா மருத்துவமனைக்கு உரிய அந்தஸ்து வழங்கக்கூடிய வகையில் டாக்டர்களும், நர்சுகளும் நியமிக்கப்படுவதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்த உத்தரவு 23-6-1997 அன்று வழங்கப்பட்ட காரணத்தால், தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாகக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, டாக்டர் அ. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**64—**

### மின் அழுத்தக் குறைவினை சீரமைத்தல்

***9769— டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்தில் மின் அழுத்தக் குறைவினை சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 4.8 எம்.வி.ஏ.ஆர். திறன் கொண்ட "கெபாசிடர் பாங்க்" யூனிட்டுகள் நிறுவப்பட்டு உள்ளன. இதன்பின் மின் அழுத்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும்.

முற்பகல் 9-50

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையிலே தற்போது எம்.10/11 கே.வி. என்ற துணை மின் நிலையம் இயங்குகிறது. அந்த மின்நிலையம் கிட்டத்தட்ட 10 கி.மீ. வரையிலே சீராக மின்சாரம் சப்ளை செய்யக்கூடிய திறன் படைத்த ஒரு துணை மின் நிலையம். அது சப்ளை செய்கின்ற ஊர்கள் எல்லாம் கிட்டத்தட்ட 15, 20 கி.மீ. தூரத்திற்கு அப்பாலே இருக்கின்ற காரணத்தினாலும், மின் அழுத்தக் குறைவு அடிக்கடி ஏற்படுவதனாலும், விவசாயிகளினுடைய மின் இயந்திரங்களில் காயில் போன்ற பகுதிகள் பழுதடைவதோடு வீடுகளிலும் மின்சார இயந்திரங்கள் பழுது அடையும் நிலை இன்றைக்கு உளுந்தூர்பேட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் இருக்கின்ற காரணத்தாலும் அந்தப் பகுதியிலே 110/33 கே.வி. அளவுடைய, ஒரு திறன் வாய்ந்த டிரான்ஸ்பார்மர் அமைத்து, குறைந்த மின் அழுத்தத்தினை சீராக்குகின்ற பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையிலே மட்டுமல்ல, தமிழ்நாட்டில் சுமார் 200 பகுதிகளில் இப்படி மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. அங்கே எல்லாம் புதிதாக சப்-ஸ்டேஷன்கள் கட்டினால்தான் இந்தக் குறைபாட்டினைப் போக்க முடியும். அதற்குக் கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகலாம். எனவே, இந்த ஆண்டு முதற்கட்டமாக 60 இடங்களில் புதிய சப்-ஸ்டேஷன்கள் கட்டுவதற்கு வாரியம் முயற்சிகளை மேற்கொண்டு கட்டிடப் பணிகளும் நடந்து வருகின்றன. இருந்தாலும் இந்தக் குறைபாட்டை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் கெபாசிட்டர் பாங்க், குறைந்தபட்சம் 500 இடங்களில் டிரான்ஸ்பார்மர்களில் பொருத்தி இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. உளுந்தூர்பேட்டையிலே மார்ச் மாதத்திற்குள் இந்தக் குறைபாட்டைப்

போக்க வேண்டுமென்று வாரியம் முடிவு எடுத்தது. அரசாங்கம், டிசம்பருக்குள்ளாக அந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தும்போது அரசு நிர்ணயித்த விலை தரப்படுகிறது. அதாவது, கைடுலைன் வேல்யூ தரப்படுகிறது. அதனால் இடம் கிடைப்பது இல்லை. எனவே, மார்க்கெட் விலையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்தவரையிலே அரசாங்க நிலத்திலேயேதான் நாம் துணை மின் நிலையங்களைக் கட்டுவது என்று கொள்கை முடிவு எடுத்து இருக்கின்றோம். அது இல்லாத இடங்களிலே தனியாரிடம் நிலம் கிடைக்குமானால், கைடுலைன் வேல்யூ என்ன இருக்கிறதோ, அதன்படி நில உரிமையாளர்களுக்கு அந்தப் பணம் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் கீரமங்கலத்திலே 33 கி.வா. துணை மின் நிலையமும், கரம்பகுடியில் 110 கி.வா. துணை மின் நிலையமும் துவங்கப்பட்டு 6 மாதம் ஆகியும், தலா 2 துணை மின் நிலையங்களிலேயும் 2 டிரான்ஸ்பார்மர்கள் மட்டுமே வைத்து இருக்கிறார்கள். இன்னும் டிரான்ஸ்பார்மர்கள் வரவில்லை என்று சொல்கிறார்கள். மேலும் அனுமதிக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர் வர வில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் இயங்குவதற்கான ஆயத்தப் பணிகள் முடிந்தாலும்கூட இன்னும் அரசு, துணை மின் நிலையத்திற்கு டிரான்ஸ்பார்மர்களை தராத காரணத்தால், அந்தப் பகுதியில் விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, அனுமதிக்கப்படாமல் இருக்கிற இந்த 2 துணை மின் நிலையங்களுக்கு டிரான்ஸ்பார்மர்களைத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் கட்டுவதற்கான பணிகள் எல்லாம் முடிவுற்று டிரான்ஸ்பார்மர் பொருத்த வேண்டிய நிலை ஏற்படுமானால், உடனடியாக அங்கே டிரான்ஸ்பார்மர் அனுப்பி வைக்கப்படும். இப்போது, இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, மாநகராட்சிகளிலே - சேலம், கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் எல்லாம் முதல்கட்டமாக டிரான்ஸ்பார்மர்கள் பொருத்த வேண்டும் என்று - சேலத்திலே மட்டும் ஏறக்குறைய 40 புதிய டிரான்ஸ்பார்மர்களும், கோயம்புத்தூரில் 40 டிரான்ஸ்பார்மர்களும் பொருத்தப்பட்டு பணிகள் நடைபெற்று இருக்கின்றன. அதைப்போலவே, கிராமப் பகுதிகளிலேயும் மின்சாரத்தை சீராக்குவதற்காக புதிய டிரான்ஸ்பார்மர்கள், டெண்டர் விடப்பட்டு, வாங்கப்பட்டு, பொருத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலேயும் உடனடியாக அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன்.

**திரு. ஆ.ஜெ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தநாடு மையத்தில் ஒரு துணை மின்நிலையம் அமைப்பதற்கு விழுப்புரம் தலைமைப் பொறியாளரிடமிருந்து கருத்துருக்கள் வந்து இருக்கின்றன. அந்த மையத்தில் தெரு மின் விளக்குகள், குடிதண்ணீர் டாங்குகள் எல்லாம் இயங்காமலிருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் இடத்தைக்கூட தானமாகக் கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள். அதனால் அங்கு ஒரு துணை மின் நிலையம் நிறுவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் எந்தெந்த இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைப்பது என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் அடுத்த நிதியாண்டில் நிச்சயமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

[1997 அக்டோபர் 17

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரைக்கு 66 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாக நேரடியாகத் தெரிவித்திருக்கிறார்கள். எப்போது அந்த வேலைகள் தொடங்கப்படும்? மின் தடை எப்போது நீக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதுரை ஒரு கார்ப்பரேஷனின் கீழ் இயங்கி வந்த காரணத்தினால் பல ஆண்டுகளாக அங்கே மின்சாரத் துறையிலே மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த அரசு புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் மதுரையிலே நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏறக்குறைய 66 கோடி ரூபாய்க்கு மின்சார மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. முதல் கட்டமாக இந்த ஆண்டு 15 கோடி ரூபாய் நிதியொதுக்கி அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு ஆண்டுகளிலே அந்தப் பணிகள் முடிவடையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணிநாடார்.

**திரு.எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் சட்டமன்றத் தொகுதியில் மின்னழுத்தம் மிகவும் குறைவாக இருக்கின்றது. ஆகவே கருங்குளம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிற்கு 60 இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தெந்த இடங்களிலே துணை மின் நிலையம் தேவைப்படுகிறதோ அதை எழுதிக் கொடுப்பார்களேயானால் அந்தப் பட்டியல் தயார் செய்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய பரிந்துரையும் இணைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கீழூர் ஒன்றியத்தின் கடற்கரைப்பகுதி வட்டங்களிலும், தலைஞாயிறு



1997 அக்டோபர் 17]

ஒன்றியத்தின் ஒரு பகுதியிலும் மின்னழுத்தக் குறைவு மிகவும் காணப்படுவதால் அதற்கு மையமான வேட்டைக்காரன்புதூரில் ஒரு துணை மின் நிலையம் அமைத்தால் இந்தப் பிரச்சினை நீங்கும். அதற்கு அந்தப் பகுதியிலுள்ளவர்கள் இலவசமாக இடம் தரத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அங்கு துணை மின்நிலையம் அமைக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இடத்தை இலவசமாகக் கொடுப்பதற்கு முன்வருகின்ற காரணத்தால், யார் யார் இடத்தை இலவசமாகக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை தந்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**65—**

### மதுரவாயல் பிர்க்காவை பூந்தமல்லி வட்டத்தில் சேர்த்தல்

***8553— திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மதுரவாயல் பிர்க்காவை பூந்தமல்லி வட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டிலேயே செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லை' என்ற சொல்லுக்கே இந்த ஆட்சியில் இடம் இல்லை என்று சொல்லுகின்ற நிலையில் (சிரிப்பு) அவசர அவசரமாக காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்றபோது, பழைய

சைதாப்பேட்டை தாலுகா என்பது, இராமநாதபுரம் மாவட்டமும், காமராஜர் மாவட்டமும் இணைந்த மக்கள் தொகை எவ்வளவோ, அவ்வளவு மக்கள் தொகை கொண்டதாக இருந்தது. அதை இரண்டாக, அம்பத்தூர், தாம்பரம் என்றும் இராமாபுரம், பூந்தமல்லி என்றும் பிரிக்கின்றபோது பூந்தமல்லி சிறிய தாலுகாவாகவும், அம்பத்தூர் மிகப்பெரிய தாலுகாவாகவும் ஆகிவிட்டது. பூந்தமல்லி தாலுகாவிற்குப் பக்கத்திலே ஓரேயொரு கிலோமீட்டர் தூரத்திலே இருக்கின்றது மதுரவாயல் பிர்க்கா. அந்த பிர்க்காவை பூவிருந்தவல்லியோடு இணைக்க வேண்டும் என்பதுதான் நீண்டநாள் கோரிக்கை. அதை இந்த அரசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் நிதர்சனமாகப் பிரச்சினைகளை அணுகுபவர் என்பது எனக்குத் தெரியும். திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்தில் கீழ்க்கண்ட குறு வட்டங்கள் அமைந்துள்ளன.

*(1)* மதுரவாயல் *(2)* அம்பத்தூர் *(3)* மாதவரம் *(4)* முகையூர் *(5)* ரெட் ஹில்ஸ்.,

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டத்தில் கீழ்க்கண்ட குறுவட்டங்கள் அமைந்துள்ளன.

*(1)* பூந்தமல்லி *(2)* ஆவடி *(3)* திருநின்றவூர் *(4)* திருமழிசை. அம்பத்தூர் வட்டம் மற்றும் பூந்தமல்லி வட்டம் - இந்தத் தேதியை நினைவிலே வைத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.— *1-1-1997* முதல் செயல்பட்டு வருகிற நிலையில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்திலுள்ள மதுரவாயல் குறு வட்டத்தை பூந்தமல்லி வட்டத்துடன் சேர்ப்பது சாத்தியமில்லை. உறுப்பினர் ஒத்துக்கொள்வார் என்று நம்புகிறேன்.

முற்பகல் *10-00*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. உதாரணத்திற்கு பூவிருந்தவல்லி தொகுதியிலே இருக்கின்ற செம்பரம்பாக்கம் ஊராட்சி மன்றம். அந்த ஊராட்சி மன்றத்திலே இருக்கின்ற ஒரு உட்கிராமம் பழந்தூர். இது காஞ்சிபுரம் மாவட்டத்தில் போய் இருக்கிறது. செம்பரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டமாக வந்திருக்கிறது. சட்டமன்றத் தொகுதி பூந்தமல்லி; ஊராட்சி ஒன்றியம் பூந்தமல்லி; தாய் கிராமம் செம்பரம்பாக்கம் திருவள்ளூர் மாவட்டத்தில்



இருக்கிறது: இணை கிராமம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் போய் இருக்கிறது. இதுபோன்று பல்வேறு இடங்களில் எல்லாம் பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்காக ஒரு குழுவை நியமித்து மாவட்டங்களைப் பிரிவினை செய்கின்றபோது ஏற்பட்டு இருக்கின்ற குறைகளையெல்லாம் நீக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவை நியமிக்க வேண்டும் என்ற கருத்தை முதல்வரோடு கலந்து பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**66—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

***4423— திரு ஜி. பழனிசாமி:**

*மாண்புமிகு* **ஊரக** *வளர்ச்சி மற்றும்* **உள்ளாட்சித் துறை** *அமைச்சர்* **கீழ்க்காணும் வினாக்களுக்கு** *விடையளிப்பாரா—*

*(அ)* திருத்துறைப்பூண்டி தொகுதி, பழையங்குடி ஊராட்சிக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)*: பழையங்குடி ஊராட்சிக்கு ஒரு புது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சென்ற *1996-97*ஆம் ஆண்டில் திட்டம் ஏதுமில்லை. இந்த வினா *27-8-1996*-ல் எழுப்பப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, பழையங்குடி என்பது முற்றிலும் மேல்நிலைப் பள்ளி, அரசு ஊழியர்கள், காவல் நிலையங்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதியாகவும் சிற்றூராகவும் இருக்கின்ற காரணத்தால், நல்ல குடிநீர் கிடைப்பதால் அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி தண்ணீர் சப்ளை செய்தால், அங்கேயுள்ள அரசு ஊழியர்கள்

அங்கிருந்து 15,20 கி.மீ. அப்பால் போய் தண்ணீர் பிடித்து திரும்பி வருகின்ற அவல நிலைமை மாறும். அதேபோன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் அங்கு நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அது ஒரு சிற்றூர்; அங்கே பல அதிகாரிகள் தங்குவதற்கு, குடியிருப்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, உடனடியாக அரசு மறுபரிசீலனை செய்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-ல் பழையங்குடி ஆதி திராவிட குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, தற்போது அது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருக்கிறது. ஆனால் ஒரு நபருக்கு 40 லிட்டர் என்று வழங்க வேண்டிய முறை அங்கு எல்லாக் குடியிருப்புகளிலும் இல்லை. குறிப்பாக, ஆதி திராவிடர் குடியிருப்பைத் தவிர அபிடயக்கட்டளை — 20 லிட்டர் அளவுக்குத்தான் அங்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. கரும்பியூர் — 10 லிட்டர்தான் கிடைக்கிறது. இராஜ கட்டளை—12 லிட்டர். இளவரச நல்லூர் 8 லிட்டர். தண்ணீரே இல்லை என்று இல்லாமல் ஓரளவுக்குத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. சென்ற ஆண்டு வரையில் அதற்கு எந்த திட்டமும் தீட்டப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு, நான் அந்தப் பகுதிக்கு போயிருந்தபோது சட்டமன்ற உறுப்பினரும் தெரிவித்ததன் அடிப்படையில் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறேன். இந்த ஆண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாக மாற்றிட முழு அளவுக்கு குடியிருப்பாக மாற்ற முயற்சி மேற்கொண்டு அதற்கான நடவடிக்கை தொடர்ந்து இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித துறை அமைச்சர்.

**67—**

## மின் ஆக்கி அமைத்தல்

***7989— திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அரக்கோணம் நகருக்கு மின்தடை ஏற்படும்போது, குடிநீர் ஏற்றும் நிலையம் பாதிக்கப்பட்டு குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதால் மின் ஆக்கி வைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணம் நகருக்கு மின்தடை ஏற்படும்போது, குடிநீர் ஏற்றும் நிலையம் பாதிக்கப்பட்டு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதால் மின் ஆக்கி, அதாவது ஜெனரேட்டர் வைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-05

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் ஆக்கி வழங்கியதற்கு மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அந்த மின் ஆக்கியை நிறுவுவதற்கான அறையும் கட்டப்பட்டு மின ஆக்கியும் நிறுவப்பட்டுள்ளது; மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மின்ஆய்வாளர் அதைப் பரிசீலித்து தக்க சான்று வழங்காத காரணத்தால், மாதக் கணக்கில் அது இயங்காமல் இருக்கிறது. அரக்கோணம் நகரில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால், குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, உடனடியாக மின் ஆக்கியை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியும் இன்னும் 20, 25 தினங்களில் - அடுத்த மாதம் 25 ஆம் தேதிக்குள் - அது நிறுவப்பட்டுவிடும் நிலை உருவாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. குழந்தை. தமிழரசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**68—**

## முந்திரி கொள்முதலுக்குக் கூட்டுறவுச் சங்கம்

***8189—திரு. குழந்தை. தமிழரசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 17

விருத்தாச்சலம் வட்டம், கம்மாபுரம் ஒன்றியத்தில் விவசாயிகளிடமிருந்து முந்திரி கொள்முதல் செய்ய ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாச்சலம் வட்டம், கம்மாபுரம் ஒன்றியத்தில் விவசாயிகளிடமிருந்து முந்திரி கொள்முதல் செய்ய கூட்டுறவுச் சங்கம் அமைப்பது குறித்து, திட்டம் ஏதும் தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்மாபுரம் ஒன்றியம் பின்தங்கிய பகுதியாகும். அங்கேயிருக்கும் விவசாயிகள் எல்லாம் தங்களுடைய முந்திரிகளை தொலைவில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு, விருத்தாச்சலத்திற்கோ அல்லது பண்ருட்டிக்கோ எடுத்துச் சென்று வருகிறார்கள். எனவே அவர்களின் குறைகளைப் போக்குவதற்காக ஒன்றியந்தோறும், இத்தகைய கூட்டுறவுச் சங்கம் மூலமாக முந்திரிகளை வாங்கினால், விவசாயிகள் நல்ல லாபம் அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஒன்றியத்திலும், அதுபோல், தமிழ்நாட்டில் முந்திரி விளைகின்ற எல்லா இடங்களிலும், இத்தகைய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஏற்படுத்திட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாச்சலம் வட்டம், கம்மாபுரம் ஒன்றியத்தில் 762 விவசாயிகள் விருத்தாச்சலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்களில் 388 உறுப்பினர்களே முந்திரி சாகுபடியாளர்களாக உள்ளனர். இவர்களின் நிலங்களில் சாகுபடி செய்த முந்திரி ஓர் ஆண்டுக்கு சுமார் 500 மூட்டைகள் சந்தைக்கு வருகின்றன. ஆனால் இதுவரையில் முந்திரி கொள்முதல் மற்றும் கொதுவைக் கடன் சம்பந்தமாக எந்த விவசாய உறுப்பினரும் விருத்தாச்சலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை அணுகவில்லை. முந்திரி கொள்முதல் மேற்கொள்ள ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுமானால் முந்திரி பருவகால சாகுபடி பயிர் என்பதால், நீண்டகாலங்களுக்குக் கொள்முதல் வரத்து இருக்காது, ஓர் ஆண்டில் 3 மாதங்களுக்கு மட்டுமே செயல்பட வாய்ப்பு உள்ளது. எனவே, விருத்தாச்சலம் கூட்டுறவு விற்பனைச்



1997 அக்டோபர் 17]

சங்கத்தின் விவகார எல்லையில் கம்மாபுரம் ஒன்றியம் இருப்பதால், தனியாக அங்கு ஒரு கொள்முதல் நிலையமோ, ஒழுங்குமுறை விற்பனைக் கூடமோ, அமைக்கத் தேவையில்லை என்று தற்போது அரசு கருதுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விருத்தாச்சலம் பற்றியா கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) என்ன கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, கேளுங்கள், திரு. டி. மணி.

**திரு. டி. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டை என்பது நம்முடைய மாநிலத்தில் பற்றாக்குறையாக இருக்கிறது. முந்திரிக் காடுகள் மூலமாகவும் நம்முடைய அரசுத் தோட்டங்கள் மூலமாகவும், தனியார் மூலமாகவும் எவ்வளவு முந்திரி உற்பத்தி செய்யப்படுகின்றது? இதை விற்பனை செய்கின்றபோது, நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற முந்திரி ஆலைகளுக்கு, இது விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் 76,452 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்படுகிறது. இதில் கடலூர் மாவட்டத்தில் மட்டும் 22,683 ஹெக்டேர் முந்திரி பயிரிடப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் 3,116 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்படுகிறது. ஆகவே, இப்படி பயிரிடப்படுகிற முந்திரியில் மொத்த உற்பத்தி 30,930 மெட்ரிக் டன் என்று எனக்கு இங்கே தகவல் தரப்பட்டு இருக்கிறது. இந்த விற்பனையிலே பெரிய சிரமம் எதுவும் இருப்பதாக அரசுக்கு இதுவரை புகார் வரவில்லை. ஆகவே, தனியார் இதைக் கொள்முதல் செய்து, ஏற்றுமதிகூட செய்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**69—**

### தளி தொகுதியில் அணைகள் கட்டுதல்

***4916—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 17

தளி தொகுதி, தளி ஒன்றியம், அஞ்செட்டி அருகில் தொட்ட அல்லி ஆற்றுக்கு குறுக்கே தொட்ட அல்லி அணை, மேல்சின்னார் ஆற்றுக்கு குறுக்கே கொரட்டகிரி கிராமத்துக்கு அருகில் மேல்சின்னார் அணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு.துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொட்ட அல்லி ஆறு காவிரி ஆற்றின் உபநதியாகும். இதனால், காவிரி நதி நீர் பங்கீடு தாவா முடிவு செய்த பின்னர் இத்திட்டத்தின் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும். சின்னாறு நீர்த் தேக்கத் திட்டம் இலாபகரமானதாக இல்லை எனக் கருதி கைவிடப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**70—**

### ஐந்தருவி நீரைத் தேக்க நீர்த்தேக்கம் ஏற்படுத்துதல்

***6319—திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐந்தருவியில் வீணாகும் நீரைத் தேக்கி வைக்க ஒரு நீர்த்தேக்கம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஐந்தருவி மற்றும் அதன் வலப்புறத்தில் உள்ள வேறொரு காட்டாறு ஆகிய இரண்டு ஆறுகளின் குறுக்கே இரண்டு சிறு நீர்த் தேக்கங்களை அமைத்துத் தென்காசி வட்டத்தின் சில கிராம நிலங்கள் பயன்பெறும் வகையில் ரூ. 343.00 லட்சங்களுக்கு ஒரு சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம சாத்தியமிருப்பின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் 2 சிறிய நீர்த் தேக்கங்களை



1997 அக்டோபர் 17]

ஏற்படுத்துவதற்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு கொள்ளளவிலே அந்த நீர்த் தேக்கங்களை ஏற்படுத்த அரசு ஆய்வு செய்துள்ளது? எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்? எத்தனை கிராமங்கள் இதனால் பயன்பெறும்? எவ்வளவு உணவு உற்பத்தி இதனால் கூடுதலாகக் கிடைக்கும்? அந்தத் திட்டத்தை வருகின்ற நிதியாண்டிலே செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சாத்தியக்கூறு அறிக்கை என்றுதான் சொன்னேன். முதலிலே ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்கிறபோது அந்தத் திட்டம் சாத்தியப்படுமா என்று ஆய்வார்கள். அதற்குப் பின்னர் அதை முன்னோடித் திட்டமாக எடுத்துக் கொள்ளலாமா என்று பார்ப்பார்கள். பிறகு விரிவான அறிக்கை தயாரிப்பார்கள். இது பல கட்டங்களைக் கடந்து வரவேண்டும். இதை இரண்டு திட்டங்களாக எடுக்க வேண்டும். ஏற்கெனவே ஐந்தருவியில் 3, 4 அணைக்கட்டுகள் இருக்கின்றன. மேல, கீழ செம்பலபுலியில் ஒரு அணைக்கட்டு இருக்கிறது. பாலமடை அணைக்கட்டு, பெரணமல்லூரில் இருக்கிற அணைக்கட்டு, இலஞ்சி அணைக்கட்டு என்று சிறிய சிறிய அணைக்கட்டுகள் இருக்கின்றன அந்த அணைக்கட்டுகளில் இரண்டு காட்டாறுகளையும் சேர்த்து 220 எம்.சி.டி. கட்டலாம். இரண்டு அணைக்கட்டுகள் கட்டி அதன்மூலம் 380 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியை உறுதிப்படுத்தவும், 20 ஏக்கர்களுக்கு 'Gap-ஐ fill up' பண்ணுவதற்கும் அது பயன்படுமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோமே தவிர, இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி சட்டமன்றத் தொகுதியில், ஐந்தருவி, செண்பகாதேவி அருவி, புலியருவி, தேனருவி, பழைய குற்றால அருவி போன்ற பல்வேறு நீர்வீழ்ச்சிகளும், ஜம்பு நதி, காட்டாறு போன்ற பல்வேறு நதிகளும் இருந்தும்கூட, அங்கே குண்டாறு நீர்த்தேக்கம் என்ற ஒரு சிறிய குளம் போன்ற நீர்த்தேக்கத்தைத் தவிர எந்தவிதமான பெரிய அணைக்கட்டுத் திட்டங்களும் கிடையாது. இதனால் மழைக்காலங்களில் பெய்கின்ற மழை உருண்டோடிச் சென்று விடுவதால், கோடைக்காலங்களில் அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர் குறைந்து, கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. ஆகவே பாசனத்திற்கு உறுதிசெய்கின்ற வகையில் அங்கே ஜம்பு நதித் திட்டம், அழுதகண்ணி ஆறுத் திட்டம்,

ஐந்தருவித் திட்டம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஆகவே அந்தத் திட்டங்களை வருகின்ற நிதியாண்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இவை சிற்றாறினுடைய உப நதிகளாகும். ஏற்கெனவே கருப்பா நதியிலே ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டு. வறட்டாறு, அனுமா நதியிலிருந்து தென்காசிக்கு மேலே சிற்றாறிலே கலக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல ஐந்தருவியும், அழுதகண்ணியாறும், சிற்றாறும்—ஐந்தருவியில் இந்தக் கரையிலே அணை கட்டவில்லை — குண்டாறிலே அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் கீழே வந்தால் ஜம்பு நதியின் கிளை நதிகளாக இருக்கிற ராமநதியில் அணை கட்டப்பட்டிருக்கிறது. பிறகு கடானா நதியிலே கட்டப்பட்டிருக்கிறது. ஆகையினாலே 22,000 ஏக்கர்களுக்கு சிற்றாறிலேயிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் தரப்பட வேண்டும். 17 அணைக்கட்டுகள் இருக்கின்றன என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் ஆங்காங்கே இருக்கிற சிறிய சிறிய விவசாயிகளும் பயன்பெறுகிற வகையில் 'stabilisation' என்பார்களே—அந்த நிலங்களுக்கு உறுதிப்பாடு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். முழுக்க மறுக்கவில்லை. இந்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளப்படுமா என்று கேட்கிறார்கள். பொதுவாக சிற்றாறில் இருக்கின்ற அவ்வளவு அணைக்கட்டுகளையும் சீர்படுத்துவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு ரூ. 4.15 கோடியை சிற்றாறினுடைய அபிவிருத்தித் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். டெண்டரும் விடப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் சிற்றாறு வழியாக இந்தத் தண்ணீர் செல்கிறது என்று குறிப்பிட்டார்கள். சிற்றாறினுடைய கடைசிப் பகுதி' கங்கை கொண்டானாகும். இந்த கங்கைகொண்டான் குளத்திற்கு கடந்த காலத்தில் மழை அதிகமாக இருந்த நேரத்தில் சிற்றாறு வழியாக



தண்ணீர் சென்று கொண்டிருந்தது. ஆனால், இப்போது அந்தத் தண்ணீர் செல்லாத நிலையில், கங்கைகொண்டான் பகுதியிலே வாழக்கூடிய விவசாயிகள் எல்லாம் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். மேலும், கங்கைகொண்டான் குளம் நிரம்பியபின் அதனுடைய மறுகால் வழியாக என்னுடைய பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய சீவலப்பேரிக்கு அந்தத் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. ஆனால், இப்போது அந்தத் தண்ணீர் வராமல் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு இருக்கக்கூடிய நம்முடைய அரசு, கடந்த காலத்தில் விவசாயம் செய்து கொண்டு இருந்த மக்களுடைய குறையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, தாமிரபரணியினுடைய உபநதி சிற்றாறு. சிற்றாறில் 17 அணைக்கட்டுகள், 19 கால்வாய்கள் இருக்கின்றன. அவை, தலையணை, அரிவெட்டாம்பாறை அணை, வல்லினன்குடி அணை, புளியூரணை, பாலூரணை, திருச்சிற்றம்பலம் அணை, மாரந்தை அணை, வீரன் அணை, மானூர் அணை, வெட்டூர் அணை, பள்ளிகொண்டான் அணை, உக்கிரன்கோட்டன் அணை, அழகியபெருமாள் அணை, பிள்ளைகொண்டான் அணை, செழியன்பறை அணை, பிராஞ்சேரி அணை, அதற்குப் பிறகுதான் அவர் சொன்ன கங்கைகொண்டான் அணை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 17 அணைக்கட்டுகளும், 19 கால்வாய்களும் அதில் இருக்கின்றன. இவற்றில் தண்ணீர் கடைசியாகப் போய் சீவலப்பேரி என்ற இடத்தில் தாமிரபரணியிலே கலக்க வேண்டும். ஆனால், தண்ணீர் இதுவரையிலே கங்கைகொண்டானுக்குப் போகவில்லை என்று சொன்னால் மிகப் பெரிய பிரச்சினை. மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் இங்கு இல்லை. அவர் இருந்திருந்தால் அவரும் இக்கேள்வியைக் கேட்டிருப்பார். ஏனெனில் அது அவருடைய தொகுதி, எனவே, இந்தக் குறையைப் போக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போல— இந்த 17 அணைக்கட்டுகளையும், 19 கால்வாய்களையும் சீரமைத்து கடைமடைப்பகுதிக்கு நீர் வருவதற்காக 4 கோடியே 15 லட்சம் ரூபாயை ஒதுக்கி—ஒதுக்கியது மட்டுமல்லாமல்

[1997 அக்டோபர் 17

- டெண்டரும் விடப்பட்டிருக்கிறது. விரைவில் பணி நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதிக்குத் தண்ணீர் வருகிற காரியத்தை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனப்பாடமாக சொல்லிக் கொண்டிருந்ததை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் சீசன் என்று சொல்லக்கூடிய அந்தச் சாரல் விழும் பருவநிலை ஒரே சீராக இருப்பதில்லை. சில நாட்கள் அதிகமான மழை பெய்து அருவிகளில் தண்ணீர் அதிகமாகக் கொட்டுவதால் பயணிகள் குளிக்க முடியாமல் போய் விடுகிறது. பல நாட்கள் மழைத் தண்ணீர் குறைந்து விடுவதால் அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு அணையிலும் ரெகுலேட்டர் என்ற அளவிலே சிறிய, சிறிய அணைக்கட்டுகளைக் கட்டிவிடுவோமேயானால், அந்த 3 மாத காலமும் ஒரே அளவிலே தண்ணீர் விழக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்ற காரணத்தினால் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரோடு இணைந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மேலே செண்பக அருவியிலிருந்து தண்ணீர் குதித்து கீழே வந்து விழுகிறது. மேலே அணைகட்ட முடியாது. பொதுவாக, வருகிற நீரை வாய்க்காலுக்கு அனுப்புகிற வேலைதான் என்னுடைய வேலை. அதைப் பிடித்து வைத்து உல்லாசப் பயணிகளுக்கு அனுப்புகிற வேலை இன்னொரு அமைச்சருடைய வேலை. அந்தக் கேள்வி வரும்போது இதைக் கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**71—**

**அறநிலைய ஊழியர்களுக்குக் கூடுதல் சம்பளம்**

*930—**திரு சி. வேலாயுதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 17]

தமிழ்நாட்டிலுள்ள அறநிலைய ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பள விகிதம் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள விகிதத்தில் சம்பளம் வழங்க இயலாது. இருப்பினும், திருக்கோயில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் அது தொடர்பான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ய 4 பேரைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை 6 மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் திருக்கோயில் பணியாளர் ஊதியம் குறித்து முடிவு செய்யப்படும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை என்கிற ஒரே துறையின்கீழ் இருக்கக்கூடிய அறநிலையத் துறை ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் சம்பளம் வெவ்வேறு விதமாக இருக்கிறது. அவை அனைத்தையும் மாநில அளவில் ஒரே சீராக ஆக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின்கீழ் 37,000 கோயில்கள் இருக்கின்றன. பெரிய அளவிலே, 10 கோடி ரூபாய்க்கும் மேல் வருமானம் உள்ள கோயிலும் இருக்கிறது. அறவே வருமானம் இல்லாத கோயில்கள் பல ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. எனவே, திருக்கோயில் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றபோதே, அந்தக் கோயிலின் வருமானத்திலிருந்துதான் அவர்களுக்கு ஊதியம் தரப்படுகிறது என்ற நிலையில் வெவ்வேறு விதமான ஊதிய வேறுபாடுகள் இருப்பதைத் தவிர்க்க முடியாது. எனவே, அந்த அடிப்படையில்தான் ஊதியத்தை வரையறுக்க முடியுமேதவிர, பெரிய கோயிலுக்கு ஒருவகையான ஊதியத்தைக் கொடுக்கிற அதே வகையில் வருமானமே இல்லாத கோயிலுக்கு ஊதியம் கொடுக்க இயலாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆலயம் சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால் இதை நான் கேட்க விரும்புகிறேன். ஆலய வழிபாடுகளை தமிழிலே செய்ய வேண்டும் என்பதிலே யாருக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. அப்படி தமிழிலே வழிபாடு செய்கின்ற தோத்திரங்கள் அல்லது வழிபாட்டு....

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் துணை வினாவா? நீங்கள் ஊதியத்தைப் பற்றி மாத்திரம் பேசுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். வழிபாடுகளைத் தோற்றுவிக்கும்போது அல்லது இயற்றும்போது கோட்பாடுகளுக்கு உட்பட்டு இயற்றப்பட வேண்டும் என்பது நம்முடைய கருத்தாகும். மைலாப்பூர் கோயிலிலே சர்ச்சைக்குள்ளான அந்தத் தோத்திரப் பாடல் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். இருந்தாலும் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாவண்ணம் அரசு பார்த்துக் கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாங்கள் அதைத் தெளிவுபடுத்தி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த நிலையிலும் இதை ஏற்றுக் கொள்வதில்லை. காரணம் ஒரு தெய்வத்தின்மீது வழிபாடு ஏற்படுகிறபோது தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறபோது அந்தத் தெய்வம் குறித்த வழிபாட்டு வரிகள் மட்டும்தான் வரவேண்டுமென்று அரசு வரையறுத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சிவனே பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களில் விளங்குகின்றபோது, மொத்தமாக லட்சார்ச்சனை என்று வருகின்றபோது முழுமையாக தேவாரம் போன்ற நூல்களிலிருந்து, திருவாசகம் போன்ற நூல்களிலிருந்துதான் வாக்கியங்கள் தொகுக்கப்படுகின்றன. அதற்குமேல் கபாலீஸ்வரர் என்று சொன்னால் கபாலீஸ்வரருக்கு என்று தனிச்சிறப்புகள் குறித்து 10, 20 வரிகள் வரலாம். அதேபோல பசுபதி ஈஸ்வரர் என்று சொன்னால் அதற்குத் தனியாக 10 வரிகள் வரலாமே தவிர வேறு எந்த வகையிலும் வேறு





எதுவும் இடைப்பிறவரலாக வரக்கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய கோட்பாடு. எனவே கபாலீஸ்வரர் கோயிலில் இதுபோன்ற நிலை நேர்ந்தது என்று எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த உடனேயே நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை அந்தச் செய்தியை வெளியிட்ட இதழும் பாராட்டியிருக்கிறது. இன்றைக்கு துக்ளக் இதழும் பாராட்டியிருக்கிறது என்பதை உறுப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த நிலையிலும் இதை விரும்புவதில்லை; உடன்படுவதில்லை. கோயில் கோயிலாக இருக்கவேண்டும். எந்தவிதமான இடைச்செருகல்களுக்கும் இடம் இருக்கக்கூடாது என்ற விருப்பத்தின் அடிப்படையில் இந்த அரசு முழுக்க அதைக் கண்காணிக்கும், இதையே அறிவிப்பாக வைத்துக் கொண்டு அந்தப் பாடல்களை எழுதுகின்றவர்கள் மிகுந்த கவனத்தோடு எழுதவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. கே. மணிவர்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**72—**

**நியாயவிலைக் கடையை இரண்டாகப் பிரித்தல்.**

***3617—திரு. கே. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு நகரத்தில் 1500 குடும்ப அட்டைகள் கொண்ட இடத்தில் உள்ள ஒரே கடையை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், தண்டராம்பட்டு நகரத்தில் கூட்டுறவு நியாய விலைக் கடையிலுள்ள 1300 குடும்ப அட்டைகளில் 500 குடும்ப அட்டைகளைத் தனியே பிரித்து ஒரு புதிய முழுநேரக் கூட்டுறவு நியாயவிலைக் கடை திறக்க திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரால் 23-5-1997 அன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1997 அக்டோபர் 17

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தண்டராம்பட்டு கூட்டுறவுக் கடையை இரண்டாகப் பிரித்துத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தண்டராம்பட்டு கூட்டுறவுக் கடையை இரண்டாகப் பிரித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவு வழங்கி 4, 5 மாதங்கள் ஆகின்றன. இன்றுவரை அதைத் திறக்காமல் இருக்கிறார்கள். திறப்பதற்குண்டான உத்தரவை அவர்களுக்கு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு நாராயணகுப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட மலமஞ்சலூர் பகுதிநேரக் கடையை சட்டமன்ற உறுப்பினரை அழைக்காமலேயே அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கித் தலைவர் அவர்கள் திறந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் துணையாக இருந்த அந்தச் செயலாளர்மீது நடவடிக்கை எடுக்க உத்தரவை வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கடைகளை ஆங்காங்கு இருக்கின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அந்தக் கடையை லாப நோக்கத்தோடு கருதாமல் சமுதாயத்திலே உள்ள ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற வகையிலே - கூட்டுறவுச் சங்கங்களுக்கான நிதியாதாரத்தை குறைக்கின்ற அளவில் இல்லாது - இலவசமாக கடை வழங்குவதை முதன்மையாகக் கொண்டு அங்கே - கடையைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார். உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரியை அழைத்துப் பேசி உடனே கடையைத் திறக்க ஏற்பாடு செய்யப்படும். ஆனால் நாங்கள் கூட்டுறவுத் துறைக்கு சொல்லியிருப்பது, சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துதான் புதிய கடை திறக்கப்பட வேண்டும் என்று அத்தனை அதிகாரிகளுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 11,000-க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலே பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே ஒருசில தலைவர்கள் வேண்டும் என்றே இதுபோன்ற செயல்களைச் செய்வதாகப் பல்வேறு இடங்களிலிருந்து எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. உரிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, புதிய கடைகள் திறந்தாலும், பழைய பகுதிநேர கடையாகத் திறந்தாலும் சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையிலே திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 அக்டோபர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாக பல சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள் தொகுதியிலே நடக்கின்ற அரசு நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்களில் தங்கள் பெயர்களைப் போடுவதில்லை என்று புகார் சொல்கிறார்கள். இன்றுகூட மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கின்றார். ஆகவே, தெளிவாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல எல்லா அரசு நிகழ்ச்சிகளிலும் அந்தந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பெயரைக் கட்டாயமாகப் போட வேண்டும் என்பதை வலியுறுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

வினா எண் 73. திரு. டி. மணி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**73—**

**கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.**

***6389—திரு. டி. மணி:**

மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இலாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், 1995-96 ஆம் ஆண்டு எவ்வளவு?

(இ) இல்லை எனில், அதற்குக் காரணம் என்ன?

(ஈ) அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) 1995-96-ஆம் ஆண்டில் ரூ. 62.07 இலட்சம் திரண்ட நட்டத்தில் இயங்கியது.

(இ) தவணை தவறிய கடன் வசூலாகாமல் உள்ள கடன்களில் அசல் தொகைக்கு தணிக்கையில் வராக்கடன் நிதி ஒதுக்கியுள்ளதாலும்

[1997 அக்டோபர் 17

வர வேண்டிய வட்டி பாக்கி வசூலாகாமல் தவணை தவறிய பாக்கியாக இருந்தபடியால் அதற்கும் ஒதுக்கீடு செய்ததாலும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஈ) தவணை தவறிய கடன் மற்றும் வராக் கடன்களை வசூல் செய்து கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினை இலாபத்தில் இயக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே கடந்த 6, 7 வருடங்களாக இருந்து வந்த அதிகாரிகளுடைய தவறான செயல்களின் காரணமாகத்தான் அது நட்டத்தில் செயல்படுவதாக வங்கி ஊழியர்கள் மீது புகார் தந்து இருக்கிறார்கள். எனவே, அவர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது ஒன்று. இன்னும் ஒன்று, லாபகரமாக நடத்துவதற்கு கொடுத்த கடனை திரும்ப வசூல் செய்வதில் சில சுணக்கம் ஏற்படுகிறது. அதைத் தவிர்த்து தீவிரமாக அந்த பாக்கிகளை வசூல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் 3-வது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டபோது அதுவரையில் அந்த வங்கி லாபத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. 1990-91 ஆம் ஆண்டு 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் லாபத்தில் இயங்கி வந்த அந்த வங்கி, 1992-93-ஆம் ஆண்டு 6 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் நட்டம், 1994-95-ஆம் ஆண்டு 59¾ லட்சம் ரூபாய் நட்டம், 1995-96-ஆம் ஆண்டு மறுபடியும் 3 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் நட்டம். ஆக மொத்தம் வராக் கடன், தவணை தவறிய கடன் என்று சுமார் 62.07 லட்ச ரூபாய் அளவுக்கு இன்றைக்கு நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதிலே கடந்த காலத்தில் தவறாக நடந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் எல்லாம் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கடன்களை வசூல் செய்வதற்கு முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதிலே மாவட்ட நீதிமன்றத்தில் 21 வழக்குகளும், உயர்நீதிமன்றத்தில் 4 வழக்குகளும் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகளை முடிப்பதற்கு



1997 அக்டோபர் 17]

முழு முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இதிலே கடந்த காலத்திலிருந்த அரசு அதை சரியான முறையில் நிர்வகிக்காததால்தான் இந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதை இன்றைக்கு மாண்புமிகு கலைஞர் அரசு சரியான முறையில் நிர்வகிக்க முழு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் மெதுகும்மல் என்ற இடத்தில் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பணியாற்றிய அதிகாரிகள், செயலாளர்கள் தோழர்கள் மிகத் தவறாக நடந்து, கிட்டத்தட்ட 91.30 இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்தனை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் இன்றைக்கு மக்கள் அதன்மீது நம்பிக்கை வைத்து, மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு கடந்த காலத்தை விட இப்போது 15 மாத காலத்தில், ஆயிரம் கோடி ரூபாயை அதிகமாக வைப்பு நிதியாக இன்றைக்கு சேகரித்து இருக்கிறார்கள். பழைய காலத்தில் நடைபெற்ற தவறுகளைக் களைய நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். இந்த வங்கிகளின்மீது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக பல்வேறு புதிய முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெதுகும்மல் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நடந்த முறைகேடுகள் காரணமாக சஸ்பெண்டு செய்த அந்த அதிகாரிகள்மீது 6 மாத காலத்திற்குள்ளாக நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் 6 மாத காலம் ஆகியும் சஸ்பெண்டு செய்த அதிகாரிகள்மீது-நடவடிக்கை எடுக்காததன் விளைவாக இன்றைக்கு அவர்கள் அரசுக்கு எதிராக டிரிபியூனலுக்குப் போய் அரசு பல இலட்ச ரூபாய் தங்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். எனவே, இந்த 6 மாதத்திற்குள்ளாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் செய்தது சரியா தப்பா என்று தீர்மானிக்க வேண்டிய ஒரு கட்டத்திலே இருக்கின்ற அந்த வகையிலே, நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 17

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே நடைபெற்ற தவறுகளுக்காக இடைநீக்கம் செய்து இருக்கிறோம். முழுமையாக அனைத்தும் களைய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. சி. கோபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**74—**

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை பிரித்தல்**

***8571—திரு. சி. கோபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பிரித்து தனித்தனிச் சங்கங்களாக அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பிரித்து தனித்தனி சங்கங்களாக அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒடுக்கத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் சுமார் 3500 உறுப்பினர்களைக் கொண்ட பெரிய சங்கமாகும். அதுமட்டுமல்லாமல், குருராஜபாளையம், முப்பம்பட்டு, நடுநிப்பாளையம் போன்ற ஊராட்சிகள் மானூர் ஒன்றியத்தைச் சேர்ந்ததாகவும், ஒடுக்கத்தூர் பேரூராட்சி, சேர்பாடி ஊராட்சி அணைக்கட்டு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகவும், இரண்டு ஒன்றியங்களுக்கும் சேர்ந்து ஒரே பால் கூட்டுறவுச் சங்கமாக இருந்து இயங்கி வருவதால் அதை நிர்வகிக்கிறபொழுது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து குருராஜபாளையத்திலே ஒரு சங்கமாகவும், ஒடுக்கத்தூர் பேரூராட்சியிலே ஒரு சங்கமாகவும் அமைத்துத் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1997 அக்டோபர் 17]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 9 கிராமங்களை எல்லையாகக் கொண்டு, 297 கறவை மாடுகளைக் கொண்டு, நாளொன்றுக்கு சராசரியாக 1100 லிட்டர் பால் கொள்முதல் செய்து இயங்கி வருகிறது. இச்சங்கங்களில் 27 பணியாளர்கள் பணி புரிகிறார்கள். தற்போது ஒடுக்கத்தூரில் மட்டும் நாளொன்றுக்கு 110 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தியாகிறது. இந்நிலையில் தனித்தனியாக சங்கங்களைப் பிரித்தால், பிரிக்கப்படும் சங்கங்கள் நலிவடைவதுடன், தாய்ச் சங்கமும் நலிவடைந்து விடும். இதனால் சங்கப் பணியாளர்கள் பாதிப்பு அடைவார்கள். சங்கத்தின் உறுப்பினர்களுடைய நலனும் பாதிக்கப்படும். ஆகவே, அதைப் பிரித்து, தனித்தனியாகச் சங்கம் அமைத்திட வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. ஏ.எம். ராமசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**75—**

**தொழிற்பயிற்சி பள்ளி ஏற்படுத்துதல்**

***7692—திரு. ஏ.எம். ராமசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் வட்டத்தில் தொழிற்பயிற்சிப் பள்ளி ஒன்று ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1997 ஆகஸ்ட் முதல் தொழிற் பயிற்சி மையம் துவங்க தனியார் மூவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, இருந்தாலும் அரசுத் தரப்பில் இந்தத் தொழிற்பயிற்சி மையத்தை அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 17

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூர் ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில் சாரதா மெமோரியல் தொழிற்பயிற்சி நிலையம், புஷ்பம் அம்மாள் தொழிற் பயிற்சி நிலையம், கார்த்திக் தொழிற் பயிற்சி நிலையம் ஆகிய 3 பயிற்சி நிலையங்களுக்குத் தற்காலிக அனுமதி ஐ.டி.ஐ. துவக்குவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அடுத்த ஸ்டான்டிங் கமிட்டியும், அதைப் போலவே வேறு எக்ஸ்பர்ட் கமிட்டியும் இணைந்து பார்த்து அதிலே தேவையான முறைகள் 'நார்ம்ஸ்' முறைகள்படி இருக்கிறதா என்று ஆய்ந்து இறுதியாக அங்கீகாரம் கொடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**76—**

**தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகத்தில் கூடுதல் வசதிகள்**

***8352—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளில் விபத்துக்களினால் காயமுறும் தொழிலாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க அம்பத்தூர் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகத்தில் தேவையான வசதிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அயன்புரத்தில் 616 படுக்கை வசதி கொண்ட தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை உள்ளதாலும், மிக அருகில் அண்ணா நகரில் அரசு புறநகர் மருத்துவமனையில், அவசர சிகிச்சை அளிக்கத்தக்க வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாலும் அவசர சிகிச்சைக்கென, அம்பத்தூர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையில் தனியே வசதிகள் செய்ய இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. உ. திசை வீரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 17]

**77—**

**கூட்டுறவு நூற்பாலைக் கதிர்களை அதிகரித்தல்**

***7829—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலையில் 12500 கதிர்களை 25000 கதிர்களாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்திலே இயங்குகின்ற இந்தக் கூட்டுறவு நூற்பாலை 1985-லே ஆதிதிராவிடருடைய மேம்பாட்டிற்காக ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு சோதனைகளைத் தாண்டி, ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே சாதனை படைத்து, 3 மாதங்களாக இலாபகரமாக இயங்கி வருகிறது. இந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே முழுக்க முழுக்க ஆதிதிராவிடர்கள் 320 பேர் வேலை பார்க்கின்றனர். ஆகவே, இன்னும் 12500 கதிர்களைக் கூடுதலாக சேர்த்து இயக்கினால், இன்னும் 320 ஆதிதிராவிட இளைஞர்களுடைய வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 100-க்கு 100 சதவீதம் ஆதிதிராவிடர்கள் பணிபுரிகிறார்கள் என்பது உண்மை. தற்போது 3 மாதங்களாக இலாபகரமாக நடந்து வருவதும் உண்மை. ஆனால் ஏற்கெனவே ஏற்பட்ட நஷ்டத்தின் அடிப்படையில் இன்று அதனுடைய நஷ்டம் ஏறத்தாழ 5 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவிலே இருக்கிறது. இதை 25000 கதிர்களாக மீண்டும் நாம் விரிவாக்கம் செய்தால் மீண்டும் 12 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, நிச்சயம் எதிர்காலத்திலே விரிவாக்கம் செய்கின்ற அளவிற்குத் திட்டம் இருக்கிறது என்றும், இதையே முறையாக ஓட்டினால் இந்த நஷ்டத்தை, சுமையை இன்னும் குறைத்தால், அதுவே ஆலைக்கு நலம் பயக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 அக்டோபர் 17

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**78—**

**திருப்பத்தூரில் சலவைத் துறை அமைத்தல்**

***8586—திரு கோ. சண்முகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் சலவைத் துறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் சலவைத் துறை கட்டும் முன்மொழிவுகள் ஏதும் இல்லை.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரத்திலே 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். முன்பு கலைஞர் ஆட்சியிலே, ஜமுனாமருதூர், நாட்ராம்பள்ளி பகுதிகளிலே சலவைத்துறை கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நகரத்திலே இன்னும் கட்டிக் கொடுக்கவில்லை. இரண்டாவதாக, அவர்களுக்குக் கருவிகள் எதுவும் தரவில்லை. இதையெல்லாம் செய்வதற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சலவைத்துறை கட்ட தேர்வு செய்யப்படும் இடத்தில் தேவையான தண்ணீர் வசதி இருந்தும், உள்ளாட்சி அமைப்பு 20 சதவீத பங்குத் தொகையை செலவிடுவதற்கும், பயனாளிகள் பங்குத் தொகையான 5 சதவீதம் செலுத்துவதற்கும், சலவைத்துறையைப் பயன்படுத்துவதற்கான உறுதிமொழி ஆகியவற்றுடன், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து சலவைத்துறை கட்ட முன்மொழிவு வந்தால் அந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 அக்டோபர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**79—**

**கால்நடை நோய்த் தடுப்பு ஊசிகள் இலவசமாக வழங்குதல்**

***8313—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு ஊசிகள் ஆடுகளுக்கும், மாடுகளுக்கும், கோழிகளுக்கும் இலவசமாகப் போட, உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு ஊசிகள், கால் மற்றும் வாய் (foot and mouth) நோய்த் தடுப்பூசி தவிர அனைத்து தடுப்பூசிகளும், ஆடுகளுக்கும், மாடுகளுக்கும், கோழிகளுக்கும் இலவசமாகப் போடப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்காக ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தியது நம்முடைய அரசு. இன்னும் கிராமங்களில் பல்வேறு நோய் சம்பந்தமாக கொண்டு செல்லக்கூடிய கால்நடைகளுக்கு சினை ஊசி, தடுப்பூசி இலவசமாகப் போடப்படுவதில்லை என்று விவசாய பெருமக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இலவசமாக, முழுமையாகச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்தக நிலையத்தில், கால் மற்றும் வாய் நோய்த் தடுப்பூசி மருந்து தவிர, அனைத்து தடுப்பூசி மருந்துகளும் நல்லமுறையில் தயாரிக்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. 1996-97-லே மட்டும் சப்பை நோய், தொண்டை அடைப்பான், வெக்கை நோய், கோழி கழிதல் போன்ற நோய்களுக்காக 2,58,40,496 கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும், 1997-98-ல் 65,11,809 கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் இலவசமாக

[1997 அக்டோபர் 17

மருந்துகள் தரப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில் கால் மற்றும் வாய் நோய்த் தடுப்பூசி Indian Immunalogical Institute போன்ற வெளி நிறுவனங்களிடமிருந்து வாங்குவதால் அதை நாம் இலவசமாகப் போடுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடையைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டுகளில் இலவச மருந்துகளுக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததை, கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 50 விழுக்காடு ஒவ்வொன்றுக்கும் உயர்த்தி, 7½ கோடி ரூபாய் அளவிற்கு மருந்துகள் இலவசமாக வழங்குவதற்காக இந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திரு. கொ.வி. நன்னன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**80—**

## 'ஆயத்த ஆடை' தொழிற் கூடம் அமைத்தல்

***10865—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத் துறையின் சார்பில் செங்கம் தொகுதியில் 'ஆயத்த ஆடை' தொழிற் கூடம் அமைத்து பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சமூக நலத் துறையின் சார்பில் செங்கம் தொகுதியில் 'ஆயத்த ஆடை' தொழிற்கூடம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தையல் என்றாலே பெண்கள்தான். பெண் இனமே தையல் இனமாகும். தையல் தொழில் மூலம் தையலர் பொருள் ஈட்ட, வறுமை விரட்டி வாழ்க்கையை நடத்த, பெண் இன முன்னேற்றத்திற்காக, பெண் இன விடுதலைக்காகப் பாடுபடும் இந்த அரசு, செங்கம் தொகுதியில், சமூக



V211, 51'N97
N97-38.2

1997 அக்டோபர் 17]

நலத் துறையின் சார்பில் அரிவையர் உழைப்பில் ஆயத்த ஆடை தொழிற்கூடம் அமைத்து பெண் இன மேம்பாட்டிற்காக, வேலைவாய்ப்பு வழங்க, வளம்பெறச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு தையலர் என்ற பெயர் ஒன்று உண்டு. மேலும் பல பெயர்களும் உண்டு. அரிவையர், பாவையர் என்ற பெயர்களும் உண்டு. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தையலர் என்ற அந்த ஒரு சொல்லைப் பயன்படுத்தி, தையற் தொழிலிலே பெண்கள் பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடைவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என்று வினா எழுப்பியிருக்கிறார்கள். தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலையில் ஒன்றும், வந்தவாசியில் ஒன்றும் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் இரண்டு தையற் தொழில் சங்கங்கள், இயங்கி வருகின்றன. தையல் தெரிந்த மகளிர் இதில் உறுப்பினராகி வேலைவாய்ப்பு பெறலாம். மேலும், அம்மாவட்டத்தில் இரண்டு தையற் பயிற்சி நிலையங்கள், திருவண்ணாமலையில் ஒன்றும், ஜமுனாமருதூரில் மற்றொன்றும் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மகளிருக்கு தையற் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் ஓர் ஆண்டு ஆகும். பயிற்சியாளர்களுக்கு ஏற்கெனவே 30 ரூபாய் மாதம் ஒன்றுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை 50 ரூபாயாக உயர்த்தித் தர உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அங்கேயிருக்கின்ற தையலர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் ஏற்கெனவே இருக்கிற காரணத்தால், புதியதாக ஆயத்த ஆடை தொழிற் கூடம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

218445

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.ஆர். இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தைந்தாவது முதல் அறுபத்தேழாவது வரையிலான 13 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. அப்துல் லத்தீப், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.எம். விஜயகுமார், குழுவின் தலைவர், இருக்கையில் இல்லை. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் சார்பில் உறுப்பினர் திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தியிரண்டாவது முதல் இருபத்தாறாவது வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.





## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை 1997-98 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-98-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கையைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றிருக்கிறது :

[1997 அக்டோபர் 17

"In pursuance of Article 205, read with clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation for the demands for further grants for the year, 1997-98 being moved in the Tamil Nadu Legislative Assembly".

## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98 மீது பொது விவாதமும், கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-98 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய, 14-10-1997-ஆம் தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1997-98 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

### கோரிக்கை எண் 27 ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 113, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதியைச் சுற்றி குறைகளைக் களைய டாட்டா சுமோ வேன்களை வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,45,24,01,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".



### கோரிக்கை எண் 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 23, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'புதுடெல்லியில் உள்ள தமிழக அரசின் விருந்தினர் மாளிகையில் தங்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்டணம் செலுத்தி பயன்படுத்துவதற்காக மேலும் இரண்டு அரசு கார்கள் வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,90,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 562, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதித் தலைநகரமான பெண்ணாகரத்தில் விவசாய விதை உற்பத்தி மையம் அமைக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,90,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

### கோரிக்கை எண் 11 மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 166, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருப்பூர் துணை மின் நிலையத்திற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தை ஒட்டியுள்ள 0.5 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாற்றித்தரும் அரசு அறிவிப்பை மாவட்ட நிர்வாகம் செயல்படுத்தாமல் உள்ளது குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிர்வாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,82,58,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 15 காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 46, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, காக்காபாளையம் மற்றும் பூலாம்பட்டி காவல் நிலையங்களுக்கு மோட்டார் வாகன வசதி இல்லாததால் அங்கு ஒரு மோட்டார் வாகனம் வழங்க வேண்டியது குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,88,37,000/-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 124, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 160, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, 'மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பரவாக்கோட்டை, தலையாமங்கலம், களப்பாள், பெருகவாழ்ந்தான், வடபாதிமங்கலம், கூத்தாநல்லூர் ஆகிய காவல் நிலையங்களுக்கு புதிதாக ஜீப் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,88,37,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 251, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ல் தேர்வு செய்யப்பட்ட 329 காவலர்களுக்கு இதுவரை பணி வழங்காதது பற்றி விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,88,37,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 337, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் புதிய புறக்காவல் நிலையம் அமைப்பதின் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,88,37,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 374, திரு. வி. திருஞானசம்பந்தம்.

**திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி தொகுதி, பெருமகளூர் புறக்காவல் நிலையம் ஏற்படுத்துவதின் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,88,37,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 458, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் கும்பகோணம் தாலுக்காவில் தேவனாஞ்சேரி ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,88,37,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

## கோரிக்கை எண் 19 மக்கள் நல்வாழ்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 183, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு மற்றும் பறங்கிப்பேட்டை ஆரம்ப சுகாதார மையங்களுக்கு அவசர ஊர்தி

[1997 அக்டோபர் 17

வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,49,00,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 230, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாங்குநேரி தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் வடக்கு விஜயநாராயணத்தில் புதிதாக மருத்துவமனை கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,49,00,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 25 கைத்தறியும் துணித் தொழிலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 164, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருக்குப்பாளையத்தில் ஒருங்கிணைந்த கிராம கைத்தறி வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கைத்தறியும், துணித் தொழிலும் பற்றிய 25-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,57,27,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 48 குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 311, திரு. பி. வெங்கடசாமி.

*THIRU B. VENKATASAMY: Hon. Speaker Sir, to discuss the need to construct overhead tanks in the below mentioned villages where there is water scarcity:—

1. Seekarapalli - B. Kurubarapalli Panchayat



1997 அக்டோபர் 17] [Thiru B. Venkatasamy]

2. Kumudaypalli - Thorapalli Panchayat
3. Samanapalli - Alur Panchayat
4. Nagondapalli - Nagondapalli Panchayat
5. Soothalam - AC Lettipalli Panchayat
6. Gudisandavapalli - Gudisandavapalli Panchayat
7. Kavalatti - Kavalatti panchayat,

I move—

"That the allocation of Rs.10,68,28,000/- under Demand No.48 - Water Supply, be reduced by Re.1".

## கோரிக்கை எண் 57- சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 223, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

Dr. E.S.S. RAMAN : Hon. Speaker, Sir, to discuss 'The need for construction of overbridge across Kusasthalai River in Punniyam Village, Pallipattu,' I move—

"That the allocation of Rs.16,76,22,000/- under Demand No.57 - Capital Outlay on Roads and Bridges, be reduced by Re.1/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 243, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 619, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆற்றுப் பாலத்தை சீரமைக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து ' விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 57-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,76,22,000-இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானமும், மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. பேரவை விதியின்படி இன்று விவாதமும், பதிலுரையும் சரியாக 1-30 மணிக்கு முடிக்கப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் இதை மனதில் கொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, முதலில் பேச இருக்கின்ற ஞானசேகரன். (சிரிப்பு) (குறுக்கீடு)

## 6. பேரவை விதி 110- ன் கீழ் பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை

### வைகை அணையிலிருந்து பெரியாறு பிரதானக் கால்வாய் மூலம் நன்செய் நிலங்களுக்காகத் தண்ணீர் திறந்து விடுதல்

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இந்த அறிவிப்பைச் செய்கிறேன். பெரியாறு வைகைப் பாசனத்தில் வைகை அணையிலிருந்து பெரியாறு பிரதானக் கால்வாயில் பேரணையிலிருந்து கள்ளந்திரி ரெகுலேட்டர் வரையுள்ள இருபோக நன்செய் நிலங்களுக்காக 45,041 ஏக்கர் நிலங்களுக்கு, அதாவது திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் 1,793 ஏக்கர், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்தில் 13,747 ஏக்கர், மதுரை வடக்கு வட்டத்தில் 29,501 ஏக்கர் ஆக மொத்தம் 45,041 ஏக்கர்களுக்கு வழக்கமாக ஆண்டுதோறும் ஜூன் மாதம் 1-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை பெய்யத் தவறியதன் காரணமாக, பெரியாறு வைகை அணைக்கு போதிய தண்ணீர் வந்து சேராத காரணத்தால் ஜூன் மாதம் 1-ஆம் தேதி தண்ணீர் திறந்து விட முடியவில்லை. ஆனால் சம்பத்தில் மழை பெய்திருக்கிற காரணத்தால் வைகை அணையில், இரு அணைகளிலும் சேர்த்து தற்போது 5,800 கன அடி தண்ணீர் வந்துள்ளது. எனவே, இந்த சாகுபடிக்காக 20-10-1997 முதல் கள்ளந்திரி வரையுள்ள ரெகுலேட்டருக்கு இருபோக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் அறிக்கையைப் படிக்கவேண்டுமானால் என்னுடைய அனுமதியைப் பெற்று இங்கே படித்திருக்கவேண்டும். இருந்தாலும் திருப்திகரமான செய்தி என்பதால், அதைத் தவிர்த்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தங்களிடம் தெரிவித்துவிட்டுத் தானே பேசினேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நமக்குள்ளே பிரச்சினை இல்லை. பேரவைத் தலைவருக்கு எழுத்துமூலமாகக் கொடுத்திருக்க வேண்டும். திரு. சி. ஞானசேகரன்.

## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை,1997-98 மீது பொது விவாதமும், கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை இங்கே காணிக்கையாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. எல். சந்தானம்:** அமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், உங்களுக்கு இதில் பேச இன்றைக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது அமைச்சருக்கு நன்றியைச் சொல்லுங்கள். இடையிலே புகுந்து நன்றி சொல்கிறீர்களே? திரு. ஞானசேகரன், பேசுங்கள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்காக ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.25 இலட்சம் வழங்கி எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பை நல்கியிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

ஆனால் அந்த 25 லட்ச ரூபாயை வைத்துக்கொண்டு நாங்கள் போகிற இடங்களில் எல்லாம் எங்களால் எந்தவிதமான பதிலையும் சொல்லமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காகத்தான், நான் வெட்டுத் தீர்மானம் முன்மொழிகிறபோதே, இந்த 25 இலட்சம் ரூபாயை, கருணையையும் நிதியையும் தன்னகத்தே வைத்துக்கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள் ரூ.100 இலட்சமாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள இருந்தேன். ஆகவே அந்த ரூ.100 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு ரூ. 58 கோடியே 75 இலட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். 953 கோடி ரூபாய்க்கு இதுபோன்ற சப்ளிமெண்டரி பட்ஜெட் போடுகிறபோது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சிக்கு என்று இன்னும் தாராளமாகக் கொடுத்தால், நாங்களும் தாராளமாக அதை வரவேற்றிருப்போம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து அதைப் பரிசீலித்து, நிச்சயமாக, உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதல்வர் அவர்கள் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்றும், 'நமக்கு நாமே திட்டம்' என்றும் இரண்டு திட்டங்களை ஒவ்வொரு ஒன்றியத்திலும் கொண்டு வந்திருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு என்று இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் வெறும் 50 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். 'நமக்கு நாமே திட்டத்திற்கு' ரூ. 5 கோடிதான் கொடுத்திருக்கிறீர்கள். இந்த நிதி போதவில்லை. சில நேரங்களில் மத்திய அரசின் திட்டங்களான ஜே.வி.வி.டி. அல்லது ஈ.ஏ.எஸ். போன்ற ஸ்கீம் பணத்தை எல்லாம் டைவர்ட் செய்கிற காரணத்தால் மற்ற ஊர்க்காரர்கள் எங்களிடம் சண்டைக்கு வந்துவிடுகிறார்கள். பொதுவாக ஒன்றியம் பூராவும், தொகுதி பூராவும் போகவேண்டிய இந்தப் பணத்தை, ஒரே ஊருக்குக் கொண்டுபோய்விடுகிறீர்கள். நாங்கள் என்ன இளித்தவாயர்களா என்று மற்ற ஊர்க்காரர்கள் எங்களிடம் சண்டைக்கு வந்துவிடுகிற காரணத்தால், முதல்வர் அவர்கள் 'நமக்கு நாமே திட்டத்திற்கு' ஒதுக்கியிருக்கிற பணத்தை அதிகப்படுத்தவேண்டும். இது நிச்சயமாகப் போதாது. அதேபோல, 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு' 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதுவும் போதாது. ஆகவே இன்னும் அதிகமான பணத்தைக் கொடுக்கவேண்டும். மத்திய அரசின் திட்டங்கள் வாயிலாக வரக்கூடிய பணத்தை மற்ற திட்டங்களுக்கு டைவர்ட் செய்வதைவிட, இதற்கென்று தனி நிதி ஒதுக்கீடு செய்து எல்லா ஒன்றியங்களிலும் இத்திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட தாராளமாக நிதியை வாரி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து புரோட்டக்கால் அமைப்பைப் பொறுத்தவரையில்— அதுபற்றி நான் கூட ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறேன். உடனடி நடவடிக்கை எடுத்ததற்காக நான் முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் — நீலகிரி மாவட்டத்தில், போக்குவரத்துத் துறையினுடைய ஒரு விழாவில்,



நம்முடைய மாண்புமிகு சென்னை மேயர் அவர்களுடைய படத்தைப் போட்டு, விதிமுறைகளுக்கு மாறாக அச்சிட்டிருந்த காரணத்தால், அந்தச் செய்தியைப் பார்த்த முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்த எம்.டி.-யை சஸ்பெண்ட் செய்தார்கள். அதற்காக நிச்சயமாக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, எங்கள் மாவட்டத்தில்கூட நடந்திருக்கிறது. மாவட்டங்களில் இருக்கிற மக்கள் தொடர்பு அலுவலர்கள் தங்கள் இஷ்டத்திற்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சரியான முறையில் மாவட்டத்தில் உள்ள மற்ற அதிகாரிகளுக்கோ, மற்ற தலைவர்களுக்கோ வழிகாட்டுவதில்லை. எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும்கூட, ஒரு அரசு விழாவிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் தலைமை தாங்குவார் என்றே அழைப்பிதழில் போட்டார்கள். (குறுக்கீடு) போன ஆட்சியிலேதான் நாங்கள் பல கொடுமைகளைச் சந்தித்தோம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, எந்த விழாவிற்குப் போட்டார்கள்? மாவட்டச் செயலாளர் என்ற முறையில் அவரைப் போட்டிருக்கமாட்டார்கள். வக்ஃப் வாரிய உறுப்பினர் என்ற முறையில் அவரை அந்த விழாவில் போட்டிருக்கலாம். எடுத்த எடுப்பிலேயே மாவட்டச் செயலாளரைப் போட்டுவிட்டார்கள் என்று சொல்லக்கூடாது. எந்த விழா என்று சொன்னால், விவரமாகச் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருக்கு நான் ஒரு விளக்கத்தைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 'உலக உறைவிட நாள் விழா 1997'. தங்களுடைய தொகுதியில் அண்மையில் நடந்தது. அதில்கூட முதலிலேயே மாவட்டச் செயலாளரைத் தலைவர் என்று போட்டார்கள். அவர் வக்ஃப் வாரிய உறுப்பினராக இருக்கலாம். சட்டமன்ற உறுப்பினர், வக்ஃப் வாரிய உறுப்பினர் என்று அந்த வரிசைப்படி போட்டால் குறை சொல்லமாட்டேன். அதில் நான் எந்தவிதமான குறையையும் சொல்லப் போவதில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழாவிற்குத் தலைவராக யாரைப் போடுவது

என்பது விழா நடத்துபவர்களுடைய விருப்பம். அவர்கள் யாரை வேண்டுமானாலும் போடலாம். உறுப்பினரைத்தான் போடவேண்டுமென்று இல்லை. இன்னும் சொல்லப்போனால், அந்தத் தொகுதி என்னுடைய தொகுதி. நான் அமைச்சராக இருப்பதால், தொகுதி உறுப்பினர் என்ற வகையில் நான் அங்கே இல்லாததால், இங்கே சென்னையில் இருப்பதால். அந்த விழாவிற்கு அவரைப் போட்டு இருக்கலாம். இதில் ஒன்றும் தவறில்லையே ?

*முற்பகல் 10-55*

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நிச்சயமாக அது தவறு என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் உங்கள் தொகுதியிலே நீங்கள் வந்து தலைமை வகித்திருந்தால் நிச்சயமாக, நெஞ்சார ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. என்னுடைய தொகுதியில் நடைபெறுகின்ற விழாவுக்கு யாரை வைத்து விழா நடத்துவது என்பது என்னுடைய உரிமை. அதில் கேள்வி கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமையில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அவருடைய தொகுதியிலே அவர் இருந்து கொண்டாட வேண்டும் அந்த விழாவை. அவர் இல்லாதபோது, மாவட்ட அளவிலே நடைபெறுகின்ற விழா, மாவட்ட விழா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர. அந்த விழா வேலூரிலே நடந்திருக்க வேண்டும். அதுதான் தலைமையிடம். அங்கே கூட்ட மண்டபம் இல்லை என்கின்ற காரணத்தால் அவருடைய தொகுதியிலே . . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாவட்டத்திற்குச் சொந்தமான விழாவை வேலூரில்தான் நடத்த வேண்டுமென்பதில்லை. மாவட்டத்திலே பல தொகுதிகள் உள்ளன. எந்த இடத்திலே நடத்த வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவுசெயது நடத்தலாம். விழா சம்பந்தப்பட்டவர்கள் நடத்தலாம். அந்த மாவட்டத்தின் ஒரு பகுதி என்னுடைய தொகுதி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்



தலைமையைத்தான் சொல்கிறேன். வக்ஃப் போர்டு உறுப்பினர் என்ற அளவிலே அவருடைய பெயரைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அதற்காக தவறான முன்னுதாரணத்தை, உங்களுடைய தொகுதி என்கின்ற காரணத்தினாலே செய்யக்கூடாது. மாவட்டச் செயலாளர் தலைமையேற்பார்கள், சட்டமன்ற உறுப்பினரை அதற்குக் கீழே போடுவார்கள் என்று சொன்னால் அது சரியான மரபாக இருக்க முடியாது என்ற காரணத்தினால்தான் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விதிமுறைகளை நீங்கள் வகுக்க வேண்டும். இதிலே எந்தவொரு வித்தியாசத்தையும் கொண்டாட வேண்டாம். மரபு சரியாக இல்லை என்பதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெயர் போட்டிருக்கின்றது என்பதற்காக வாதாடுகிறார் மாண்புமிகு உறுப்பினர். பல கூட்டங்களுக்கு, பல இடங்களில் போட்டவர்கள் வராமல் இருக்கிறார்களே. அதைப்பற்றி என்ன சொல்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னால் முடிந்த அளவுக்கு எல்லா விழாக்களுக்கும் போய்க் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல மரபை பின்பற்ற வேண்டுமென்றுதான் சொல்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல மரபைப் பின்பற்றி நீலகிரி மாவட்டத்தில் ஒருவரை 'சஸ்பென்டு' செய்திருக்கிறார்கள். அதுபோன்ற நல்ல மரபை உருவாக்க வேண்டும். இதில் எந்தவிதமான வித்தியாசமும் இருக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக கட்சிக் கண்ணோட்டத்தோடு—காரணம் கடந்த ஆட்சியிலே.....

**மாண்புமிகு திரு துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும், இது கட்சி கண்ணோட்டத்தோடு செய்யப்பட்டதல்ல. ஆனால் கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

சகீயைப் பற்றி, எங்கள் மாவட்டச் செயலாளரைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்லிக்கொள்வது இதுதான். அவர் ஒரு வக்ஃப் போர்டு உறுப்பினர். அந்த விழா என்னுடைய தொகுதியிலே நடக்கிறது. அதற்கு அவர் தலைமை தாங்குகிறார். இதிலே என்ன பிரச்சினை? ஒரு காலத்திலே உங்கள் பெயரைப் போடாமலேயே விழா நடத்தினார்கள். வேலூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினரைக் கண்டுகொள்ளாமலேயே விழா நடத்தினார்கள். உங்களை மதித்து நாங்கள் அழைத்திருக்கிறோம், பேச வைத்திருக்கிறோம், உங்களைப் புகழ்ந்து இருக்கிறோம். இந்தப் பண்பாட்டிலே ஒரு பகுதியையாவது எங்களுக்குத் திருப்பிக் காட்டக் கூடாதா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்பாட்டை இன்னும் செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துக்கொள்ளுங்கள். அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பண்பாட்டை செம்மைப்படுத்துவது என்பது, நம்முடைய ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் குறிப்பிட்டதைப் போல திரு. ஞானசேகரன் பெயர் விடப்பட்டிருந்தால் இதைவிட வேகமாக அவர் பேசலாம். நானும் அதை ஆதரித்துப் பேசத் தயாராக இருக்கிறேன். நீலகிரியில் எடுக்கப்பட்டதுபோல நடவடிக்கையை வேண்டுமானாலும்கூட நான் நிச்சயமாக எடுப்பேன். ஆனால் திரு. ஞானசேகரன் அவர்கள் பெயரும் போடப்பட்டிருக்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் வேலு அவர்களுடைய பெயரும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே அவர் குறிப்பிடுவது திரு. முகமது சகீ அவர்களின் பெயர். மாவட்டச் செயலாளர் என்ற பொறுப்பிலே போடப்படவில்லை. மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் என்று போடப்பட்டிருக்கிறது. திரு. ஞானசேகரன் அவர்கள் ஒன்றை ஒத்துக்கொள்வார்கள். ஒரு மாவட்டத்திலே முக்கிய பிரமுகர்கள் இருப்பார்கள். அவர்களை மதிக்க வேண்டியது அரசு விழா நடைபெறுகின்ற நேரங்களிலே முறைதான். எனவே, அவர் முன்னாள் எம்.பி. என்பதற்காக, அவர்களுக்கு



இருக்கக்கூடிய மதிப்பை நாம் குறைத்துவிட முடியாது. அந்த வகையிலே திரு. முகமது சகீ பெயர் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் என்ற அளவிலே இதிலே பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே திரு. ஞானசேகரன் அவர்களுக்கு ஏதாவது ஆதங்கம் இருந்தால் இனிமேல் வருங்காலங்களிலே, திரு. ஞானசேகரன் அவர்கள் கலந்து கொள்கிற கூட்டங்களிலே, சகீ வந்தால் அவரால் சகிக்க முடியாது என்றால், அவரை வராமலே செய்து விடுகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் அதிலே கலந்துகொண்டதிலே எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.

*முற்பகல் 11-00*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று நாட்களுக்கு முன்னாலே, காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, நாங்கள் நடுவர்மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பை எந்த மாநிலத்தின் மீதும் திணிக்க மாட்டோம் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு ஒரு அமைச்சரே சொல்கிறார் என்றால், நடுவர்மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பை இப்பொழுது அமல்படுத்தினால்தான், நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற, காவிரிப்படுகையிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு நிச்சயமாகப் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், மத்திய அமைச்சர் அவர்களே இப்படி, நாங்கள் எந்த மாநிலத்தின் மீதும் அந்தத் தீர்ப்பைத் திணிக்க முடியாது என்று சொல்வது....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்தியைக் கொண்டு நாம் ஒரு முடிவிற்கு வந்துவிடக் கூடாது. அந்தச் செய்தி வந்த மறுநாளே வேறொரு செய்தியும் வந்திருக்கிறது. அதையும் திரு. ஞானசேகரன் அவர்கள் படித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். உச்ச நீதிமன்றத்தினுடைய முடிவு எதுவோ அதற்குக் கட்டுப்படுகிறோம் என்றும் மத்திய அரசின் சார்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

[1997 அக்டோபர் 17

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எழில்மிகு சென்னை 2000' என்ற திட்டத்தைத் தீட்டி சென்னை நகரை அழகுபடுத்திக் கொண்டிருக்கிறோம். வணக்கத்திற்குரிய மேயர் ஸ்டாலின் அவர்கள் ஆங்காங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நன்றாகச் செய்து வருகிறார். ஆனால், காலையிலே பீச்சிலே சென்று பார்த்தோமானால் இரவு முழுவதும், விடியற்காலையிலும்கூட, 20, 30 லாரிகள் மணலை அள்ளிக் கொண்டு போகிறார்கள். இந்தக் கடல் மண்ணைக் கொண்டுபோய் வீடு கட்டுவதற்குரிய மணலோடு கலந்து, நல்ல விலைக்கு விற்று, மோசடி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பீச்சிலே அண்ணா சமாதிக்குப் பின்புறமும், அதேபோல, எம்.ஜி.ஆர். சமாதிக்குப் பின்புறமும் இருக்கின்ற மணலை, தினந்தோறும், இன்று காலையிலேகூட டி.சி.ஜே. 6989 என்ற லாரியை நானே பார்த்தேன். 20, 30 லாரிகள் ஒன்றாகச் சேர்ந்து காலை 6½ மணிக்குக்கூட வாரிக் கொண்டிருந்தார்கள். உலகத்திலே இரண்டாவது இடத்தை வகித்து கொண்டிருக்கிற மெரீனா பீச்சின் அழகைக் கெடுக்கின்ற வகையில், அதன் மணலைக் கொண்டுபோய் மோசடியிலே ஈடுபடுகின்றார்கள் என்கின்ற வருத்தத்தினை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு ...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா சமாதிக்குப் பின்புறத்திலே மணலை எடுப்பது என்பது, மோசடி மூலமாகவோ அல்லது திருட்டுத்தனமாகவோ அல்ல. அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய கட்டணத்தைக் கட்டிவிட்டுத்தான் எடுக்கிறார்கள். அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் எடுக்கிறார்கள். காரணம், அந்த மணலை எடுக்காவிட்டால் என்ன ஆகுமென்றால், நித்தம் நித்தம் கூவத்தினுடைய முகத்துவாரத்திலே மணல் வந்து சேர்ந்துகொண்டே இருக்கும். அதை அள்ளாவிட்டால் தண்ணீர் கடலுக்குள் போகாமல் நின்றுவிடும். எனவே, ஒரு நாளைக்கு மணலை அள்ளாவிட்டாலும்கூட மறுநாள் தண்ணீர் போவது சிரமம். எனவேதான், அரசாங்கம் சில கட்டணங்களை விதித்திருக்கிறது. அதைச் செலுத்தியவர்கள் எடுத்துச் சென்று விற்கிறார்கள். அதைக் கொண்டுபோய், சிலர் பில்டிங் வேலைக்குப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது வேறு விவகாரம்; அது வாங்குகிறவர்கள் பொறுப்பு. ஆகையினாலே, ஏதோ அரசாங்கத்திலிருந்து மணலை அள்ளிக் கொண்டுபோய் அதிலே ஏதோ மோசடி நடப்பதாக வார்த்தைகளைப் போட்டுச் சொல்வது அழகல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....



1997 அக்டோபர் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டது. நீங்கள் 12, 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அடுத்து, திரு. சி.டி. தண்டபாணி. (குறுக்கீடு) நீங்கள்தான் அதிக நேரம் பேசியிருக்கிறீர்களே? உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலூருக்கு வருகை தந்து நீதிமன்ற வளாகத்தையும், அதேபோல காட்பாடியிலே இருக்கின்ற இரயில்வே பிரிட்ஜையும் திறக்க இருக்கிறார்கள். நீதிமன்ற வளாகத்திற்கு

. . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ** கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நீதிமன்ற வளாகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறக்க வருகின்ற நேரத்திலே, அதிலே 'பி' பிளாக் கட்டி இருக்கிறார்கள். 'ஏ' பிளாக் இன்னும் கட்டப்படவில்லை. அந்த 'ஏ' பிளாக் கட்டுவதற்கு 31/2 கோடி ரூபாய் அல்லது 4 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அது ஏற்கெனவே, முதலிலே போடப்பட்ட அந்தத் திட்டத்தின்படி வந்திருக்க வேண்டும். அது வராமல் தடைபட்டுப்போய் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து 4½ கோடி ரூபாய் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீருக்காக ரூ. 9½ கோடி கொடுத்திருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி.டி. தண்டபாணி.

முற்பகல் 11-05

***திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையின்மீது, ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்னுடைய பேச்சைத் துவங்குவதற்கு முன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்திற்கு நிலம்பூர் புறவழிச் சாலை அமைப்பதற்காக, 90 கோடி ரூபாயிலே திட்டம் தீட்டி, அதை ஒதுக்கித் தந்தமைக்காக, கோவை மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், பல்வேறு சமுதாய நலத் திட்டங்களை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதற்கு நிதியும் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில், நூற்றுக்கு எண்பது சதவிகிதம் பேர், கிராமத்திலே வாழக்கூடிய மக்கள். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகள் போன்றவற்றைத், தொடர்ந்து சுதந்திரம் பெற்ற காலத்திலே இருந்து நாம் செய்யாத காரணத்தினால், இந்திய மக்களுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரம் இன்றைக்குச் சீரழிந்து இருப்பதை நம்மாலே காணமுடிகிறது. அதைத் தெரிந்துதான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'நமக்கு நாமே திட்டம்' என்கின்ற உடலுழைப்புத் திட்டமானாலும், 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்கின்ற திட்டத்தின்கீழ், ஒரு கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுவதும் செய்துதரக்கூடிய திட்டமானாலும், அதேபோல், 'Mass Tree Planting' என்கின்ற வகையிலே 'மரம் நடுவிழா' என்கின்ற திட்டமானாலும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கிற திருமண உதவித் திட்டமானாலும், சமத்துவபுரம் என்கின்ற திட்டமானாலும், இவை அனைத்திற்கும் கிட்டத்தட்ட ரூ. 125 கோடி ஒதுக்கியிருப்பது, கிராமத்தினுடைய வளர்ச்சி வெகுவாக இருக்க வேண்டுமென்ற அடிப்படை நோக்கமும், அவருக்கே உரிய சமுதாய நோக்கமும் இதிலே அடங்கி இருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது.

ஆசிய நாடுகள் முழுவதுமாக கிராமங்களினுடைய வளர்ச்சியையும், அதே நேரத்தில், சிறுதொழில் வளர்ச்சியையும் கருத்திலே கொண்டு, அவை செயல்பட்ட காரணத்தினால்தான், மேற்கத்திய நாடுகளிலே இருக்கக்கூடிய பெரிய வல்லரசுகளோடு இன்றைக்கு பொருளாதாரத் துறையில், அவர்களாலே போட்டிபோட முடிகிறது. அந்த அடிப்படையிலேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருப்பதற்கு உள்ளபடியே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும குறிப்பாக, இந்தப் பொன்விழா



ஆண்டில், 'சமத்துவபுரம்' என்கிற திட்டத்தின்கீழ், மக்களிடையே பேதங்கள் கூடாது; வாழக்கூடிய மக்கள் அத்தனை பேரும் சமமான நிலையிலே இருக்க வேண்டும்; சாதி உணர்வுகளை முழுமையாக அவர்கள் மறக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில், அத்திட்டத்தைக் கொண்டு வந்திருப்பது, இந்த நூற்றாண்டிலே ஒரு பெருமைமிக்க திட்டமாகும்.

மகாராஷ்டிர மாநிலத்திலே பிறந்த மகாத்மா போலே காலத்திலிருந்து, மகாத்மா காந்தி காலத்திலே இருந்து, டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் என்று விரல்விட்டு எண்ணக்கூடிய மூன்று, நான்கு பேர் இந்தியத் துணைக் கண்டத்திலே இருந்தாலும், தமிழகத்திலே, போலேயாகவும், மகாத்மாவாகவும், டாக்டர் அம்பேத்கராகவும், அதேபோல் தந்தை பெரியாராகவும் காட்சியளிக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை, தமிழ் மக்கள் அத்தனை பேர்களும் வரவேற்பார்கள் என்பது மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய சமுதாயவாதிகள் அத்தனை பேரும் வரவேற்றிருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்கள், நம்முடைய நாட்டிற்கு, நம்முடைய சமுதாயத்திற்கு நிரம்ப தேவை என்பதற்கு, நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு எடுத்துக்காட்டாக இதை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டம் பூராவும் இப்படிப்பட்ட திட்டங்கள் வளர வேண்டும்; ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவைபோன்ற திட்டங்கள் போடப்பட்டிருந்தாலும்கூட, அதற்குரிய ஆதாரங்கள், நிதியாதாரங்கள் நிச்சயமாக நமக்குத் தேவை. இப்படிப்பட்ட திட்டங்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்கிருந்து நிதியாதாரத்தைத் தேடுகிறார்கள் என்று பார்த்தால், அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து விட்டுத்தான் வேறு காரியங்களுக்கு அவர்கள் நிதியை ஒதுக்குகிறார்கள் என்பதுதான் உண்மை. அப்படிப்பட்ட நிதியாதாரங்கள் இருந்தாலும்கூட — இங்கே நம்முடைய நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள் — நம்முடைய மத்திய அரசு என்னென்ன வழங்குகிறதோ அதை எல்லாம் நம்முடைய தலைவரும் வாரி வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆனால் மத்திய அரசு கொடுக்க வேண்டிய பணத்தை மாநிலங்களுக்குத் தருவது இல்லை. பத்தாவது நிதிக் குழுவிலே 29% மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் 14.7% தான் தரப்பட்டது. 16.1 சதவீதமாவது தரப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

[திரு. சி.டி. தண்டபாணி] [1997 அக்டோபர் 17

ஆனால் தரவில்லை. இன்னும் சொல்லப்போனால் மாநிலங்களுக்குத் தரவேண்டிய நிதி ஆதாரங்கள் 49% கொடுத்தால்தான் மாநிலங்கள் சாதாரண ஏழை மக்களுக்கு, கிராமங்களுக்கு, தனக்கென்று, மாநிலங்களுக்கு என்று அந்த மாநில அரசுகள் செய்ய வேண்டிய கடமைகள் கமிட்மெண்ட்ஸ் இவைகளைச் செய்ய முடியும். எனவே மத்திய சர்க்கார் இதை உணர்ந்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இத்தனைக்கும் மேலாக சில சங்கடங்கள் நமக்கு இருக்கத்தான் செய்கின்றன. நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் எவ்வளவோ பிரச்சினைகளிலே மக்களுடைய நலனைக் கருதி காரியங்கள் ஆற்றினாலும் ஏக இந்தியா என்ற அளவிலே நமக்கு இருக்கிற கட்டுப்பாட்டின் காரணமாக இந்தியாவிலே பல இடங்கள், குறிப்பாக, தமிழ்நாட்டில் இன்றைக்கு விலைவாசி உயர்வின் காரணமாக நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மட்டும் நாம் பார்த்தால் நிலக்கரியினுடைய விலை 12% உயர்ந்திருக்கிறது. அதைப்போல யூரியாவினுடைய விலை 10% உயர்ந்திருக்கிறது. டீசல். அடிப்படை பொருட்கள், Basic Commodities என்று சொல்வார்களே அவை 27% உயர்ந்திருக்கின்றன. அதேபோல கோதுமை 32.8% உயர்ந்திருக்கிறது. மாநிலங்களுக்குத் தரக்கூடிய அரிசி issue price என்ற வகையிலே பார்த்தால் 15.7% உயர்ந்திருக்கிறது. இத்தனைக்கும் மேலாக Wage goods என்று சொல்லக்கூடிய Primary articles அத்தியாவசியப் பொருட்கள் 30. அந்த 30 பொருட்களுடைய விலை 2.6%-லிருந்து 11.7% வரைக்கும் உயர்ந்து இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11-10

அதேபோல Fuel Power என்று குறிப்பிடப்படக்கூடிய நிலக்கரி ஆனாலும், எண்ணெய் ஆனாலும், டீசல் ஆனாலும், இவை கிட்டத்தட்ட 17.4% உயர்ந்திருக்கிறது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம்--என்னதான் ஒரு மாநில சர்க்கார் திட்டமிட்டு ஏழை மக்களை வாழ வைக்க வேண்டும் என்று எண்ணினாலும்கூட, மத்திய சர்க்காரினுடைய பொருளாதாரக் கொள்கை, மாநில சர்க்காரினுடைய திட்டங்களை முழுமையாக அழிக்கிற அளவுக்கு இருந்து கொண்டிருப்பது வருந்தத்தக்கது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே நம்முடைய மாநில அரசு அரிசிக்கு மானியமாக இன்றைக்கு கொடுக்கக்கூடிய பணம் 1000



1997 அக்டோபர் 17] [திரு. சி.டி. தண்டபாணி]

கோடி ரூபாய். ஆனால் மத்திய அரசு இந்தியா பூராவும் சேர்த்து 10 கோடி குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பணம் 1000 கோடி ரூபாய். ஆகையால் மத்திய அரசு இதை முழுவதுமாகப் பரிசீலனை செய்து, 1000 கோடி ரூபாய் போதாது என்பது மட்டுமல்ல - இது மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படாத அளவுக்கு ஒரு பிரச்சாரமாக இருக்குமே தவிர அது நிச்சயமாகப் பயன்படுத்த முடியாத அளவுக்குத்தான் இருக்கும். ஒரு மாநில அரசு 1000 கோடி ரூபாய் அறிவிக்கின்ற நேரத்தில் 26, 27 மாநிலங்களைக் கொண்ட மத்திய அரசு 1000 கோடி ரூபாய் அறிவிப்பது போதாது. அதை நிச்சயமாக அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. இங்கே ஊழல் செய்கிற அரசியல்வாதிகளுக்கென்று அவர்களுடைய வழக்குகளை விசாரிப்பதற்கென்று மூன்று நீதிமன்றங்கள் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. Prevention of Corruption Act 1988 என்ற அடிப்படையிலே போடப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இதில் போடப்பட்டிருக்கிற வழக்குகள் சில என்றாலும்கூட, இன்னும் வெளிப்படாத வழக்குகள் நிரம்ப இருக்கின்றன. நான் 1½ ஆண்டு காலத்திலே சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே எனக்குத் தெரிந்தது, பொது நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய Public Undertakings, இதிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு நிறுவனத்திலும் கடந்த காலத்திலே ஊழல் செய்திருக்கிறார்கள். இவை அத்தனையும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அதிகாரிகளைத் தூண்டிவிட்ட கடந்த கால அமைச்சர்கள். அல்லது முதலமைச்சர் இத்தனை பேரும் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். பல அதிகாரிகள் சென்ற முதலமைச்சருடைய நேரடியான உத்தரவின்மீதே பல ஊழல்களைச் செய்து இருக்கிறார்கள் என்ற செய்திகள் எல்லாம் என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. அதையும் அருள்கூர்ந்து தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஏதோ கையிலே அதிகாரம் வந்துவிட்டது அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த வகையான ஊழலும் செய்யலாம் என்று இருந்துகொண்டு அவர்களே இன்றைக்கு அறிக்கை ராணியாக மாறி நாட்டிலே அரசியலை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11-15

கடந்த காலத்திலே அவர்கள் அதிகாரம் வந்துவிட்டது, எதையும் செய்யலாம் என்று செய்தார்கள். வின்செண்ட் சர்ச்சில் ஒரு முறை சொன்னார், 'Power corrupts, absolute power corrupts absolutely' என்று. அதற்கு ஏற்றாற்போல் கடந்த காலத்திலே தவறு செய்தவர்களை மீண்டும் விசாரணையின்கீழ் கொண்டு வந்து, இன்னும் அவர்கள் செய்த பல்வேறு தவறுகள் குறித்து வழக்குகளைப் போட்டு, அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பல்வேறு திட்டங்கள் சம்பந்தமாக, பல்வேறு தலைப்புகளிலே இருக்கின்ற விவரங்களைப் பார்க்கின்றபோது கடந்த ஆண்டு எத்தனை கோடி ரூபாய் அவற்றுக்காக ஒதுக்கப்பட்டது, எந்த அளவுக்குச் செலவிடப்பட்டது என்பதை அறிந்து கொள்வதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே நாடாளுமன்றத்தில் ஒரு முறையை வைத்திருக்கிறார்கள், கையாளுகிறார்கள். ஒவ்வொரு தலைப்புக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்து அந்தக் 'குழுவின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு நடத்தி எந்த அளவுக்குப் பணம் தேவை என்றும், எவ்வளவு செலவிடப்பட வேண்டும் என்றும் முடிவு செய்கிறார்கள். இந்த முறை பல்வேறு மாநிலங்களில் கையாளப்படுகிறது. குறிப்பாக அஸ்ஸாம் மற்றும் கேரள மாநிலங்களில் கையாளப்படுகிறது. இந்த முறை நம்முடைய வேகமான செயல்முறைக்கு, வேகமாகச் செயல்படுவதற்கு ஒரு நல்ல நிலையை உருவாக்கும் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மத்திய அரசாங்கம் உணவு தானியத்திற்காகத் தருகின்ற மானியம் போதுமானது அல்ல. அந்த மானியத்தை உயர்த்தித் தருவதற்கு மத்திய அரசை நாம் வற்புறுத்துகின்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி அதன்படி ஒரு தொகுதிக்கு ஒரு



கிராமத்தை எடுத்திருக்கிறோம். ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதுமானதல்ல. முதலிலே ஒரு திட்டத்தைச் சொன்னார்கள், எங்கள் தொகுதியிலே தூத்தூர் என்ற கிராமத்திற்கு என்று சொல்லி அந்தப் பஞ்சாயத்திற்கு 1¼ கோடி என்று சொன்னார்கள். பின்னர் மதிப்பீடுகளைத் தயாரிக்கின்றபோது அது ஒரு கோடிக்குக் கீழே வருகிறது. எனவே அந்தத் தலைப்பிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்ற தொகை போதுமானதல்ல. எனவே, அதை அதிகரிக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை முன்வைக்கிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ.-க்களுக்கு என்று ஒவ்வொரு தொகுதிக்கும் 25 இலட்ச ரூபாய் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே வருகின்ற பிரச்சினை என்னவென்றால், எம்.எல்.ஏ.-க்கள் தேர்வு செய்கின்ற பணியை அதிகாரிகள் எடுக்கின்ற சூழ்நிலை இல்லை. அதிகாரிகள்தான் இந்த இந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே ஒரு கால்வாயிலே ஒரு சிறிய வேலையை, அத்தியாவசியமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னேன். அதற்கு விதிமுறைகளில் இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எனவே, அந்தத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள வரம்பை எடுத்துவிட வேண்டுமென்ற எனது கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். 25 லட்சம் ரூபாய் என்று தந்திருக்கின்ற இந்தத் திட்டத்தின் தலைப்பிலே இவ்வளவு கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிற தொகை போதுமானது அல்ல. எனவே அதையும் சற்று உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சில பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ரப்பரின் விலை வீழ்ச்சியானது, கடந்த ஆண்டில் ஒரு கிலோவுக்கு 60 ரூபாய் என்றிருந்தது இப்போது 40 ரூபாய் என்று குறைந்திருக்கிறது. இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய்கூட குன்றியிருக்கிறது. நம்முடைய அரசு ரப்பர் தோட்டத்திலே வருகின்ற வருமானம் குன்றிப்போய் இருக்கிறது. அதை நடத்தமுடியுமா என்ற கேள்வி எழுகிறது. அங்கே 40 ஆயிரம் டன் ரப்பர் உற்பத்தியாகிறது. 20 ஆயிரம் விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அரை ஏக்கர், 1 ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இதுகுறித்து மத்திய அரசிடம் நாம் ஒரு

கோரிக்கையை வைக்க வேண்டும். அவர்கள் 'ரா-ரப்பரை' இறக்குமதி செய்கின்ற காரணத்தினால், டயரை இறக்குமதி செய்கின்ற காரணத்தினால், இங்கே ரப்பர் விலை குறைகிறது. இறக்குமதி செய்வது ரப்பர் விலை குறைவுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. கேரள அரசாங்கம் ரப்பர் விலை வீழ்ச்சியைச் சரிகட்டுவதற்காக ஒரு நல்ல நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. 13 சதவீதம் என்ற வரிவிதிப்பை மூன்று சதவீதமாகக் குறைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய அரசும் ரப்பருக்கான வரி விதிப்பு 13½ சதவீதம் என்று இருப்பதை இரண்டு சதவீதமாகக் குறைப்பதன் மூலம், நம்முடைய அரசாங்கத்தின் கையிருப்பில் இருப்பதானாலும் சரி, தனியாருடைய கையிருப்பில் இருக்கின்ற ரப்பர் ஆனாலும் சரி, நாம் அவற்றை விற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடுகின்ற தாமிரபரணி ஆற்றின் கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டு, மணல் அநியாயமாக எடுக்கப்படுவதன் காரணமாக வைக்கல்லூர் என்ற கிராமம், 750-க்கும் அதிகமான குடும்பங்கள் வாழும் அந்த கிராமம் முழுவதும் அழிகின்ற ஒரு பேரபாயம் ஏற்பட்டிருக்கின்றது. எனவே அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

அடுத்து, காவல்துறையை எடுத்துக்கொண்டால், அந்தத் துறைக்கான கணக்குத் தலைப்பிலே பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட, சில காவல் நிலையங்களில், குறிப்பாக கரையான்கோடு காவல் நிலையம் அதுபோல ஆறுகாணி காவல் நிலையம் ஆகிய இந்த இரண்டு காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி இல்லை. ஜீப் இல்லை. எனவே, அந்தத் தலைப்பில் ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதல்ல. அதுபோல காவலர்களின் நியமன விஷயத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் தேர்வு செய்யப்பட்டவர்கள் இன்னும் முழுமையாக நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். ஏறத்தாழ 300-க்கும் அதிகமான காவலர்களும், அதுபோன்று எஸ்.ஐ.-க்களும் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் அவர்கள் வெளியிலே இருக்கின்றார்கள். எனவே, இந்தக் காரியத்திலேயும் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*



அதுபோன்று மொசைக் தொழிலை எடுத்துக்கொண்டால் அதனை உற்பத்தி செய்த பிறகு ஒரு வரியும், அதற்கு அடுத்த கட்டமாக விற்பனை செய்து ஒப்பந்தக்காரர்களிடம் சென்ற பிறகு, இன்னொரு வரியும் விதிக்கப்படுகிறது. இது சிறு தொழில் என்ற முறையிலே உள்ளதால் மொசைக் உற்பத்தியாளர்கள் இதனால் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அந்த வரிகளை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே ஒரு முறையை வைத்திருந்தார்கள், அதாவது டீ கடைகளுக்கு காவல துறையிலிருந்து உரிமம் பெற வேண்டும் என்று வைத்திருந்தார்கள். அரசியல் பேசக் கூடாது என்ற காரணத்திற்காக இப்படியொரு நடவடிக்கையினை மேற்கொண்டார்கள். ஆனால் அது இன்றும் தொடர்கிறது. எனவே, சென்னை மாநகராட்சிக்குள்ளே வரக்கூடிய டீ கடைகளுக்கு காவல் துறையிலிருந்து உரிமம் பெற வேண்டுமென்பதை ரத்து செய்ய வேண்டுமென்று நான் இங்கே அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதுபோன்று கல்லூரி மாணவர்களைப் பொறுத்த விஷயத்தில், மதுரையிலே சட்டக் கல்லூரி மாணவர்களும் சென்னையிலே செல்லம்மாள் கல்லூரி மாணவிகளும் தங்களுடைய கோரிக்கைகளுக்காக சில போராட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள். நேற்றையதினம் மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். செல்லம்மாள் கல்லூரியிலே பெண்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைக்காக பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் அரசு தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று பெண்ணாடம் அரசு சர்க்கரை ஆலையிலும், அருணா சர்க்கரை ஆலையிலும் 1995-96-லே 9 கோடி பாக்கி....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தில் ஒன்றில் எனக்கு உடன்பாடு.

செல்லம்மாள் கல்லூரி பற்றி சொன்னார்கள். அதுபற்றி உடனடியாக ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்ற அந்தக் கடமை இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சட்டக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் தங்கள் பயிற்சி நடைபெறுகின்ற நேரத்திலே 'ஸ்டைபண்ட்' தரவேண்டுமென்று கேட்பது முறைதானா? சரியா என்பதையும், வேறு எந்த மாநிலத்திலாவது அந்த முறை இருக்கிறதா? என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செல்லம்மாள் கல்லூரி விஷயத்திலே எடுத்துள்ள நடவடிக்கைக்கு நன்றி. இருந்தாலும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லை. அதை இன்று வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பரிசீலனை செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஸ்டைபண்ட்' என்பது மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்கள் படிக்கின்றபோது அவர்கள் அங்கே இருக்கின்ற நோயாளிகளையும் சேர்த்து கவனிக்கின்ற காரணத்தினாலே அப்படிப்பட்ட துறைகளிலே 'ஸ்டைபண்ட்' கொடுத்து வருகிறார்கள். ஆனால் இதுவரையிலே இந்தியாவிலே எங்குமேயில்லாத ஒரு சூழ்நிலையில் தமிழகத்திலே மட்டும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு நாம் 'ஸ்டைபண்ட்' கொடுப்போம் என்றால் பிறகு பட்டம் படிக்கின்ற எல்லா மாணவர்களுமே 'ஸ்டைபண்ட்' கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். இதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான் கோரிக்கையாக நான் சொன்னேன். இந்த சர்க்கரை ஆலைகளிலே 18 கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்குச் செலுத்த வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை இருக்கிறது. தீபாவளிக்குக் கூட காசு இல்லாத சூழ்நிலையில் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இன்று இருக்கிறது. அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.



**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீட்டில் என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எடப்பாடி தொகுதியிலே குடிநீர்ப் பிரச்சினை மிக அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை நான் இதுகுறித்து சொல்லியிருக்கிறேன். எடப்பாடியிலே காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்திலே எடப்பாடி நகராட்சியிலே பல பகுதிகள், ஒன்றாவது வார்டு நாச்சிபாளையத்திலிருந்து ஆலச்சம்பாளையம் மோட்டூர் பகுதிகள் விடுபட்டுள்ளன. ஆடையூர், பக்கநாடு பஞ்சாயத்துகளும் விடுபட்டிருக்கின்றன. கொங்கணாபுரம் ஒன்றியத்தில், கோரணம்பட்டி, கோணசமுத்திரம் போன்ற பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. மகுடஞ் சாவடி ஒன்றியத்தில் வைகுந்தம், நடுவனேரி, தப்பகுட்டை, ஏகாபுரம், காளிகவுண்டன்பாளையம் ஆகிய பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் அவதிப்படுகிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய மிக முக்கியமான, தொகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதுபோல, கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டக சாலை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னாலே, 31-1-1943-இல் தொடங்கப்பட்டது. கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டக சாலையில் பல ஆண்டுகளாக, அந்தப் பகுதி மக்களுக்கு சரியாக ரேஷன் வழங்க முடியாமல் தடைப்பட்டிருக்கிறது. நம்முடைய மறைந்த அண்ணல் தங்கபாண்டியன் அவர்கள் - நம்முடைய கலைஞர் அவர்களுடைய தங்கக்கட்டி - மறைவதற்கு முன்னாலே, மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையை திருச்செங்கோடு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தோடு இணைத்து, ஒழுங்காக, முறையாக மக்களுக்கு ரேஷன் வழங்க ஆவன செய்யப்படும் என்று இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள். அதையேதான், நம்முடைய அவை முன்னவர் அவர்களும், இங்கே பேசும்போது தெளிவாக உறுதிப்படுத்திச் சொன்னார்கள்.

அதைப்போல, திருச்செங்கோடு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் மிகப் பெரிய ஒரு சங்கமாகும். கிட்டத்தட்ட 40,553 பேர் சங்கத்திலே

உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 194 ரேஷன் கடைகள் இருக்கின்றன. பல கோடி ரூபாய் வருமளவுக்கு விற்பனையாகிறது. அந்தச் சங்கத்தை திருச்செங்கோட்டிலிருந்து பிரித்து, கொங்கணாபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சங்கத்தை இயக்க வேண்டுமென்று நம்முடைய அவை முன்னவர் அவர்களும், மறைந்த அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களும், இப்போது கூட்டுறவுத் துறையின் பொறுப்பில் இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களும் என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். இந்த அவையிலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திருச்செங்கோடு சங்கத்தைப் பிரிப்பதற்கும், கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டக சாலையைச் சேர்ப்பதற்கும் - இணைப்பதற்கும் - தேவையான தகுந்த முயற்சிகளை இதுவரையில் அரசு அதிகாரிகள் எடுத்து இருக்கிறார்களா என்பது எங்களுக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. அமைச்சர்கள் இருவரும் உத்தரவாதம் கொடுத்தும், அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தும், இந்தத் திட்டத்தை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள், "நாளை அதிகாரிகள் சேலத்திலிருந்து வருகிறார்கள்; அவர்களிடத்திலே கலந்து பேசி விரைவிலே நான் செய்து முடிக்கிறேன்" என்று. அவர்களுக்கு என்னுடைய நன்றி. நிச்சயமாக சொன்னதைச் செய்யக்கூடிய ஆட்சி தி.மு.க. ஆட்சிதான் என்பதை அமைச்சர் அவர்கள் நிரூபிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, எடப்பாடி காவல் நிலையம் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. அப்படியே உடைந்து கொட்டிக் கொண்டிருக்கிறது. கைதிகளையும், விசாரணைக் கைதிகளையும் கொண்டு வந்து வைப்பதற்குக் காவலர்கள் பயந்து இருக்கின்றனர். அங்கே விஷப் பூச்சிகளும், பாம்புகளும் இருக்கின்றன. ஆகையால் போலீஸ்காரர்கள் 6 மணிக்கு மேல் கைதிகளைப் பிடிப்பதற்கே அஞ்சுகிறார்கள். உடனடியாக தமிழக முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி எடப்பாடியில் ஒரு நவீன காவல் நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொங்கணாபுரத்தில் மிகப் பெரிய கூட்டுறவுப் பண்டகசாலையும், கூட்டுறவு சொசைட்டிகளும் இருக்கின்றன. ஆகவே அங்கே ஒரு புதிய காவல் நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று



கேட்டுக்கொள்கிறேன். அடுத்து எடப்பாடியை ஒட்டியுள்ள குஞ்சாம்பாளையத்திலிருந்து குமாரபாளையம் வரை 30 கிலோமீட்டர் உள்ளது. அந்தப் பகுதியில் குமாரபாளையத்தில்தான் காவல் நிலையம் உள்ளது. அதனால் சட்டம்-ஒழுங்கு மிகக் கடுமையாகக் கெட்டு வருகிறது. கள்ளச் சாராயம் மிக அதிகமாக விற்கப்படுகிறது. தயவு செய்து, எடப்பாடிக்கும் 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குமாரபாளையத்திற்கும் மத்தியில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ளம் கொண்ட, தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், முந்தைய அரசிலே எவ்வளவோ தவறுகள் நடந்தபோதிலும், காவல் துறையில் உதவி ஆய்வாளர்கள்.....

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் தயவுசெய்து அமைதி காக்கவும்.

**திரு. இ. கணேசன்:** நம்முடைய முதல்வர் அவர்கள் முந்தைய ஆட்சியின் தவறுகளை எல்லாம் களைந்து, அந்தக் காவலர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி, 600 காவலர்களை எடுத்து இருக்கிறார்கள். முந்தைய அரசு 500 காவலர்களை எடுத்து இருக்கிறது. ஆனால் மொத்தம் 1198 காவலர்கள் தேர்வு பெற்று இருக்கிறார்கள். மருத்துவப் பரிசோதனைக்கு எல்லாம் உட்படுத்தப்பட்டு, போலீசார் எல்லாம் விசாரித்த பிறகும் 98 காவலர்கள் விடுபட்டு விட்டார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அந்த ஏழைகளுக்கு வாழ்வு அளிக்க அவர்கள் காவலர் பணிக்கு வர அவர்களுக்கு அழைப்பு அனுப்ப வேண்டும்; அவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தாய் உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் அளித்து, விடுபட்ட அந்த 98 காவலர்களையும் இவர்களோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இடையிலே மிக முக்கியமான பிரச்சினை, கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினை. நெசவாளர்கள் இப்போது வேலை இல்லாமல் சித்ரவதைப்பட்டு - சீரழிந்து கொண்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம், ஏற்றுமதியாகிக் கொண்டிருந்த அத்தனை

ஜவுளிகளும் இப்போது நிறுத்தப்பட்டுவிட்டன. கேட்டால், பாபர் மசூதி இடித்ததினால் இந்தியாவிலிருந்து எந்தச் சரக்குகளையும் அரபு நாடுகள் வாங்குவது இல்லை என்று சொல்லி வருவதால் தொழிலாளர்கள் நசுங்கி வருகிறார்கள். தீபாவளிக்கு அரசு ஊழியர்கள் எல்லாம் இங்கே போனஸ் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் சோறு சாப்பிட முடியுமா? மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடும்பத்தோடு சோறு சாப்பிட முடியுமா என்ற வேதனையில் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். தயவுசெய்து என்னுடைய உணர்வுகளை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் தீபாவளியின்போது குடும்பத்தோடு உட்கார்ந்து சாப்பிடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்; துணிகளை ஏற்றுமதி செய்யுங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். முதல்வர் அவர்கள் சாலைப் பணியாளர்களை — அவர் சொன்னதுபோல சொன்னதைச் செய்யக்கூடிய முதல்வர்; இந்த நாட்டில் 9 முறை இந்த சட்டமன்றத்திலே அமர்ந்து இருக்கிறார்; நான்காவது முறை முதலமைச்சராக அமர்ந்து இருக்கிறார்; சாலைப் பணியாளர்களை— குலுக்கல் முறையில்தான் தேர்ந்து எடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், ஒவ்வொரு பகுதியிலும் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாய் வரை லஞ்சமாகப் பெற்று வருகிறார்கள். இது நியாயம் தானா?.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; இந்த மாதிரி பொதுவாகச் சொல்லக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இதிலே யாரும் லஞ்சம் பெறுவதற்கு வழியே இல்லை. யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ, விண்ணப்பித்தவர்களுடைய பட்டியலை எடுத்து, ஒரு பகுதியிலே 100 பேர் சாலைப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்றால், ஏறத்தாழ 400, 500. பேர் விண்ணப்பிக்கிறார்கள்; அதிலே தகுதியானவர்கள் 300 பேர் இருப்பார்களேயானால், உடற்கட்டு, படிப்பு, வேலை செய்யக்கூடிய ஆற்றல் — இவை எல்லாம் பொருந்தியவர்கள் 300 பேர் இருப்பார்களேயானால், அந்த 300 பேர்களை அதிகாரிகள் மட்டத்தில்





வைத்து சீட்டு குலுக்கிப் போட்டு அதற்குப் பிறகுதான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அதை மீறி எந்தக் காரியமும் நடைபெறாது. மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சந்தேகப்படத் தேவையில்லை. யாராவது எங்கேயாவது லஞ்சம் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், எந்த நடவடிக்கையும் எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. கணேசன்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய சார்பாக மட்டுமல்ல, என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாகவும் அவருக்கு நன்றியைச் சொல்லி, இந்த உத்தரவாதத்தை இந்த அவையிலே வாங்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இதை எழுப்பினேன். எத்தனை பேர் வாங்கி இருக்கிறார்கள் என்ற பட்டியலை நிச்சயமாக தலைவர் அவர்கள் தேவைப்பட்டு கேட்டால் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் ஒருவரைக்கூட நியமிக்கவில்லை. நியமிக்காத நியமனத்திற்கு எப்படிப் பணம் வாங்கி இருக்க முடியும்? முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி தந்து இருக்கிறார்கள். அந்த வாக்குறுதியையும் மீறி எங்கேயாவது தவறு நடக்குமானால், அதை மாண்புமிகு உறுப்பினர் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேசன், அவ்வளவுதான், உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, காலியாக இருக்கிற இடங்களுக்கு 3 பங்கு உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். இதிலே

கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேருக்கு 4 லட்சம் உறுப்பினர்கள் விண்ணப்பித்து இருந்தார்கள். நேர்முகத் தேர்விலே கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்தான் கலந்து கொண்டார்கள். அந்த 2 லட்சம் பேரிலே 10 ஆயிரம் பேரைத் தேர்வு செய்வது என்பது கடுமையான வேலை. நேர்முகத் தேர்விலே தகுதியானவர்களாக 100 பேருக்கு 3 மடங்காகத் தேர்ந்து எடுக்கிறோம். அந்த மூன்று மடங்கிலிருந்து குலுக்கல் சீட்டு போட்டு தேர்ந்தெடுக்கப்பட அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆங்காங்கே இடைத்தரகர்கள் யாரேனும் தவறு செய்வார்களேயானால், அதை இங்கே சொல்லலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததைப்போல, விண்ணப்பித்திருப்பவர்களுக்குக் குலுக்கல் முறையில் சாதாரணமாகவே வாய்ப்புக் கிடைக்கும் என்ற உணர்வோடு அவர்களும் இடைத்தரகர்களிடம் பலியாகாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. இ. கணேசன்:** நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். பாட்டாளித் தொழிலாளர் சங்கம் என்று இருப்பதை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் நிறைய பேர் பேசவேண்டும். நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். திரு. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று இருக்கவேண்டும். வெளிநாட்டிலே எல்லாம் ஒவ்வொரு மனிதனுக்கும் நாட்டுப்பற்று, மொழிப்பற்று எல்லாம் இருக்கிறது. நம் தமிழ்நாட்டில் அமைச்சர்களாக இருக்கக்கூடியவர்களுக்கும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று இருக்கவேண்டும். காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டை பகுதியில் ஜோகிர்பட்டி என்ற ஊரில் தமிழக அரசின் 'நமக்கு நாமே திட்ட' துவக்க விழாவிற்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், அருமை அண்ணன் தமிழ்க்குடிமகன் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இரகுமான்கான், சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சற்குணபாண்டியன், இன்னும் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. செல்வராசு போன்றவர்கள் வருகை தந்தார்கள். நிகழ்ச்சியை ஆரம்பிக்கும்போது, தமிழ்த்தாய் வாழ்த்துகூடப் பாடவில்லை. அந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர், எஸ்.பி. போன்றவர்கள்



கலந்துகொண்டார்கள். நிகழ்ச்சி முடிந்த பிறகு தேசிய கீதம் கூட இசைக்கப்படவில்லை. இந்த நாட்டை ஆளக்கூடியவர்களுக்கு இப்படி நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாமல் இருப்பது....

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அவ்விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டது, நாட்டுப் பண்ணும் இசைக்கப்பட்டது.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலைக் கொடுக்கவில்லை. உண்மையான தகவலைத்தான் சொல்கிறேன். இது சம்பந்தமாக நான் தமிழ்நாடு கவர்னருக்கும், ஜனாதிபதி அவர்களுக்கும் தந்தி அடித்திருக்கிறேன். இது பத்திரிகைகளிலும் செய்தியாக வந்து இருக்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடவில்லை. தேசியகீதமும் இசைக்கப்படவில்லை. அங்கே வந்த மக்களுக்கும் இது தெரியும் அரசு அதிகாரிகளுக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சியில் நாங்கள் எல்லாம் கலந்துகொண்டோம். அமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிட்டதைப் போல, தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் நாட்டுப்பண் ஆகியவை முறையாக இசைக்கப்பெற்றன. இது தவறான தகவல் மட்டுமல்ல, இங்கே அதை மறுத்துச் சொன்னபிறகும், ஆதாரம் இல்லாமல், கற்பனையாக வைத்துக்கொண்டு சொல்லிக்கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் எங்கே அரசு நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் இவை தவறாது இடம் பெறுகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக தினமலர் பத்திரிகையிலும், மற்ற பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. இதைக் குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்களுக்கு அறிவுரை சொல்லவேண்டும். நாமே இப்படி இருந்தால், பள்ளி மாணவர்கள், இந்த நாட்டு மக்களுக்கு எல்லாம் எப்படி தமிழ்ப் பற்றும், கடவுள் பற்றும், நாட்டுப்பற்றும் வரும் என்று யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர்கள் மீது நேரடியான ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். அதில் சம்பந்தப்பட்ட இரண்டு அமைச்சர்கள் எழுந்து, விழாவில் அப்படி நடைபெறவில்லை, தமிழ்த்தாய் வாழ்த்தும், நாட்டுப்பண்ணும் இசைக்கப்பட்டுத்தான் நடைபெற்றது என்று மறுப்புச் சொன்னதற்குப் பிறகும், மாண்புமிகு உறுப்பினர் அதைத் தொடரக்கூடாது. அவர் தந்தி கொடுத்துவிட்டார் என்பதற்காகவே இதைப் பற்றிப் பேசக்கூடாது. அது அவைக்கு அழகும் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைத்தான் சொன்னேன். அவ்வளவுதான். உண்மையான தகவலைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் மறுப்புத் தெரிவித்த பிறகு அதை ஏற்றுக் கொள்வதுதான் மரபு.

**திரு. இரா. தாமரைக்கனி:** தப்பை உணர மாட்டேன் என்கிறார்களே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி நடக்கவில்லை என்கிறார்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவேளை திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு தவறான உதாரணத்தோடு சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அரசு, இதுபோன்ற சலுகைகள் வழங்குகிற, நலன்கள் வழங்குகிற விழாக்களில் நிச்சயமாகத் தமிழ்த்தாய் வாழ்த்து, தேசிய கீதம் இரண்டும் போடப்படுகின்றன. அதிலே, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதில் எங்களுக்கு எந்தவிதமான குறைபாடும் கிடையாது.

*முற்பகல் 11-40*

ஏனென்றால், 'நீராரும் கடலுடுத்த' என்ற மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களுடைய பாடலை அரசு விழாக்களிலே முதலில் பாட வேண்டுமென்ற ஆணையைப் போட்டவனே நான்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 'திராவிட உத்கல வங்கா' என்று வருகின்ற 'ஜன கண மன' கீதத்திலும் எங்களுக்கு மிகுந்த உடன்பாடு உண்டு. எனவே, அந்த நாட்டுப்பாடலையோ அல்லது தமிழ்த்தாய் வாழ்த்தையோ என்றைக்கும் நாங்கள் நிராகரிப்பவர்களல்ல.



அதற்குத் தலைவணக்கம் செய்பவர்கள். நேற்றைக்குக்கூட, திரு. கமலஹாசன் நடத்திய ஒரு விழாவில் "நீராரும் கடலுடுத்த" என்ற பாடலை முதலிலே போட்டார்கள். பிறகு, இறுதியில் தேசிய கீதம் என்று சொன்னபொழுது நான், தலைவர் மூப்பனார் எல்லாம் அங்கே இருந்தோம். அந்த ஒலிபெருக்கிக்காரர் அந்தப் பாடலைக் கொண்டு வரவில்லை. பிறகு, திரு. கமலஹாசன் அவர்களே சென்று தேசிய கீதத்தைப் பாடினார்கள். எல்லோரும் சேர்ந்து அது பாடப்பட்டு நேற்று அந்த விழா நிறைவு பெற்றிருக்கிறது. அதிலே அவ்வளவு அக்கறையோடு நாங்கள் இருக்கிறோம். 'நமக்கு நாமே திட்டம்' அது உள்ளூரில் ஆங்காங்கே உள்ள ஒரு *100* பேர், *200* பேரை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்களோ அல்லது நானோ அல்லது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களோ சென்று நமக்கு நாமே திட்டத்தில் ஆங்காங்கே நடைபெறுகின்ற வேலைகளுக்காக நடைபெறும் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அதிலே ஒருவேளை அவர் சொல்லுகின்ற அந்த வாழ்த்துக்கள், பாடல்கள் இடம் பெறாமல் இருக்கலாம். அரசு விழாவிலே இடம் பெற்றது என்று *2* அமைச்சர்களும் சொல்லிய பிறகு, தான் சொன்னதுதான் சரியென்று வாதிடுவது நல்லதல்ல. அதுமாத்திரமல்ல, தமிழ்த்தாய் வாழ்த்தும் நாட்டுப்பாடலும் பாடவில்லை என்று சட்டமன்றத்திலேயே நாம் சொல்வது அது நாட்டுக்கும் மொழிக்கும் நல்லதல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுக்காகப் பாடுபட்ட தியாகிகளினுடைய புகழை இந்த அரசு மறைக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லுகின்றேன். வ.உ. சிதம்பரனார் பெயரில் மாவட்டம் இருந்தது. அதுமட்டுமல்லாமல் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் மாவட்டம் இருந்தது. நெல்லை கட்டபொம்மன் என்ற பெயரில் மாவட்டம் இருந்தது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போன்றவர்களெல்லாம் தங்களுக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை அவர்கள் பெயர்களால் இருந்த மாவட்டங்களில் எல்லாம் அவர்களின் பெயர்களை நீக்கியிருக்கின்றீர்கள். ஆகவே, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளுடைய பெயரால் மாவட்டங்கள் அமைப்பதற்கும் மற்றும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியவர்களின் பெயரால் மாவட்டங்கள் அமைப்பதற்கும் இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

[திரு. இரா. தாமரைக்கனி] [1997 அக்டோபர் 17

இன்னொன்று, மத்திய அமைச்சர் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் பேசும்போது சுதந்திரப் போராட்டத் தியாகிகளை இந்த அரசு மதிக்கவில்லை என்று சொல்லியுள்ளார். அதுமட்டுமல்லாமல், 31-8-1997 ஆம் தேதி மதுரையில் தியாகி கக்கன்ஜி அவர்கள் சிலை திறப்பு விழா நடந்தது. சாயந்திரம் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடந்தது. அந்த நேரத்தில் கக்கன்ஜியைப் பற்றி ஒரு வார்த்தைகூட நமது முதலமைச்சர் அவர்கள் பேசவில்லை. அதுமட்டுமல்லாமல், கக்கன்ஜி அவர்களுடைய வாரிசுதாரர்களைக் கூப்பிட்டு கௌரவப்படுத்தவில்லை என்று அவர்களுடைய மகன் திரு. பக்தவத்சலம் போன்றவர்கள் மிகவும் வருத்தப்பட்டு எங்களுக்கெல்லாம் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இனிமேல் வருகிற காலத்தில் தியாகிகளை மதிக்க வேண்டிய எண்ணம் இந்த அரசுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல காரியம் நடைபெற்றபோது அதை மக்களிடம் தவறாகத் திசை திருப்பி விடப்படுகின்ற ஒரு போக்கு இது. பத்திரிகையிலே இப்படி வரும்போது ரொம்ப விஷமத்தனமாக சட்டமன்றத்தில் ஒரு திசை திருப்புகின்ற காரியம் நடைபெற்றதாகத்தான் கருத நேரிடும். திரு. கக்கன் அவர்களிடத்திலே எங்களுக்கு இருக்கிற மதிப்பும், சென்ற ஆட்சிக்காலத்தில் இருந்த மரியாதையும் எவ்வளவு என்பது மக்களுக்குத் தெரியும். திரு. கக்கன் சிலை செய்யப்பட்டு அது எவ்வளவு ஆண்டுக்காலமாக கிடப்பிலே போடப்பட்டிருந்தது என்பதையும், அதை எடுத்து இன்றைக்கு அந்தச் சிலையைத் திறந்து வைத்தது இந்த ஆட்சிதான் என்பதையும் நாடு மிக நன்றாக அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், நானும் திரு. மூப்பனார் மற்றும் முக்கியமான எதிர்க்கட்சிகளுடைய தலைவர்களும் திரு. கக்கன் அவர்களுடைய சிலை இருந்த இடத்திற்குச் சென்று, அவருடைய குடும்பத்தாரோடும் சகோதரரோடும் இருந்து அவர்களுக்கும் மரியாதை செலுத்தி அவர்களெல்லாம் பெருமை கொள்ளத்தக்க அளவிற்கு அந்தச் சிலை திறப்பு விழா நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.



1997 அக்டோபர் 17]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு பழமொழி உண்டு. "சைத்தான் வேதம் ஓதுவதைப்போல" என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தியாகி கக்கன் அவர்களுக்கு தமிழக முதல்வர் அவர்களும், எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்களும், இரண்டு பேரும் காட்டுகிற மரியாதையைவிட வேறு யாரும் காட்ட முடியாது. இப்படிச் சொல்லுகின்ற உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் சென்றமுறை, கக்கன்ஜியினுடைய வாரிசாக இருக்கின்ற மத்திய அமைச்சர் திரு. அருணாச்சலம் அவர்கள் ஒரு விமானத்திலே ஏறிவிட்டார் என்பதற்காக அவர் எப்படி இறக்கிவிடப்பட்டார் என்பதை நினைவிலே வைத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலே ஆதி திராவிடர்களுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக லட்சிய ரீதியாக யார் இருக்கிறார்கள் என்பதை உணர்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கக்கன்ஜி அவர்களுக்கு சிலை வைக்க உத்தரவு போட்டதே புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான். அவருடைய வாரிசுகளுக்கும் கக்கன் அவர்கள் உடல்நலம் இல்லாமல் இருக்கும்போது உதவித்தொகை கொடுக்கச் சொன்னதும் எங்கள் அரசுதான். ஏதோ சைத்தான் வேதம் ஓதுகிறது என்று சைத்தான்தனமாகப் பேசக்கூடாது. ஒரு பிளேனில் போகும்போது முறைப்படி டிக்கெட் ரிசர்வேஷன் செய்து ஏறவேண்டும், அதில்லாமல் இறக்கி விட்டார்கள், இறக்கி விட்டார்கள் என்று சொன்னால் - நான் மந்திரி, நான் எம்.எல்.ஏ. என்று போய் ஃபஸ்ட்-ஆக போய் உட்கார்ந்து விட்டோம் என்று சொன்னால், அதன் காரணமாக இறக்கி விடாமல் என்ன செய்வார்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் அமைச்சர் டிக்கெட் வாங்காமல் போகவில்லை. ஏற்கெனவே அதிகாரிகளை அனுப்பி டிக்கெட் வாங்கினார். 40 பேர் வரக்கூடிய பிளைட்டிலே 24 பேர் வந்தார்கள். அப்படி வந்து. இவர் எஸ்.சி. என்பதற்காக — ஏற்கெனவே

சட்டசபையிலே பேசியிருக்கிறேன். ஒரு அரிஜன் என்பதற்காக - கேரளாவிலே இருந்தது, அங்கே அரிஜன மக்களைக் கண்டால் அங்கேயுள்ள நம்பூதிரிகள் போகும்போது 'சாமியோ' என்று சொல்லிக்கொண்டு போகவேண்டும். அப்புறம் போய் விடுவார்கள், திரும்ப அந்தக் குரல் கேட்டு போன பிறகு வெளியே வருவார்கள் என்று அன்றைக்கே பேசினேன். அந்த மாதிரி ஒரு அரிஜன் எம்.ஏ.பி.எல். படித்து வக்கீலாகப் பணியாற்றி, நாடாளுமன்றத்திலே எல்லோராலும், இந்திய மக்கள் அனைவராலும் பாராட்டப்பெற்ற, புகழப்பெற்ற ஒரு அரிஜனத் தலைவன் அந்த விமானத்திலே ஏறி வந்தால், அந்தக் காற்று பட்டுவிடும் என்ற காரணத்தால்தான் இறக்கி விட்டார்கள் என்று நான் பேசியிருக்கிறேன். ஆக, மிகவும் ஜாதிக் கொடுமையாகத்தான் எண்ணி அவர்கள் இறக்கி விட்டார்கள் என்பதை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சாதி துவேஷம் கிடையாது. குற்றச்சாட்டைச் சொல்வதற்காகவே — ஒரு பிளேன் இருந்தால் இத்தனை டிக்கெட்தான் என்றிருக்கும். டிக்கெட் உள்ளவர்கள்தான் அதிலே ஏற முடியும். முறையில்லாமல் நான் மந்திரி என்று ஏறிவிட்டு, கடைசியிலே தீண்டாமை என்கிறார்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.....

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** He is not yielding.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் தவறான தகவலை அவைக்குக் கொடுக்கிறார்கள். அன்றைக்கு டிக்கெட் வாங்க வேண்டிய பிரச்சினையே கிடையாது. அன்றைக்கிருந்த என்.இ.பி.சி. விமானம் மொத்தமாகக் குத்தகைக்கு எடுக்கப்பட்டு அது சென்னைக்கு வருவதாக இருந்தது. அதிலே டிக்கெட் எடுக்க வேண்டிய



பிரச்சினை முற்றிலுமாக இல்லை, அதற்கு இடம் இல்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது அவர் பிளைட்டை டவுன் பஸ் என்று நினைத்து விட்டார். பஸ்ஸிலே ஏறிய பிறகுதான் டிக்கெட் எடுக்க வேண்டும். இங்கே டிக்கெட் இருந்தால்தான் ஏற்றுவார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே, அப்போது முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களும், அவர்களுடைய மந்திரி சபையிலே உள்ளவர்களும், அதிகாரிகளும் போவதற்காக அந்தப் பிளேனை புக் பண்ணியிருக்கிறார்கள். டிக்கெட் இல்லாமல் என்னை ஏற்றிக்கொள்ளுங்கள் என்று சொன்னால் யார் ஏற்றுவார்கள்? என்னங்க இது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நடந்த உண்மையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அறிய மாட்டார்கள். அந்த விமானம் முறைப்படி வர வேண்டிய விமானம். 24 பேர் டிக்கெட் வாங்கி காத்துக்கொண்டு இருந்தார்கள். திடீரென்று அன்றைய முதலமைச்சர் அவர்கள் அந்த விமானத்தை வாடகைக்கு தானே எடுத்துக்கொண்டார். அதன் காரணமாக அன்று வரவேண்டிய நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள்கூட அந்த விமானத்திற்காக அன்றைக்கு காத்துக்கொண்டு இருந்தார். பிறகு ஜெயலலிதா வருகிறார் என்று சொன்னவுடன், திருநாவுக்கரசு அவர்கள் அதை Cancel செய்துவிட்டு, ரயில் மூலம் வந்துவிட்டார். நம்முடைய அமைச்சரும் போவதற்காகத் தயாராக இருந்தார். இருந்தாலும் அங்கேயிருந்த அதிகாரிகள், முதலமைச்சரோடு 10, 15 பேர்கள்தான் வருகிறார்கள், நிறைய இடம் இருக்கிறது, நீங்கள் தாராளமாக வரலாம் என்று கெஞ்சி கேட்டுக்கொண்டார்கள். அதன் காரணமாக அங்கே காத்திருந்து ஏறிய பிறகு, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நடந்து கொண்ட முறை எவ்வளவு கேவலமானது என்பதைப் பார்த்து இந்த நாடே சிரித்தது, வேதனைப்பட்டது, வருத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு நம்முடைய கக்கன்ஜி அவர்களுக்கு ரொம்ப மரியாதை கொடுப்பதுபோல இங்கே நம்முடைய தாமரைக்கனி அவர்கள் பேசுகிறார்கள். ஒரு நிகழ்ச்சியை நான் சொல்ல விரும்புகிறேன். சுப்ரமணியசுவாமியை A.I.A.D.M.K.-காரர்கள் மதுரையிலே கொலை செய்வதற்காக பல ஊர்களிலிருந்து பெரிய கொலைகாரர்களை எல்லாம் திரட்டி, மதுரைக்குக் கொண்டு வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் கக்கன் அவர்களுடைய மகன்..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** டி.ஐ.ஜி.ஆக-போலீஸ் அதிகாரியாக இருந்த அவர், சுப்ரமணியசுவாமியினுடைய உயிரைக் காப்பாற்றிய ஒரே காரணத்திற்காக, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கிறவரை, அவரை 'பனிஷ்மெண்ட்' என்கிற முறையில் "Condemn" செய்து வைத்திருந்தார்கள். இன்று நம்முடைய அரசுதான், நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசுதான் அவருக்கு உயர் பதவி கொடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நேரம் அதிகமாகிவிட்டது, சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** குறுக்கீடுகள் அதிகமாக இருக்கின்றன. தி.மு.க. ஆட்சிக் காலத்தில், உங்கள் காலத்தில், சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது. எங்கே பார்த்தாலும் மதக் கலவரம், எங்கே பார்த்தாலும் ஜாதிக் கலவரம். லாக்-அப்பில் கைதிகள் சாவு, பெண்கள் கற்பழிப்பு, தினந்தோறும் பத்திரிகையைப் பார்த்தால் தெரிகிறது. போலீஸ் ஸ்டேசஷல் கற்பழிக்கிறார்கள், உங்கள் ஆட்சியில்தான், வேறு எந்த ஆட்சியிலும் இருக்க முடியாது. (குறுக்கீடுகள்) தினம் பத்திரிகையிலே வருகிறது. உங்கள் ஆட்சியிலே வந்து.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பத்மினி, காவல் நிலையத்திலே





கற்பழிக்கப்பட்டது யாருடைய ஆட்சியிலே என்பதை அறிய விரும்புகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏட்டிக்குப் போட்டியாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்து இருக்கிறீர்கள். உங்கள் ஆட்சியிலே நடந்ததற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அங்கே நடந்தது, இங்கே நடந்தது, ஏதோ எங்கள் ஆட்சியிலே தவறு நடந்து இருக்கலாம். பதிலுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். 'எங்கள் ஆட்சியிலே, நல்ல ஆட்சி கொடுப்போம்' என்று சொல்லிவிட்டு, இவை எல்லாம் நடக்கவில்லையா? 1½ வருடத்திலே 1 வருடம் பூராவும் வெட்டு, குத்து, தகராறு, ஜாதிக் கலவரம், மதக் கலவரம் இல்லையா? தென் மாவட்டங்களிலே எவனும் இன்னும் போக முடியவில்லை; எவனும் சினிமாவுக்குப் போகமுடியவில்லை. ரோட்டிலே எவனும் படுக்க முடியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. என். வல்லரசு.

*** திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின்மீது..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே, ஜாதித் தலைவர்கள் தென் மாவட்டங்களிலே நுழைவதற்கு இந்த அரசு தடை விதிக்க வேண்டும். தடை போடுகிறது. வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி, தடையை ரிலாகஸ் செய்து, பழையபடி ஜாதிக் கலவரத்தை இந்த அரசே உண்டு பண்ணுகிற அளவில் இருக்கிறது. ஆகவே, வெளி மாநிலங்களுக்கு இந்த ஜாதித் தலைவர்கள் போய் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, எந்த மதமாக இருந்தாலும் சரி, அவர்கள் வெளி மாநிலத்திற்குப் போகவேண்டும். அல்லது அவர்கள் சொந்த ஊரைவிட்டுப் போக முடியாத அளவில் நீங்கள் ஏற்பாட்டைச் செய்யவேண்டும். தென் மாவட்டங்களிலே..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதித் தலைவர்களுக்கு வேண்டுமானால் தடை விதிக்கட்டும். ஆனால் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, இந்த நாட்டையே *5* ஆண்டுக்காலம் சூறையாடிய இவர்களை நாட்டை விட்டே கடத்த முடியுமா? நாட்டைவிட்டே கடத்துவதற்கு ஆர்டர் பிறப்பிக்கப்படுமா? அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏழை, எளிய அரிசன மக்களுடைய ரத்தத்தில் இருந்து உயிர் குடிக்கக்கூடிய நீர்தானய்யா ஊழல் பேர்வழி. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இருவரும் நேரடியாக கை நீட்டிப் பேசக்கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் மக்களிடத்திலே செல்கிறேன். பொதுப் பணத்தை நான் சூறையாடவில்லை. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆந்திராவில் டிரெயினிங் பழகிவிட்டு இங்கே வந்து தமிழ்நாட்டை நக்சலைட் பூமியாக்கியது இதே டாக்டர் கிருஷ்ணசாமிதான். இவர்கள் இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கிற வரைக்கும், ஜாதிக் கலவரம், மதக் கலவரம் ஓயாது. ஆகவே, இவர்களைத் தமிழ்நாட்டைவிட்டே கடத்தினால்தான் நாடு உருப்படும், ஜாதிக் கலவரம் ஓயும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் மிகத் தவறான ஒரு குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம், உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது நக்சலைட்டுகளினுடைய பூமி அல்ல. இந்த பூமியில் அப்படி ஒரு தீவிரவாதமும் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுக் காலம் இந்த நாடு வர்ணாசிரமத்தினுடைய அடிப்படையிலே, உயர்வு தாழ்வு அடிப்படையிலே பிரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, வர்ணாசிரமத்தினுடைய அடிப்படையிலே பிரிக்கப்பட்டிருக்கிற, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகத்தான், சமூக



நீதிக்காகத்தான் குரல் கொடுத்துக் கொண்டு வருகிறேன். ஆனால் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து இந்த நாட்டிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது, அதற்குப் பதில் சொல்லிக்கொள்ளலாம். தற்போது நேரம் இல்லை அடுத்து நான் உங்களைக் கூப்பிடப் போகிறேன். *(குறுக்கீடு)* அடுத்து உங்களை அழைக்கப் போகிறேன். அப்போது உங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். திரு. பி.என். வல்லரசு, *(குறுக்கீடு)* தாமரைக்கனி, டாக்டர் கிருஷ்ணசாமி, இரண்டு பேரும் உட்காருங்கள். தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். அப்போது உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி தயவுசெய்து அமருங்கள், இரண்டு பேருக்கும் உத்தரவிடுகிறேன். கிருஷ்ணசாமி, தாமரைக்கனி இரண்டு பேரும் தயவுசெய்து அமருங்கள். முதலமைச்சர் அவர்கள் இப்போது பேசுவார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே ... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி உட்காரவும். டாக்டர் கிருஷ்ணசாமி உட்காரவும். முதலமைச்சர் பேசுவார், உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள் கூறிய குற்றச்சாட்டிற்கு ஒரு மறுப்பினை ஒரு வரியிலே நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே எடுத்துக்கூறி விட்டார். 1½ மணிக்குள்ளாக விவாதம் முடிவுற்று அதற்குள்ளேயே நானும் பதில் சொல்லியாக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் விவாதத்திலே பங்குகொண்டு பேச இருக்கிறார். பட்டியலில் அவர் பெயர் இருக்கிறது. எனவே, அவர் இங்கே ஆரம்பித்த மற்ற விரிவான விளக்கங்களை அவருடைய பேச்சிலே வைத்துக் கொண்டு இப்போது அடுத்துப் பேச வருகின்றவருக்கு வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

***திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதியில்லை. திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** நான் அவர் சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி கிடையாது, நீங்கள் உட்காருங்கள். கடைசி தடவையாகச் சொல்கிறேன். இல்லையென்றால் வெளியேற வேண்டும். இனிமேல் யார் எழுந்தாலும் நான் அவர்களை வெளியேற்றுவேன், உட்காருங்கள், திரு. பி. என். வல்லரசு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். ஆனால் எங்களுக்கு மட்டும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய உரிமை. நீங்கள் உட்காருங்கள். உட்காருகிறீர்களா, வெளியேற்றவா? (திரு. பி.ஆர். சுந்தரம் நின்று கொண்டு ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார்) மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் வெளியேறவேண்டும் (திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்று கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தார்). மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரத்தை காவலர்கள் வெளியேற்றவும், வெளியேற்றுங்கள்.

*(திரு. பி.ஆர். சுந்தரத்தின் இருக்கையருகே அவைக் காவலர்கள் வந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரை விட்டுவிடுங்கள்.

*(அவைக் காவலர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.)*

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் இந்த பார்ஷியாலிட்டி எல்லாம் காண்பிக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்குத் தெரியும். நீங்கள் ஒன்றும் எனக்கு அறிவுரை சொல்ல வேண்டியதில்லை. (குறுக்கீடு) அது எனக்குத் தெரியும். பார்ஷியாலிட்டி இருந்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள். பார்ஷியாலிட்டி இருந்தால் இந்த மாதிரி உறுப்பினர்களைப் பேச விடமாட்டேன். (குறுக்கீடு) சரி, இப்போது விடுங்கள். திரு. தாமரைக்கனி வார்த்தைகளை ஒழுங்காகப் பேசுங்கள்.



**திரு. இரா. தாமரைக்கனி:** ஏன் கோபப்படுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். கோபம்தான்படுவேன். மரியாதை இல்லாமல் பேசினால் கோபம்தான்படுவேன். என்ன பார்ஷியாலிட்டி? பார்ஷியாலிட்டி இருந்தால் நான் இங்கே பேரவைத் தலைவராக எப்படி உட்காரமுடியும்? நீங்கள் கீழே உட்காருங்கள். (குறுக்கீடு) ஆமாம், அப்படித்தான் கோபப்படுவேன். உட்காருங்கள். சபையை சபையாக நடத்துவேன். அதை யார் தடுத்தாலும் வெளியேற்றுவேன். நீங்கள் உட்காருங்கள். உங்களுக்குத்தான் அதிக நேரம் கொடுத்திருக்கிறேன். திரு. தாமரைக்கனி, 17 நிமிடங்கள் பேசியிருக்கிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதிலே குறுக்கீடுகள் நிறைய வந்திருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்களுடைய வேலையில்லை. உட்காருங்கள். திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான துணை பட்ஜெட் மீது சில கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, நலிவுற்ற மக்களுக்கு, பல்வேறு நலத் திட்டங்களை தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

வரும் பொங்கலுக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்குவதற்கு ரூ. 24 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும், திருமண உதவித் திட்டத்திற்காக, ஏழைப் பெண்கள், இன்னும் ஊனமுற்றவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக. மேலும், ரூ.21 கோடி கூடுதல் நிதியை வழங்கியிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். 384 புதிய ஜீப்புகள் வழங்கி புதிய சரித்திரம் படைத்து, மேம்பாட்டுத் திட்டங்களை விரைவுபடுத்த நடைபெற்றுக் கொண்டிருக்கிற அரசின் துரித நடவடிக்கைகளையும் நான் பாராட்டுகிறேன்.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முதல் பெண் குழந்தையைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், இரண்டாவது பெண் குழந்தையையும் பாதுகாக்கின்ற கலைஞர் அவர்களின் புதுமைத் திட்டத்தை பெண் உலகமே இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி தொகுதியிலே வாழ்கிற பெண்களுடைய மேம்பாட்டிற்கு அரசு ரூ. 20 கோடி ஒதுக்கித்தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி.என் வல்லரசு] [1997 அக்டோபர் 17

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் திட்டம் இவை யாவும் கலைஞருடைய புரட்சித் திட்டங்களாகும். கலைஞருடைய புதுமைத் திட்டங்களாகும். இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநில அரசும் இதுபோன்ற திட்டங்களைக் கொண்டுவரவில்லை என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு ராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று சொல்கிறார்கள். ஐந்து வருட காலம் ஆட்சியிலே இருந்த ஜெயலலிதா அவர்கள் ஏன் சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு ராணுவத்தை அனுப்பவில்லை என்பதைத் தமிழக மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வீரப்பனைப் பிடிப்பதற்காக முன்னாள் டி.ஜி.பி. தேவாரம் தலைமையில் அதிரடிப் படையை அனுப்பினார்கள். அவர் பிடிக்கவில்லை. மீண்டும் அவரை அனுப்ப வேண்டுமென்று சொல்வதனுடைய மர்மம் என்ன? நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ராணுவத்தை அனுப்பி வீரப்பனைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென்று சொல்வதனுடைய மர்மம் என்னவென்பதை தமிழக அரசும் தமிழக மக்களும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், கடந்த கால ஆட்சியில் வீரப்பனோடு தொடர்பு கொண்டு அ.தி.மு.க. அமைச்சர்களும், ஜெயலலிதாவும் கோடி, கோடியாகக் கொள்ளையடித்த அந்தக் கூட்டுக் கொள்ளையை அவர் வெளியிட்டு விடுவார் என்ற பயத்தின் காரணமாக, சுட்டுக் கொல்ல வேண்டும் என்று சொல்கிறார் என்பதை அரசு உணர்ந்து, வீரப்பனைப் பிடித்து விசாரணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 5 வருட காலத்திற்கு பஸ் கட்டணத்தை உயர்த்துவதில்லை என்று....

நண்பகல் 12-00

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுக்கும், முன்னாள் முதலமைச்சருக்கும் சம்பந்தம் என்று இவர் எந்த ஆதாரத்தை வைத்துப் பேசுகின்றார். முன்னாள் முதலமைச்சருக்கும், வீரப்பனுக்கும் சம்பந்தம் என்று எந்த ஆதாரத்தை வைத்துப் பேசுகின்றார். (குறுக்கீடுகள்)



1997 அக்டோபர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வல்லரசு, நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள், திரு. சுந்தரம் உட்காருங்கள், நான் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நாள் முதலமைச்சருக்கும், வீரப்பனுக்கும் தொடர்பு என்பது அவருக்குத் தெரியாதுபோல் இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி சொல்வது, ஆர். எம். வீரப்பனுக்கும் எனக்கும் உள்ள தொடர்பைப் பற்றி போல் இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி:** சந்தனக்கடத்தல் வீரப்பனுக்கும் உங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். இல்லையெனில் நான் வெளியேற்றிவிடுவேன். உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் உட்கார வேண்டும், எல்லோரும் அவரவர் இடத்தில் அமர வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு சந்தனக் கடத்தல் வீரப்பன் பற்றி சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்து விவாதிக்கப்பட்டபோது, இதே தாமரைக்கனி அவர்கள் இன்றைய முதலமைச்சராகிய எனக்கும், வீரப்பனுக்கும் உறவு இருப்பதாக இங்கே பேசி, அதற்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு வல்லரசு பேசினால் மாத்திரம் அவருக்குக் கோபம் வருகிறது. அதன் காரணம்தான் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர்களும், மற்ற தோழமைக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றவற்றை அவைத் தலைவர் அவர்களே பார்த்துக் கொள்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நாட்களுக்கு முன்னால், வீரப்பன் விவகாரம் பற்றிப் பேசும்போது, தாமரைக்கனி அவர்கள் பகிரங்கமாக முதலமைச்சர் அவர்களுக்கும், வீரப்பனுக்கும் தொடர்பு உண்டு என்று பேசினார். அது அனுமதிக்கப்பட்டது. ஆகவே, அமைதியாக உட்கார்ந்து கேட்க வேண்டும். இங்கே, இரண்டு பேர், மூன்று பேர்களை வைத்துக் கொண்டு, அவையை நடத்துவதற்குக் குந்தகமாக இருந்தால் நான் தூக்கி வெளியே எறிவேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் பேசியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) ஆமாம். அப்படித்தான் சொல்வேன். தினந்தோறும் நீங்கள் இப்படிச் செய்தால், நான் அப்படித்தான் சொல்வேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் சொல்வது ஒன்றையும் கேட்கத் தயாராக இல்லை. நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. நான் ஏற்கெனவே வெளியேற்றி, மறுபடியும் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுதான் உட்கார வைத்தேன். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், சொல்வது ஒன்றும் அவைக் குறிப்பிலே ஏறாது. திரும்ப அவையை விட்டு வெளியேற்றுவேன். (குறுக்கீடு) நான் தெளிவாக ஒன்றை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவை மரியாதையோடு, மரபோடு நடக்க வேண்டும். தாமரைக்கனி நாறுமாறாக குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது நான் அனுமதித்தேன். மற்றவர்கள் சொல்லும் போது நீங்கள் தகராறு செய்தால், நிச்சயமாகத் தூக்கி வெளியே எறிவேன் என்று வலியுறுத்திச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) யார் தப்பாகப் பேசினாலும், அப்படித்தான் செய்வேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் தீர்ப்புக் கூறிவிட்டேன். திரு. வல்லரசு நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 12-05*

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டண உயர்வை எந்தச் சூழ்நிலையிலும் 5 வருட காலத்திற்கு உயர்த்த மாட்டேன் என்று தமிழக முதல்வர் அவர்கள் இங்கே கூறியிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால், இந்த ஆண்டில் மக்கள் படுகின்ற கஷ்டங்களைப் பார்த்து, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மினி பஸ் விட அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதை விரைவில் விட வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே ஒரு நல்ல அரசு இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜாதிக் கலவரத்தைத் தூண்டி இந்த ஆட்சிக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்று சிலர் திட்டமிட்டுச் செயல்பட்டுக்



கொண்டிருக்கிறார்கள். அப்படி ஜாதிக் கலவரத்தை தூண்டுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்புச் சட்டத்திலே, சிறையிலே இருந்த சில ஆயிரம் ஏழை மக்களை இந்த அரசு விடுதலை செய்திருக்கிறது. அதேபோல, தமிழகம் முழுவதும், தேவர் இன மக்கள் மீது ஆயிரக்கணக்கான பொய் வழக்குகள் இன்றையதினம் போடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ராஜபாளையம் போன்ற பகுதிகளில் ஃபார்வேர்டு பிளாக் கட்சியினரை பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்திருக் கிறார்கள். நானும் சட்டமன்ற உறுப்பினர் சந்தானம் போன்றவர்கள் எல்லாம் காவல் துறை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும்கூட இன்னும் பார்வேர்டு பிளாக் கட்சியினரை பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியாறு அணையைத் திறந்து இன்றையதினம் மதுரை மாவட்ட விவசாயிகளைப் பாதுகாத்து இருக்கின்ற மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் மதுரை மாவட்ட விவசாயிகள் சார்பாகப் பாராட்டுகிறேன். பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். உசிலம்பட்டித் தொகுதியில் திருமங்கலம் பிரதானக் கால்வாயில் நவம்பர் முதல் வாரத்தில் தண்ணீர் திறந்துவிட வேண்டுமாய் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி உணர்வு எந்த அளவுக்கு மக்களை ஆட்டிப் படைக்கின்றது என்பதை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எனவேதான் நாங்கள் ஒரே ஜாதி, ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒரே நாடு என்ற அடிப்படையில் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தத் துணை மதிப்பீடு கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதோடு ஆங்காங்கே உள்ள சில அம்சங்களை கோடிட்டுக் காட்டலாம் என்று ஆசைப்படுகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

ஓரளவிற்கு தமிழகத்தில் செழிப்பான மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். கடந்த பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துப் போய் மக்கள் வேதனைப்படுகிறார்கள். அதனுடைய காரணம் பலரும் பலவிதமாக பேசினாலும்கூட சமீப காலத்தில் ஒருசில ஆண்டுகளாகவே கானகம், வனம், மிகவும் அதிகமாக அழிக்கப்பட்டிருக்கிறது. அங்கு

சென்று பார்க்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் என்னைப் பல தடவை அழைத்தார்கள். நான் கடந்த 19-7-1997 அன்று கன்னியாகுமரி மாவட்டம் வேலிமலை சரகம், எருமைப்பட்டி என்று சொல்லக்கூடிய வனப் பகுதிக்கு பத்திரிகை நிருபரோடு சென்று பார்த்தேன். கிட்டத்தட்ட 5 கிலோமீட்டர் உள்ளே சென்றோம். அதாவது 3 ஆண்டுகளுக்குப் பின்னால் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் மதிப்புள்ள மரங்கள் அங்கே அழிக்கப்பட்டிருக்கின்றன. 19-ஆம் தேதி நாங்கள் சென்று பார்த்தபோது ஆயிரம் தேக்கந்தடிகள் ஒருசில நாட்களுக்கு முன்னால் வெட்டப்பட்டிருக்கின்றன. கையை வைத்துப் பார்த்தால் அந்த தேக்கந்தடி வெட்டியிருக்கின்ற அந்தச் சாறுகூட தென்படுகிறது. எனவே, நான் நம்முடையை வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நான் அங்கு சென்று பார்த்து அந்த வீடியோ கேஸட் .....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** துணைத் தலைவர் அவர்களே, 10 கோடி ரூபாய் அளவிற்குப் போகவில்லை. 58 தேக்குத்தடிகள்தான் வெட்டப்பட்டு அது சம்பந்தமாக அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவல் தந்திருப்பார்கள் என்று கருதுகின்றேன். என்னுடன் அதிகாரிகளை அனுப்பினால்கூட-நான் வீடியோ கேஸட்டையும், போட்டோவையும், பத்திரிகைச் செய்திகளையும் கொண்டு வந்திருக்கிறேன் உங்களுக்குத் தருவதற்காக. பத்திரிகைச் செய்திகூட ஏராளமாக இருக்கிறது. பல பத்திரிகையாளர்கள் வந்து பார்த்தார்கள்—அதையெல்லாம் காண்பிக்கிறேன். தாங்களும் அதைத் தக்கபடி விசாரித்து அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து மேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்னொன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆங்காங்கே வெடிகுண்டுச் சம்பவங்கள் எல்லாம் நடந்தன. சமுதாய விரோதிகளுக்கு இந்த காட்டுத்தடியை வெட்டி விற்று அவர்கள் வருமானம் தேடிக் கொள்கின்றார்கள். அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் விலை மிகக் குறைந்து, ரப்பர் உற்பத்தியாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே அரசாங்கம் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாம்பழத்து அணை--கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு பல ஆண்டுகளாக பத்மநாபபுரம் தொகுதி மக்கள் மட்டும் அல்ல, மாவட்டத்தில் உள்ள பல சட்டமன்ற உறுப்பினர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மையமான பகுதியில் இருக்கக்கூடிய மாம்பழத்து அணையைக் கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட அங்கே வந்து பார்த்ததாக நாங்கள் செய்தி அறிந்தோம். இதற்கு முன்னால் அங்கு வந்திருந்த உறுதிமொழிக் குழுகூட விசாரித்து மாம்பழத்து அணையினுடைய அத்தியாவசியத்தைப் பற்றி அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகின்றேன்.

**பிற்பகல் 12-10**

இன்னும் ஒன்று. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருப்பிடச் சான்றிதழ் வேண்டுமென்று கேட்கிறார்கள். அது அதிகமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள படித்த மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் ஆக்கிவிடும் என்று கன்னியாகுமரி மாவட்ட மக்கள் வருந்துகிறார்கள். காரணம், கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய பிரச்சினை மிக முக்கியமானது. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் கல்வி கற்று வேலைவாய்ப்புக்கு வருவதே பெரிய காரியம். அந்த வாய்ப்பைப் பறிக்கின்ற விதத்தில் பிற மாநிலத்தவர்கள் வந்து பதிவு செய்து அவர்களுடைய முன்னுரிமை பாதிக்கக்கூடாது என்ற கிளர்ச்சி நாடு முழுவதும் இருக்கிறது. இருந்தாலும் Residential Certificate தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தருவார்களானால் அவர்களை இணைத்துக்

கொண்டு அவர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கலாம். ஆனால் அதே நோத்தில் மண்ணின் மைந்தர்களான மாவட்ட மக்கள் புறக்கணிக்கப்படக்கூடாது.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவித தொழில் வாய்ப்பும் இல்லை. படிப்பு அறிவு அதிகமாக இருக்கிற மாவட்டம். எனவே அவர்களுக்கு ஓரளவுக்கு வெளி மாவட்டங்களிலும் வேலை கிடைக்க ஆவன செய்யவேண்டும். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உதயகிரிக் கோட்டையில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஆரம்பிப்பதற்காக மத்திய அரசினுடைய வேளாண்மை நிறுவனம் வந்து இடத்தைப் பார்த்து இருக்கிறது. மத்திய அரசே அதனுடைய முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டு, இடம் மட்டும் மாநில அரசு தந்தால் போதும் என்று சொல்லி, அந்த அதிகாரிகள் என்னை வந்து பார்த்தார்கள். மாவட்ட ஆட்சியரையும் பார்த்து இருக்கிறார்கள். அந்த உதயகிரிக் கோட்டையில் ஏராளமான ஏக்கர் நிலம் இருக்கிறது. மகாராஜா ஆட்சிக் காலத்தில் மேல்நா என்று சொல்லக்கூடிய அன்னிய நாட்டுப் படை வீரர் ஒருவர் அங்கே வந்து இறந்தார். அவருடைய கல்லறை அங்கே இருக்கக்கூடிய காரணத்தால் அது தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தினுடைய கையில் இருக்கிறது. அதை எப்படிக் கொடுப்பது என்று ஒரு கேள்வி எழுந்து இருக்கிறது. அந்தக் கல்லறை ஒரு ஓரத்தில்தான் இருக்கிறது. பாக்கி இடம் ஏராளமாக இருக்கிறது. 10 சென்ட் இடமே அந்தக் கல்லறைக்குப் போதுமானது. ஏராளமான ஏக்கர் இடம் மீதி இருக்கிறது. அதை இந்த வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஆரம்பிக்க மத்திய அரசுக்குக் கொடுத்து உதவ அன்பாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, சர். சி.பி. இராமசாமி ஐயர் அவர்களுடைய நினைவு மண்டபம் பத்மநாபபுரம் நகராட்சியினுடைய மத்தியப் பகுதியில், தேசீய நெடுஞ்சாலையையொட்டி இருக்கிறது. அது வருவாய்த் துறையின்கீழ் பராமரிப்பு இல்லாமல் மோசமான நிலையில் இருக்கிறது. அதை நகராட்சிக்கு மாற்றித் தந்தால் நகராட்சிக்கு வருமானம் ஏற்படுத்தக்கூடிய வகையில் அதைச் சுற்றி கடை கட்டி வாடகைக்கு விடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் வருவாய்த் துறைக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு



வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி அதை பத்மநாபபுரம் நகராட்சிக்குத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் க. கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) சரி சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலம் 1996 டிசம்பர் மாதத்திற்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எந்தவிதமான பட்டுவாடாவும் நடக்கவில்லை என்று கன்னியாகுமரி மாவட்ட மக்கள் வருந்துகிறார்கள். எனவே, மற்ற மாவட்டங்களைப் போன்று விரைந்து வீட்டு வசதி வாரியத்தினுடைய அந்த ஒதுக்கீட்டை கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று எண்ணுகிறேன். ஒரு ஊரினுடைய பெரிய பிரச்சினை. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலூக்காவில் மல்லசமுத்திரத்தில் காளியப்பட்டி என்று சொல்லக்கூடிய ஊரில் கிட்டத்தட்ட 250 வீடுகள் அரசின் புறம்போக்கு நிலத்தில் இருக்கின்றன. அது ஆலயப் புறம்போக்கா; அரசுப் புறம்போக்கா; என்ற பிரச்சினையில் 250 வீடுகள் உள்ள அந்த இடத்திற்குப் பட்டா கொடுக்காத நிலை இருக்கிறது. எனவே, தலைமுறை, தலைமுறையாக வாழக்கூடிய அந்த ஊர் மக்களுக்குப் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு, வந்தே மாதரம் என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான துணைமானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய கருத்தை நான் முன்வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் கடந்த சட்டமன்ற தொடர்களில், அதாவது கடந்த 50 ஆண்டுக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு வேலை

வாய்ப்புகளில் எவ்வளவு இட ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது என்பதை வெள்ளை அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தி வந்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை ஏற்று முதல்படியாக ஒரு குழுவை அமைத்து, அந்தத் தேக்க நிலை உள்ள இடங்களைக் கண்டுபிடிப்பதற்கும், எதிர்காலத்திலே அதை நிரப்புவதற்கும் ஒரு குழுவை நியமித்திருக்கிறீர்கள். அதற்காக நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; முதல்வரவர்களைப் பாராட்டுகின்றேன்.

பிற்பகல் *12-15*

அதேபோல, *14* பல்கலைக்கழகங்களில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவர்கூட துணை வேந்தராக இல்லை என்ற என்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தேன். அதனுடைய.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றுதான் சொன்னார்கள்; திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலே ஒருவர் என்று.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்னுடைய ஆதங்கத்திற்கு இனி போடக்கூடிய வகையில் *3* துணை வேந்தர்கள் இல்லாவிட்டாலும்கூட, முதற்கட்டமாக பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் ஜெகதீசன் அவர்களைத் துணை வேந்தராக நியமித்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேவேளையில், நான் இந்த மாமன்றத்தில் பெருத்த வேதனையுடனும், துக்கத்துடனும் நின்று கொண்டிருக்கின்றேன். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே, ஏப்ரல் மாதத்திலே பேசுகின்றபொழுது, மதுரை மாவட்டம் மேலவளவு கிராமத்தில் ஒரு பஞ்சாயத்துத் தலைவர் செயல்படவிடாமல் தடுக்கப்படுகின்றார் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டியிருந்தேன். ஆனால் அவர் மட்டுமல்ல; துணைத் தலைவர் உட்பட *7* பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்—இன்று படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அதற்குப் பிறகு, கடந்த *6* மாத காலத்தில் தமிழகத்தில் எத்தனையோ தாழ்த்தப்பட்ட தலித் இன சகோதரர்கள் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களையெல்லாம் குறிப்பிடுவதற்கு நேரமில்லை. ஆனால் அது ஒரு பக்கம்.



அடுத்த பக்கம், சுதந்திரம் பெற்று *50* ஆண்டுக் காலத்திற்குப் பிறகும், குந்துவதற்கு வீடு இல்லாமல் வாடிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், தலித் மக்கள் தங்களுடைய சொந்தச் செலவிலே கட்டுகின்ற வீடுகளையெல்லாம் வெடிகுண்டுகளை வைத்தும், கடப்பாறைகளையும், மண்வெட்டிகளையும் வைத்தும் இடித்துத் தள்ளக் கூடிய ஒரு மோசமான நிலையை நான் இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இராஜபாளையத்திலே, எந்தக் குற்றமும் செய்யாத கிளவிகுளத்தைச் சேர்ந்த, சங்கரலிங்காபுரத்தைச் சேர்ந்த, அமச்சியார்பட்டியைச் சேர்ந்த, மங்காபுரத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்த வீடுகளையெல்லாம் சில ஆதிக்க சாதி வெறியர்கள் தரைமட்டம் ஆக்கியிருக்கிறார்கள்.

அதேபோல, இந்திய நாட்டினுடைய ஜனாதிபதியாக இன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு வாக்களித்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி என்று போஸ்டர் அடித்து ஒட்டிய காரணத்திற்காக ஒரு சிறு மோதல் நடந்து, அந்த மோதலிலே சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை. அவர் பிறந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் *250*-க்கும் மேற்பட்டவர்கள் வாழ்கின்ற ஆர்.கே. பேட்டையிலே அந்த வீடுகளெல்லாம் தாக்கப்பட்டிருக்கின்றன.

*10, 15* தினங்களுக்கு முன்பு தாழையூத்துக்கு அருகிலே இருக்கக் கூடிய கரையிருப்பிலே பட்டப் பகலிலே *250*-க்கும் மேற்பட்ட வீடுகளை அதிபயங்கரமான வெடிகுண்டுகளை வைத்துத் தகர்த்திருக்கிறார்கள்.

நேற்றுகூட எழுமலைக்கு அருகிலே சூலப்புரம் என்ற கிராமத்தில் ஒரு கோயில் விசேஷத்திலே முதலிலே அவர்கள் கொண்டாடி விட்டார்கள். இரண்டாவது தலித் மக்கள் செய்கின்றபொழுது தடுக்கப்பட்டு வெடிகுண்டுகள் வீசி ஒலைப்பட்டி என்ற கிராமமே அழிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக, நாங்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த *1991*-லேயிலிருந்து *1996* வரையிலும் தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவே வெட்கித் தலைகுனிய வேண்டிய அவலநிலையிலே ஒரு ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த ஆட்சிக்கு ஜெயலலிதா தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். அந்த ஆட்சியை எப்படியாவது அகற்ற

வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு கடைசிவரையிலும் பாடுபட்டவர்களும், வாக்களித்தவர்களும் தலித் மக்கள் என்பதைத் தயவுகூர்ந்து இந்த மாமன்றமும், தமிழக முதல்வரவர்களும் அறிய வேண்டும். ஆனால் அப்படி ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பிறகும், எங்களுக்கு இந்த அவலநிலை தொடர வேண்டிய அவசியம் என்ன? எங்களுடைய மக்கள் ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல; அராஜகவாதிகள் அல்ல; ஏதோ இங்கே அராஜகவாதத்திற்கும், ஆக்கிரமிப்புக்கும், ஊழலுக்கும் பெயர்போன தாமரைக்கனியைப் போன்றவர்கள் வேண்டுமென்றால் குற்றச்சாட்டுகளைச் சொல்லலாம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொல்லட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அராஜகத்திற்குப் பெயர்போன தாமரைக்கனி என்ற வார்த்தையைத் தயவுசெய்து நீங்கள் நீக்க வேண்டும்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் இதே போன்ற குற்றச்சாட்டை டாக்டர் கிருஷ்ணசாமி மீது அவர்கள் தொடுத்திருக்கின்றார்கள். அதற்கு அப்போதே இவர் பதில் சொல்ல ஆரம்பித்தார். அப்போது நாம், அவர் பேசுகின்ற நேரத்திலே குறிப்பிடலாம் என்று சொன்னோம். திரு. தாமரைக்கனி, கிருஷ்ணசாமி அவர்களை நாட்டைவிட்டே வெளியேற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, ஓர் உறுப்பினர் இப்படி வார்த்தைகளை, எந்த அளவிற்கு உபயோகிக்க வேண்டுமோ அதை மீறி உபயோகிக்கும்போது, மற்றவர்கள் சொல்வதையும் தாங்கக் கூடிய மனம் வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம், நீங்கள் உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, நீங்கள் பேசும்போது இதேபோல, வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள். அப்போது, அவர் எழுந்து பதில் சொல்ல அனுமதி கேட்டார். "நீங்கள் பேசும்போது வாய்ப்பு தருகிறேன்" என்று அவரிடம் சொன்னேன். திரு. தாமரைக்கனி நீங்கள் உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசட்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதுபோன்று அராஜகத்திற்கும், ஊழலுக்கும் பெயர் பெற்றவர்களெல்லாம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் மக்களுடைய கோரிக்கை. என்னைப் பொறுத்தமட்டிலும், நான் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பாதையைச் சரியாகக் கடைப்பிடிப்பவன். எனக்கென்று தனிப்பட்ட முறையிலே ஆசாபாசங்கள் கிடையாது. சில அரசியல் கட்சிகள், நான் வளர்ந்து வருவதையும், எங்களுடைய மக்களெல்லாம் ஒன்றுபடுவதையும் பொறுக்கமுடியாமல் அல்லது கடந்த ஆட்சியில் இருந்தவர்கள், தாங்கள் வீழ்த்தப்பட்டதனால், பழி வாங்கும் நோக்கத்தோடு, பல காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். நாளை சில விஷயங்களை நான் வெளிச்சத்துக்குக் கொண்டுவர இருக்கிறேன். நாங்கள் ஆகஸ்ட் 6-ஆம் தேதி பேரணி நடத்தியபோது, இந்த ஆட்சியும் எங்களுக்குத் தொல்லை கொடுத்தது. எப்படியாவது இந்தக் கிருஷ்ணசாமியை விலை கொடுத்து வாங்கிவிடலாம் என்று சில ஓநாய்கள் கண்ணீர் வடித்தன. தலித்தவர்களுக்கு ஆதரவு என்று எங்களைக் கொச்சைப்படுத்த முயற்சி எடுத்தார்கள். இந்தக் கிருஷ்ணசாமி இலட்சியத்திற்காக தலையை வேண்டுமானால் இழப்பான். விலை போகமாட்டான் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படித்தான் நான் பிறந்திருக்கிறேன். அப்படித்தான் நான் வளர்ந்திருக்கிறேன். எனவே, நான் விரும்புவது, வேண்டுவது, நான் என்னுடைய முழு நேரத்தையும் அர்ப்பணித்துக்கொண்டிருப்பது, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுக் காலம் ஆகியும்கூட, இன்னும் உண்ண உணவு இல்லாமல், இருக்க இடம் இல்லாமல், இன்னும்கூட பொது வழியிலே நடக்க முடியாமல், பொது இடங்களைப் பயன்படுத்த முடியாமல்—அதுகூட தமிழக அரசு அறிக்கையிலே வந்திருக்கிறது. நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்—பொதுக் கோவில்களுக்குள்ளே நுழைய முடியவில்லை. உணவகத்துள்ளே சமமாகச் சென்று உண்ண அருந்த

முடியாத நிலை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இதை எதிர்ப்பதிலே நான் கடுமையாக இருக்கிறேன். என்னைப் பற்றி பயங்கரவாதி, நக்சலைட் என்றெல்லாம் சொன்னார்கள். தாமரைக்கனி சொல்லட்டும். ஆம் நான் பிறப்பிலேயே ஒரு சமுதாயத்தை உயர்வு தாழ்வு பாராட்டி, இரண்டு கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்களை தாழ்த்திப் பார்க்கக்கூடியவர்களுக்கு எதிராக, அந்தத் தீண்டாமைக்கு எதிரான தீவிரவாதிதான். தாமரைக்கனி போன்ற, ஜெயலலிதா போன்ற அல்லது அந்தக் கும்பலைப் போன்ற, தாழ்த்தப்பட்ட மக்களைப் பழிவாங்க வேண்டும் அல்லது தாழ்த்தப்பட்ட மக்களைத் தீர்த்துக் கட்ட வேண்டுமென்று நினைக்கக்கூடிய பயங்கரவாதிகளுக்கு எதிரான பயங்கரவாதிதான். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தே கிடையாது. அதை நான் எச்சரிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) Your time is already over, kindly resume your seat. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, பாதிக்கப்பட்ட இரண்டாயிரம் மக்களுடைய எழுச்சி என்பது ஒரு ஆட்சிக்கு எதிரானதல்ல. இது ஒரு பிரச்சினை. நாங்கள் வேறுபடுத்தப்படுகிறோம். நாங்கள் ஆதிக்கத்திற்கு ஆளாகிறோம். இந்த அடிப்படையில் இந்த மக்கள் நடத்துகிற போராட்டங்களை நசுக்கக்கூடிய வகையிலே இந்த அரசு நடந்து கொள்ளக்கூடாது. அப்படியெல்லாம் போராட்டத்தை நடத்துகின்ற இந்த ஏழை எளிய மக்களைக் காவல் துறையினர் துன்புறுத்தி வருகிறார்கள், அடிக்கிறார்கள், தொந்தரவு செய்கிறார்கள்; எளிய வழக்குகளுக்கெல்லாம் தேசிய பாதுகாப்புச் சட்டமும், குண்டர்கள் சட்டமும் இந்த மக்கள் மீது பாய்கின்றன. ஆகஸ்ட் 13-ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டமும் குண்டர் சட்டமும் விலக்கிக் கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை வட மாவட்டங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் விலக்கு அளிக்கப்படாமல் மீண்டும் மீண்டும் போடப்படுகின்றன. தயவுகூர்ந்து அப்படியொரு பழிவாங்கக்கூடிய நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடக்கூடாது. அச்சட்டங்களின் கீழ் போடப்பட்ட வழக்குகளெல்லாம் வாபஸ் வாங்கப்படும் என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும். சமத்துவபுரம், சுந்தரலிங்கம் . . . (குறுக்கீடு)



*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. ஜி. பழனிசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நான் இப்போது திரு. பழனிசாமியைப் பேச அழைத்துவிட்ட பிறகு டாக்டர் கிருஷ்ணசாமி அமருவதுதான் நல்லது. டாக்டர் கிருஷ்ணசாமி உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: டாக்டர் கிருஷ்ணசாமி மற்றும் திரு. பி. ஆர். சுந்தரம்—நான் பேச அழைத்திருப்பது திரு. பழனிசாமி அவர்களைத்தான்; தயவுசெய்து நீங்கள் இருவரும் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையில், தேவையற்ற விழாக்களுக்கு வீண் செலவு செய்யாமல், தேவையற்ற திட்டங்களுக்கு எதிர்பாராச் செலவினத்திலேயிருந்து செலவு செய்யாமல், உருப்படியான நல்ல திட்டங்களுக்காக பணம் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதற்காக செலவாகியிருக்கிறது என்பதால் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், வறுமை கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய மக்களுக்கு வேஷ்டி, சேலை, என்றும் இல்லாத அளவிற்குப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு மனைப்பட்டா, கடலோரமாக வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், திருமண உதவித் தொகை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தியது, சமத்துவபுர வீடுகள் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற

[திரு. ஜி. பழனிசாமி] [1997 அக்டோபர் 17

திட்டங்களுக்காக இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகமாக நிதியொதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேபோன்று காவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவது, ஊராட்சி ஒன்றியங்களுக்குப் புதிய ஊர்திகள் வழங்குவது, போன்ற திட்டங்களுக்காக இப்போது செலவழிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியவைகளாகும். முன்னாளில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நடந்த சட்டமன்றக் கூட்டங்களிலே இதுபோன்ற சில பொருட்களைக் குறித்து செலவு செய்யப்பட்டதாக நான் கண்டது கிடையாது. வீண் செலவு, விளம்பரத்திற்காக செலவு செய்யப்பட்டது ஆகிய அந்தப் பொருட்களைப்பற்றி விவாதிக்க வேண்டிய நிலை மாறி, இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே மக்களுக்குத் தேவையான திட்டங்களுக்கு நிதி அதிகமாகச் செலவழிந்திருந்தாலும்கூட, இன்றைக்கு அதனால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

அதேநேரத்தில், கடந்த காலங்களில் கடந்த மாதங்களில், நடந்திருந்த சம்பவங்களைக் குறிப்பிடுவது எனது அரசியல் கடமையென்று கருதுகிறேன். குறிப்பாக, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்தது, என்றும் இல்லாத வகையிலே எல்லா மக்களுக்கும் எல்லா வசதிகளும் கிடைத்திட வேண்டும் என்பதற்காக அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்றாலும்கூட, அதிலே சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதை எனது அரசியல் கடமையாகக் கருதுகிறேன். எல்லா வசதிகளும் இருக்கிற, மக்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிற அந்த இடத்தை மட்டும், அந்த ஊரை மட்டும் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்வது என்பது சரியல்ல. எனவே, எல்லா வசதிகளும் இருக்கிற ஊரை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்வது என்பது சரியில்லை. அநேகமாக, மக்கள் தொகை, மக்கள் எண்ணிக்கைக் குறைவாக இருந்தாலும், அந்த மாதிரி இடங்களை, பல திட்டங்கள் நிறைவேற்றப்படாத அந்த மாதிரியான இடங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகத்தில் கொண்டு போய்க் கொடுக்கிறபோது, இப்போது பல இடங்களிலே அது மறுக்கப்படுகிறது. அதற்கு, மக்களுடைய எண்ணிக்கையின்



1997 அக்டோபர் 17] [திரு. ஜி. பழனிசாமி]

அடிப்படையிலேதான் அந்த ஊரை இந்தத் திட்டத்தின்கீழ் எடுப்பதற்கு உத்தரவு இருக்கிறது என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூறி, அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடத்திலேதான் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது சரியில்லை. ஆக, முற்றிலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படாத சில சிற்றூராட்சிகளை எடுத்து அந்தப் பணிகளைச் செய்வது என்பது சரியாக இருக்கும். அதற்கு, ஒரு மாற்றத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சமத்துவபுரத் திட்டத்தின்கீழ், புதிதாக 100 வீடுகள் கட்டி, அனைத்துப் பகுதி, அனைத்து இன மக்களும் அங்கே குடியேற வேண்டும் என்று விரும்புவது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால், இப்போது ஜாதி மோதல்கள் மற்றும் இருக்கக்கூடிய சமூக மோதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தச் சமத்துவபுரத் திட்டம் எல்லைக் கல்லாக இருந்த போதிலும்கூட, ஆதிதிராவிட மக்களும், அனைத்துப் பகுதி மக்களும், விரும்பக்கூடிய காரணங்களைச் சொல்லி மோதல்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலையைத் தவிர்க்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பொதுச் சுடுகாட்டை நீங்கள் தமிழகம் முழுமைக்கும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆதிதிராவிட மக்கள், பல பிற்படுத்தப்பட்ட மக்கள் கிராமப்புறங்களில் ஆற்றங்கரையோரங்களையும், வாய்க்கால்களையும் சுடுகாடுகளாகப் பயன் படுத்துகின்ற கொடுமையான நிகழ்ச்சிக்கு மாறாக 'சமத்துவபுரம்' போன்ற திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

அதுபோன்று, 'நமக்கு நாமே' திட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டுமானால், அதற்கு 5 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றே கருதுகிறேன். தூர்வாரும் பணியிலும், வாய்க்கால் வெட்டும் பணியிலும், சாலை போடும் பணியிலும் ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களையும் பயன்படுத்தி அந்தத் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய முனைப்புகள் இன்றையதினம்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால், அந்தப் பகுதி மக்களிடையே அரசின் சார்பாக சாலைகள் போட்டுக் கொடுக்கிறார்கள் என்ற நல்ல நோக்கத்தோடு அவர்களும் முனைப்போடு அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மக்களிடையே ஆர்வம் உள்ள திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, மாவட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அநேகமாக ஆறுகளில் தூர் எடுப்பது, கால்வாய் வெட்டுவது, குளங்களைச் சீரமைப்பது போன்ற திட்டங்கள் இன்றையதினம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (மணியடிக்கப்பெற்றது)

தனியார் போக்குவரத்துக் கழகம் ஒன்றில் இப்போது 400 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கம்பெனியின் முதலாளியால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோர் வருகின்ற 29-ஆம் தேதி பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண்பதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். விரைவில் அதன்மீது முடிவு எடுத்து அந்த 400 தொழிலாளர் குடும்பங்களையும் வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக உண்மையிலேயே நன்றி.

அதுபோன்று செல்லம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் கொடுத்த மனு ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்து இதற்கும் தீர்வு காண ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று கில்லட்டின் நேரம். நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேசி முடித்துவிடுகிறேன். இந்த ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். இது காவல் துறை பற்றிய பிரச்சினை. அண்ணா சிலைக்கு எதிர்ப்புறம்—இந்தப் பகுதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொகுதியில் வருகிறது. அண்ணா சிலைக்கு எதிர்ப்புறம் உள்ள காவல் நிலையத்தின் காவல் துறை உதவிஆணையர் மற்றும் காவல் துறை ஆய்வாளர் எனக்கு முன்பே தெரிந்தவர்கள். அவர்கள் சட்டமன்றக் கூட்டம் நடைபெறும்



நாட்களில்கூட இங்கு காவல் பணியில் இருக்கக்கூடியவர்கள். அங்கு 20 ஆண்டுகளாக டீ கடை வைத்து நடத்தி வந்தவரின் கடையை இந்த இரண்டு பேரும் அடித்துத் தரைமட்டம் ஆக்கியதைப் பார்த்தேன். அப்போது நான் பக்கத்தில் டெலிபோன் பூத்தில் போன் செய்து கொண்டிருந்தேன். நான் அவர்களிடம் என்ன காரணத்திற்காக அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டேன். ஏற்கெனவே 4 பேரை அடித்து, வேனில் ஏற்றிக் கொண்டு போகின்றதைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அந்தக் கடைக்காரர், "என்னிடத்தில் தீபாவளிக்கு 5,000 ரூபாய் மாமூல் கொடுங்கள் என்று கேட்டார்கள், கொடுக்க முடியாது என்று சொன்னதற்கு இப்படியெல்லாம் செய்கிறார்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்" என்று சொன்னார். அவர்களை அழைத்துக் கொண்டு போய் ஸ்டேஷனில் வைத்திருந்தார். மேலும், காவல் துறையைச் சார்ந்தவர்கள், " நான் எப்படி இந்த ஸ்டேஷனுக்கு வந்தேன் தெரியுமா, 2 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறேன், அதையெல்லாம் நான் வசூல் பண்ண வேண்டும்" என்று சொன்னதாகத் தெரிகிறது. (குறுக்கீடு) சமீபத்தில் இரண்டு நாளைக்கு முன்பு நடந்தது. (குறுக்கீடு) அவர் எந்த வருடம் வந்தார் என்பது தெரியவில்லை. நம் ஆட்சியில் கொடுத்ததாக நான் கருதவில்லை. அவர்கள் சொன்னதை நான் சொல்கிறேன். அவர்கள் ஒரு ரவுடியை விட்டுக் கடிதம் எழுதச் சொல்லி, அவர் கடையில் டீ சாப்பிட்டதாகவும், அவர் சாப்பிட்ட டீயில் ஒரு புழு இருந்ததாகவும், அதைக் கேட்டதற்கு தகராறு செய்ததாகவும் சொல்லி, இரண்டு பேரை உள்ளே வைத்திருக்கிறார்கள். இதை நான் மறுக்கவில்லை. ஆதாரத்தோடு சொல்கிறேன். விசாரணை செய்து பார்க்க வேண்டும். இல்லையென்று சொன்னால் அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்று தெரிந்தால் என்மீது நடவடிக்கை எடுக்கலாம், பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். இதுபோன்ற மோசமான நிகழ்ச்சி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியில் நடைபெறுகிறது என்று சொன்னால், காவல் துறைக்கு ஒரு களங்கம் ஏற்படுகின்ற இதுபோன்ற நிகழ்ச்சிகளை உடனடியாகக் கண்டறிந்து தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

பிற்பகல் 12-35

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுகிய காலத்திற்குள் பேச வேண்டுமென்று நான்

கருதுகிறேன். எல்லோரும் பேசி நாங்கள் விடுபட்டுப் போய் விடக்கூடாது என்ற நோக்கத்திலே பேசுகிறேன். முக்கியமாக ஒருசில கருத்துக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

துணை மானியக் கோரிக்கைகள் இதனுடைய மதிப்பீடுகளைப் பார்த்தால் இந்த அரசு எவ்வளவு விரைந்து செயல்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது. தேவைப்படும்போது பொருளாதாரத்திற்கு நாம் அளிக்க வேண்டிய ஊக்கங்களை, ஆக்கங்களை, மக்களின் தேவைகளை அறிந்து இந்த அரசு முனைந்து திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் நமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

இங்கே பல்வேறு உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது—ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். மாவட்டங்களுக்கு எல்லாம் தலைவர்களுடைய பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. தேச நன்மையை உத்தேசித்து, பொதுவாக ஒரு முடிவெடுக்கப்பட்டு, பெயர்களை நீக்குவதற்கு எல்லோரும் ஏற்றுக் கொண்டு, ஒத்துக் கொண்டோம். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்வது, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுடைய பெயராலும் ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை ஆகும். கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் பெயராலே ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வேறு ஒரு இடத்திலே கோரிக்கை வைத்தபோது, சட்டமன்றத்திலே இதுகுறித்து தெரிவிப்பதுதான் முறை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். இப்போது முழு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான காலகட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து, வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே தன்னுடைய அறிவிப்பாக தருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அதே நேரத்தில் இன்றைக்கு நாடு முழுவதும் சிறுபான்மையினருக்கு உரிய பங்கு தேசிய வருமானத்தில் இல்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த வாரம் திரு. ராமுவாலியா அவர்கள்



கூட்டிய ஒரு கருத்தரங்கில் புள்ளிவிவரங்களோடு, எப்படியெல்லாம் சிறுபான்மையினர் தங்களுக்குரிய பங்கைப் பெற முடியாமல் இப்போது பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிகவும் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதனை மத்திய அரசு மட்டுமல்ல, மாநில அரசுகளும் தங்களுடைய கவனத்தில் கொண்டு உரிய முறையில் சிறுபான்மை இன மக்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் முக்கியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆட்சியில்—ஒரு புள்ளி விவரம், முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—போலீஸ் துறைக்கு 10,000 பேரை எடுத்திருக்கிறார்கள், அந்த 10,000 பேரில் 158 பேர்கள்தான், முஸ்லீம்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயமென்பது எனக்குத் தெரியவில்லை. நாங்கள் சொற்போர் நடத்தத்தான் தெரிந்தவர்கள். மற்போர் நடத்த எங்களுக்குத் தெரியாது. வாயால்தான் எடுத்துரைக்க முடியும். வேறுவகையில் எடுத்துச் சொல்வதில் எங்களுக்குக்கூட ஏற்புடையதல்ல. அதில் விருப்பமும் இல்லை. அப்படிச் செய்தால் அதில் வெற்றி பெற முடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும். எனவே, தங்கள் காலத்திலே— மாண்புமிகு முதலமைச்சர் போன்ற ஒரு வரலாற்றுச் சிறப்புடையவர், எல்லாத் தரப்பு மக்களுக்கும் பொதுவான தலைவர். நான், என்னுடைய மக்கள், உங்களுடைய மக்கள் என்றெல்லாம் சிலர் பேசக் கூடும். எங்களைப் பொறுத்தவரையில் எல்லோரும் எங்களுடைய மக்கள்தான். அப்படித்தான் நினைக்கக்கூடியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பதை அவர்களும் நிச்சயமாகச் சொல்வார்கள். அந்தவகையிலே, வேறு உணர்வுகள் பிரிவு உணர்வுகள் ஆகியவற்றிற்கு ஆளாகாத, பொது நோக்குடைய ஒருவர் ஆட்சி செய்து கொண்டிருக்கும் போது, உங்களிடத்திலே, தங்களிடத்திலேதான் நாங்கள் எங்கள் கோரிக்கைகளை எடுத்து வைக்க முடியும். அதனால்தான் திரு. சீத்தாராம் கேசரி போன்றவர்கள் அடிக்கடி சொல்கிற ஒரு வேண்டுகோள்—சிறுபான்மை மக்களுக்குக் குறைந்தபட்சம் 10 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அவர்கள் அன்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். மாறுபட்ட சூழ்நிலையில் இன்று என்ன சொல்கிறார்களோ எனக்குத் தெரியாது. இருந்தாலும், எங்கள் கோரிக்கையை உங்களிடத்தில் வைப்பதற்குக் காரணம்—10,000 பேரில் 158 போலீஸ்காரர்கள்தான் தேர்வு பெற்றிருக்கிறார்கள்—இந்த நிலை மாற வேண்டுமானால் மற்றவர்களுக்கு அரசமைப்புச் சட்டத்தில் ஒதுக்கீடு ஏற்பாடுகள் இருப்பதைப் போல, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மலைச்சாதியினருக்கு, ஒதுக்கீடு ஏறபாடு

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1997 அக்டோபர் 17

*பிற்பகல் 12-40*

இருப்பதைபோல—separate constitutional schemes இருப்பதைப்போல—தனியாக, சிறுபான்மை மக்களுக்கு நம்முடைய அரசமைப்புச் சட்டம் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. சிறுபான்மை மக்களுக்குத் தனியாக, புதிதாகச் செய்வதல்ல; அரசமைப்புச் சட்டத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, நாங்கள் இந்த ஆட்சியைக் கேட்டுக் கொள்வது, தயவுசெய்து சிறுபான்மை மக்களுக்கு, இந்த நிலைகளையெல்லாம் ஏற்படுத்துகின்ற வகையில், குறைந்தபட்சம் 10 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யவேண்டும். இன்றைக்குச் சமுதாயத்தில் மிகமிகப் பின்னால் தள்ளப்பட்டவர்கள், மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்களைவிடத் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலைக்கு ஆக்கப்பட்டவர்கள் என்பதை நான் உங்களுடைய புள்ளிவிவரங்களிலிருந்து காட்டுகிறேன். அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரங்களை நான் காட்டுகிறேன். அதைப் பற்றி எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை. எனவே, தயவுசெய்து, நான் கேட்டுக் கொள்வது, இந்த இரண்டு அறிவிப்புகளை நாங்கள் எதிர் பார்க்கிறோம். ஒன்று, காயிதேமில்லத் அவர்களுடைய பெயரிலே ஒரு பல்கலைக்கழகம். அது எங்களுக்குத் திருப்தி அளிக்கும்; நிறைவை அளிக்கும். எல்லாத் தலைவர்களின் பெயரிலேயும் இருக்கும்போது, அவர்களுடைய பெயரால், தங்களால் ஏற்படுத்தப்படும் என்று சொன்னால், அது எங்களுக்கு நிறைவைத் தரும். ஒருவேளை வேறு யாராவது ஆட்சியிலே இருந்தால் அதைக்கூட நாங்கள் கேட்க மாட்டோம். காயிதேமில்லத்திற்கு நீங்கள்தான் செய்யவேண்டும். அதுவே எங்களுடைய விருப்பம். அதேபோல, 10 சதவிகிதத்தைப் பற்றி ஒரு அறிவிப்பு கொடுத்து, இந்த நிலைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வகுப்புக் கலவரங்கள் நடப்பது எங்களுக்குப் பெருத்த வேதனை அளிக்கிறது. யார் கொல்லப்பட்டாலும் அதை நாங்கள் கண்டிக்கிறோம். தண்டிக்கப்பட வேண்டுமென்று கோருகிறோம். மனிதனைக் கொல்வதைவிட மாபாதகம் வேறு ஒன்றுமில்லை. இந்து கொல்கிறானா அல்லது முஸ்லீம் கொல்கிறானா என்பதைவிட, நாங்கள் கேட்டுக் கொள்வது, அப்பேர்ப் பட்டவர்கள்மீது, நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுங்கள். ஆனால், அப்பாவிகளைப் பொத்தாம் பொதுவாக, தெருவிலே போகிற அப்பாவிகளையெல்லாம் கைது செய்து, காராகிரஹத்தில் அடைத்து வைப்பது, அவர்களை நிபந்தனை ஜாமீனில் வேறு ஊருக்குச் சென்று வாழுங்கள் என்று சொல்வது. இதெல்லாம் மிகப் பெரிய கொடுமை.



[1997 அக்டோபர் 17] [திரு. ம. அப்துல் லத்தீப்]

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். அண்மையில் நடந்த மேலப்பாளையம் கலவரத்தின்போது 4 பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை திரு. வேலாயுதன் அவர்கள்கூட இங்கே சுட்டிக் காட்டினார்கள். அவர்களுடைய உணர்வில் நானும் பங்குகொள்கிறேன். அவர் எடுத்துச் சொன்ன கருத்துக்கள், ஒரு குறிப்பிட்ட சமுதாயம் என்பதற்காக, உதாசீனப்படுத்தப்படுவதும், பாகுபாட்டிற்கு ஆளாக்கப்படுவதும் கூடாது என்று அவர்கள் நேற்று சொன்னார்கள். அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். அவர் சொல்லும்போது நானே சொல்வதாகத்தான் நினைத்தேன். ஒரு குறிப்பிட்ட சமுதாயம் என்பதற்காக பாகுபாட்டிற்கு ஆளாக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில், 158 பேர் மதுரையிலே கொண்டு வந்து விடப்பட்டிருக்கிறார்கள். அன்றாட ஜீவிகள், பீடித் தொழிலாளிகள். அவர்களையெல்லாம் கைது செய்து நிபந்தனை ஜாமீனிலே இப்பொழுது மதுரையிலே இருக்க வேண்டுமென்று, நிபந்தனையிலே விட்டிருக்கிறார்கள். அவர்கள் காலையிலே உழைத்தால் தான் மாலையிலே உண்ணமுடியும். அவர்கள் இருப்பதற்கு இடமில்லை. உண்பதற்கு உணவில்லை. தெரு வீதிகளிலே படுத்துக் கொண்டு உணவிற்கு என்ன வழி என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அப்பேர்ப்பட்ட இந்த அப்பாவிகளையெல்லாம் விடுதலை செய்வதற்குரிய வகையில், நிபந்தனைகளைத் தளர்த்தி, அவர்கள் தொழில் செய்வதற்கு வழி வகுத்துத் தாருங்கள். வேறுவிதமாக இருந்தால், நான் தவறாக எடுத்துச் சொல்லமாட்டேன். அவர்கள் இந்தத் தவறிலே, இந்தக் கொடுமையிலே ஈடுபட்டிருந்தால் அவர்களைக் கைது செய்யச் சொல்லி, சிறைச்சேதம் செய்யுங்கள் என்ற அளவிற்கு தங்களிடத்திலே நானே சொல்வேன். எனவே, தயவுசெய்து அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொள்கிறோம்.

உங்களுடைய மதிப்பீடுகளைப் பார்க்கும்போது, நம்முடைய முன்னேற்றத் திட்டத்தில், நீங்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. அதற்காக அல்லும் பகலும் உழைக்கிறீர்கள். உங்களைப் போல உழைப்பவர்கள், அதுவும் இந்த வயதில், இந்த நாட்டில் வேறு யாரும் இல்லை. உங்களைக் கண்டிப்பவர்கள் கண்டிக்கப்படுவது மட்டுமல்ல, தண்டிக்கப்பட வேண்டும். உங்கள் காலத்தில் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற பெருமையோடு, பேசுவதற்கு அதிகமாக வாய்ப்பு

இல்லாத காரணத்தினால், ஒட்டுமொத்தமாக இந்த மதிப்பீடுகளை மதிப்போடு இந்த நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது; நாங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதைக் கூறி விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டில் பாராட்டக்கூடியது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான திட்டம். இவையெல்லாம் வெறும் அறிவிப்போடு நின்றுவிடுமோ என்று நாங்கள் எல்லாம் பயந்து கொண்டிருந்தோம். அவற்றிற்கெல்லாம் இன்று பணம் ஒதுக்கி, நிச்சயமாக, இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறும் என்கின்ற ஒரு நம்பிக்கையை, இந்தத் துணை மதிப்பீடு எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை நான் முதலில் தெரிவித்து, அதற்காக நம்முடைய அரசுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு மணிக்குத் தன்னுடைய பேச்சைத் தொடங்கி, ½ மணி நேரமாவது அவர்கள் பேச வேண்டும் என்பதற்காக, நான் 15 நிமிடங்களில் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, 'ஸ்டாண்டர்டு மோட்டார்' என்பது நம்முடைய நாட்டில், முதன்முதலாக சுதந்திரம் வந்தபிறகு ஏற்பட்ட ஒரு நல்ல நிறுவனம். மோட்டார் நிறுவனம். அந்த நிறுவனம், மூவாயிரம் ஊழியர்களைக் கொண்ட நிறுவனமாக இருந்து, கடந்த 3 ஆண்டுகளாக மூடிக் கிடக்கின்ற ஒரு நிலையில், கடந்த 15 தினங்களுக்கு முன்னால் அங்கு உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதத்திற்கு நானே சென்று, 'உங்களுடைய கோரிக்கையை நான் சட்டமன்றத்தில் எடுத்து வைப்பேன்; முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்' என்று சொன்ன உறுதியின் பேரில், அவர்களுடைய போராட்டத்தை நான் நிறுத்தி வைக்கக் கேட்டுக்கொண்டேன். தயவுசெய்து, அந்த 'ஸ்டாண்டர்டு மோட்டார்' தொழிற்சாலையைத் திறப்பதற்கான முயற்சியிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் [illegible] வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு வரலாற்று சிறப்புமிக்க, 12 ஆண்டுகளுக்கு மேலாக [illegible] ஒரு தொழிற்சாலையாக [illegible] வந்து இப்போது வெளிநாடுகளிலே இருந்தெல்லாம், 'ஹுண்டாய்' என்றும் 'பியூஜியோ' என்றும் [illegible]





தொழிற்சாலைகள் இங்கே வந்து கொண்டிருக்கிற நேரத்தில், நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்கின்ற அந்த 'ஸ்டாண்டர்டு மோட்டார்' தொழிற்சாலை மூடப்படுவது என்பது, நமக்கு ஒரு மரியாதையாக இருக்காது; கௌரவமாக இருக்காது என்பதை நான் மிக ஆணித்தரமாக இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக அதிகாரிகளையெல்லாம் பார்த்தேன். இப்போது கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது; அதிலே ஏலம் எல்லாம் விடக்கூடிய சூழ்நிலை அங்கே உருவாகி இருப்பதாகக்கூடச் சொன்னார்கள். ஒரே ஒரு வழி இருக்கிறது. அதை ஒரு 'ரீ-கன்ஸ்ட்ரக்ஷன்' என்ற முறையில், மறுபரிசீலனை செய்வது என்ற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. என்று சொல்கிறார்கள். அதற்காக, வெளியே இருந்து பெரிய முதலாளிகள் யாரேனும் வருவார்களேயானால், அவர்களையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். நான்கூட, மலேசியாவிலே எனக்குத் தெரிந்த ஒரு நண்பரிடம் இதுகுறித்துச் சொன்னேன். அரசு அழைத்தால் நான் வருகிறேன் என்று அவர் சொன்னார். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரும்பினால், அவரை அழைத்தால் அவர்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களை அணுகும்பட்சத்தில் அந்த 'ஸ்டாண்டர்டு மோட்டார்' தொழிற்சாலை எப்படியும் திறக்கப்படுகின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பரமக்குடியில் 35 தலித் மக்கள், நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதுபோல், அந்த ஏழையெளிய அரிசன மக்கள் மீது ஒரு வழக்கு, உண்மையான பொய் வழக்கு போடப் பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நடந்தது என்னவென்று சொன்னால், நேரம் ஆகிவிட்டது என்பதால் சுருக்கமாகச் சொல்கிறேன், பொன்னையாபுரம் என்ற பகுதியில், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதர், கொலை செய்யப்பட்டு, அந்த ஆடுகளை எங்கேயோ பறித்துக் கொண்டுபோய் விட்டார்கள். உடனே, அந்த பாதிக்கப்பட்ட, கொலை செய்யப்பட்டவருடைய இனத்தைச் சார்ந்தவர்கள், சந்தேகப்பட்டு ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். பொன்னையாபுரத்துக்காரர்கள்தான் கொலை செய்துவிட்டார்களோ என்ற சந்தேகத்தின்பேரில் ஊர்வலம் நடத்தினார்கள். ஆனால், கொலை செய்தது, வேறு ஒரு சமூகம் என்பது, இரண்டு தினங்களுக்குப் பின்னாலேதான் தெரிய வந்தது. உடனே அரிசனங்களுக்குக் கோபம்; எங்கள் மீது சந்தேகப்பட்டார்கள் அல்லவா; அதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சண்டை போட்டார்கள். இப்படிப்பட்ட சண்டை நடந்து கொணடிருந்த நேரத்தில், போலீஸ் தலையிட்டு, இப்போது அது சுமுகமாகப்

போயிருக்கிறது. இருந்தாலும்கூட, அதைப் பயன்படுத்தி 35 இளைஞர்களை இரவோடு இரவாக கைது செய்து, சிறையிலே அடைத்துவிட்டார்கள். அதன்காரணமாக, மறுநாள் அங்கே இருக்கின்ற அரிசன பெண்கள் எல்லாம்கூட மறியல் செய்ததன் காரணமாக, துப்பாக்கிச் சூடு அளவுக்கு நடந்து, ஒரு இளம்பெண் அந்த இடத்திலேயே துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளானார் என்றெல்லாம் செய்திகளை நாம் பார்த்திருக்கிறோம். இப்போது என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், அந்த 35 பேர்களும் எந்தவிதமான குற்றமும் செய்யாத இளைஞர்கள், அவர்கள் இன்று ஜாமீனிலே வந்திருக்கிறார்கள். உடனடியாக அந்த வழக்கை வாபஸ் வாங்கி, அந்த இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 'மினி பஸ்' என்று நம்முடைய அரசு அறிவித்தது. அது 17 கிலோ மீட்டர் வரைதான் என்பது நடைமுறை சாத்தியம் அல்ல. 30 கிலோ மீட்டராவது ஓடக்கூடிய அளவுக்கு அந்த மினி பஸ் திட்டத்தை ஏற்படுத்தி இந்த நாட்டில் வேலையில்லாமல் இருக்கிற ஏழை எளிய படித்த பட்டதாரிகளுக்கு லைசன்ஸ் வழங்கி எல்லா இடங்களிலேயும் அந்த மினி பஸ் ஓடுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

பத்திரிகைகளில் கடந்த 3 தினங்களாக நெல் கொள்முதல் பற்றி 'இந்து' பத்திரிகையிலும் சரி, 'தினமலர்' பத்திரிகையிலும் சரி ஏராளமான படங்களோடு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நெல் எல்லாம் ஆங்காங்கே கிடங்குகளில் வைக்கமுடியாமல் வெளியிலே வைக்கப்பட்டு, மழையில் நனைந்து முளைத்து, அது ஒரு பெரிய பாதிப்பாக இருக்கிறது என்ற செய்திகள் நாள்தோறும் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கின்றன. தஞ்சாவூரிலும் சரி, திருவள்ளுவர் மாவட்டத்திலேயும் சரி, திருவாரூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் எல்லாம் இது பெரிய பிரச்சினையாக இருப்பதாக பத்திரிகைகளிலே செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட தஞ்சாவூர் சென்ற நேரத்தில் அதிகாரிகளைப் பார்த்தாரே தவிர, சம்பந்தப்பட்ட விவசாயிகளைப் பார்க்கவில்லை என்று என்னிடம் தொலைபேசியில்கூட பேசியிருக்கிறார்கள். ஏராளமான புதிய கட்டிடங்கள் எல்லாம் கிடக்கின்றன. என்னுடைய தொகுதியிலேகூட தோப்படைப்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. ஒரு பர்லாங்



நீளத்திற்கு முழுக்க முழுக்க அரிசனங்கள் வாழ்கின்ற அந்த கிராமத்தில் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி இருக்கிறார்கள். எப்போது கட்டினார்கள் என்பது தெரியாது. ஆனால் பல இலட்சக்கணக்கான மூட்டைகளை அடுக்குகிற அளவுக்கு இருக்கின்ற அந்தக் கட்டிடம், பல ஆண்டுகளாக சும்மா கிடக்கிறது. இதுபோன்ற இடங்களில் நெல்லைக்—கொள்முதல் செய்து—அடுக்கி வைத்து இந்த நாட்டில் நெல்லை உற்பத்தி செய்தவர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் 33% பெண்களுக்கு நாம் ஒதுக்கி இருக்கிறோம். அந்த அப்பாவிப் பெண்கள் இன்று பஞ்சாயத்துத் தலைவர்களாக வந்து இந்த ஆண் வர்கத்தின் மூலம் அவர்கள் படுகின்ற தொல்லைகள், துன்பங்கள் கொஞ்சம் நஞ்சம் கிடையாது. அம்பாசமுத்திரம் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் சந்திரா என்ற ஒரு பெண்ணை மிரட்டி, உருட்டி ராஜினாமா செய்கிறாயா, இல்லை, கொலை செய்யவா என்றுகூட அந்த சம்பந்தப்பட்ட இ.ஓ. கேட்டிருப்பதாக எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார். நான் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் பதவியை ராஜிநாமா பண்ணவா என்று கேட்டார்கள். நான் முதலமைச்சரிடம் சொல்லி உங்களுக்கு நிவாரணம் வாங்கித் தருகிறேன் என்று சொன்ன பிறகு ராஜிநாமா செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஒரே ஒரு உதாரணம்தான் நான் சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்தத் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் புதிதாக பஞ்சாயத்துத் தலைவர்களாக, நகராட்சித் தலைவர்களாக, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நீங்கள் அழைத்து ஒரு நாள் மாநாடு நடத்தி, அவர்களுடைய கஷ்டங்களைத் தெரிந்து இந்த அதிகாரிகளையும் அழைத்து நீங்கள் அவர்களை மதித்து நடக்கத் தெரியாவிட்டால் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிடுங்கள் என்று அவர்களுக்கு உத்தரவிடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, அச்சங்குளம் மில்லைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் மிக நன்றாக எடுத்துச் சொன்னார்கள். அச்சங்குளம் மில் என்பது என்னுடைய தொகுதியில் வருகிறது. முழுக்க முழுக்க அரிசனங்கள் வேலை செய்கிற அந்த மில்லில்— தமிழகத்திலேயே 18-25 மில்கள் கூட்டுறவுத் துறையிலே இன்று இயங்குகின்றன என்று சொன்னால், அதில் அந்த ஒரே ஒரு

மில்லில்தான்—இலாபம் வருகிறது என்று சொன்னார்கள். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. காரணம் அது என்னுடைய தொகுதி என்பது மட்டுமல்ல, நூற்றுக்கு நூறு அரிசன மக்கள் வேலை செய்கிற ஒரு மில்லில் இலாபம் வருகிற அளவுக்கு அவர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், இந்தப் பொன்விழா ஆண்டில் அதற்கு நீங்கள் ஒரு பரிசு அளிக்கின்ற வகையில் அந்த அச்சங்குளம் மில்லை 25,000 ஸ்பின்டில்களாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கிற ஸ்பெஷல் ஆபிசருக்கு தனியாக ஒரு பாராட்டு தெரிவிக்க வேண்டும். அவருடைய பெயர்கூட நம்முடைய அண்ணன் லத்தீப் அவர்கள் மகிழ்ச்சி அடைகின்ற வகையில் யாசீன் என்ற தனி அதிகாரி, அதை இலாபகாமாக நடத்திக் கொண்டிருக்கிறார். எனவே திரு. லத்தீப் அவர்களுடைய கோரிக்கையான அந்த போலீசைக் கூட நீங்கள் கொடுத்து விடலாம். ஆகவே அவருக்கும் நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்து 25,000 கதிர்கள் கொண்ட மில்லாக அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொடுமையான விஷயம் என்னவென்றால், இந்த பஞ்சு வியாபாரிகள் கடந்த ஆட்சியிலே - திரு. தாமரைக்கனி அப்போது எல்லாம் எங்களோடு எதிர்க்கட்சியிலேதான் இருந்தார். அவருக்குக் கூட சொல்வதற்கு உரிமை கிடையாது, அக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றைக்கு வந்திருப்பவர்கள் எல்லாம்கூட புதிதாக வந்திருக்கிறார்கள். 5 ஆண்டுக்காலம் அந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நாங்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் ஒரு வரலாறே எழுதலாம். பஞ்சு வியாபாரிகளிடம் இருந்து பயங்கரமாக லஞ்சம் வாங்கி, ஏராளமான கடனை அவர்கள் தலையிலே வைத்து 10 கோடி ரூபாய் அளவுக்கு பாக்கி வைத்துவிட்டு போய்விட்டார்கள். அவர்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் பார்த்துப் பேசி, 'சரி நீங்கள் கொடுத்த லஞ்சம், அதிகமாக வாங்கியது எல்லாம் கழித்து, 6 கோடி ரூபாய் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று ஒரு அக்ரிமெண்ட் போட்டிருக்கிறார்கள். சரி, அதையாவது கொடுங்கள் என்று கேட்டு 6 மாத காலமாக அவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது அதிலே ரொம்ப பேர் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த வியாபாரிகள் நாணயமான, நேர்மையான வியாபாரிகள். அவர்கள் இப்போது பல துன்பங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். 'ஒரு வாரத்தில் நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டுமென்றால் இந்த அக்ரிமெண்டில்



கையெழுத்து போடுங்கள்' என்று சொல்லிவிட்டு 6 மாத காலமாக அலையவிட்டால் என்ன அர்த்தம்? அரசைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்? ஆகவே, அவர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து, கைத்தறியாளர்களுக்கு 20 சதவீதம் ரிபேட் கொடுக்கப் பட்டுள்ளது பாராட்டக்கூடியதாகும். ஆனால், மந்திரி இருக்கின்ற ஊரிலே மட்டும் ஏன் கொடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை. நம்முடைய கைத்தறித்துறை அமைச்சர் இருக்கிற ஈரோட்டிலே மட்டும் அது அமல்படுத்தப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு வேளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இது வந்ததோ, இல்லையோ தெரியவில்லை. தயவுசெய்து அதை அங்கேயும் அமல்படுத்துங்கள், அவ்வளவுதான், வேறு ஒன்றும் இல்லை.

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமைக்கும்தான் அமல்படுத்தப்பட்டிருக்கிறதேயொழிய, தனியாக ஈரோட்டிற்கு மட்டும் அமல்படுத்தப்படாமல் இல்லை. பழைய பாக்கிகள் என்ற அளவில், அதிலே ஏதாவது கணக்குகள் இருக்கலாமேயொழிய, இந்த அரசைப் பொறுத்தவரையில் தவறான அணுகுமுறையைக் கடைபிடிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதற்கு அடுத்தபடியாக தொழுநோய் யூனிட்டுகளை எல்லாம் மூடிவிட்டார்கள். அது பரவாயில்லை. ஏனென்றால் தொழுநோய் என்பது ஒன்றும் கிடையாது. அதனால் யூனிட்டுகளை மூடியதில் தவறில்லை. இந்தத் தொழுநோய் யூனிட்டை நம்பி, கிருஸ்துவர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள் போன்ற மைனாரிட்டி சமூகத்தினர் நடத்திய ஏராளமான தொண்டு நிறுவனங்களில் 1,500 பேர் வேலை பார்த்தார்கள். அந்த 1,500 பேர் வேலை பார்த்த யூனிட்டுகளில் என்ன சொல்லுகிறார்கள் என்றால், 'அரசாங்கமே தொழுநோய் இல்லை என்று சொன்ன பிறகு, நாங்கள் மட்டும் எப்படி இந்தத் தொண்டு நிறுவனங்களை நடத்த முடியும் என்றும், நாங்கள் ரத்து செய்துவிடுவோம்' என்றும் சொல்லுகிறார்கள். அப்படியென்றால் அந்த 1,500 பேர்களின் நிலைமை என்ன ஆவது? அரசாங்க ஊழியர்களுக்கு வேலை கொடுத்து விட்டார்கள். இவர்களுக்கும் தயவுசெய்து ஒரு வழி காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்சினை. குடிநீர் பிரச்சினை என்பது மருந்துப் பிரச்சினைபோல உள்ளது. தென் தமிழ்நாட்டில் இருக்கின்ற கொடுமை தாங்க முடியாது. நம்முடைய அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று ஒரு தனிக் குழுவை அமைத்து அமைச்சர்களை எல்லாம், அதிகாரிகளை எல்லாம் அழைத்து வைத்துப் பேசினார்கள். அதில்கூட நான் சொன்னேன். அதிகாரிகள் எல்லோரும் கொஞ்சம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். நேற்றுகூட சொன்னார்கள். 'கிருஷ்ணா நதி நீர் வருகின்றபோது அது மலைகளுக்குள்ளே போகின்றது' என்று சொன்னார்கள். இவையெல்லாம் தெரியாமலா திறந்து விடுவார்கள்? அதிகாரிகள் இதில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் குடிதண்ணீர் என்பது இன்று மிகப் பெரிய பிரச்சினையாக, பூதாகரமாக வந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் கிருஷ்ணா நதிநீர் மலைக்குள் போய்விட்டது என்று யாரும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் அது தவறான செய்தியாகும். இன்றைக்கும் கிருஷ்ணா நதி தண்ணீர் 240 'கியூபிக் ஃபீட்' வந்துகொண்டிருக்கிறது. கால்வாய் தாங்குகின்ற அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. அதனால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. சில இடங்களில் சரிவு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சரிவைச் சரிபடுத்துகின்ற வேலையை ஆந்திர அரசு முனைப்பாக செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதையெல்லாம் பார்த்துக் கொள்ளவேண்டும். திண்டிவனத்தில் குடிதண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். பக்கத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஆகையினால், நீண்ட தூரத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டார்கள்.

அடுத்து, தியாகிகளுக்காக பொன்விழா ஆண்டில் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். இதிலே ஒரே ஒரு கோரிக்கை என்னவென்றால் அவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்கு இடம் கேட்கிறார்கள். அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். திருத்தணி தியாகிகள் எங்களுக்கும் பென்ஷன் வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, மா.பொ.சி. அவர்கள் நினைவாக அவர்களுக்கும் பென்ஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இறுதியாக, கோயம்புத்தூர் இராதாகிருஷ்ணா மில் தொழிலாளர்கள் அரசாங்கத்தை அணுகி, கடைசியாக இப்போது கோர்ட்டுக்குப்போய் ஏலம் விடக்கூடிய ஒரு சூழ்நிலை வந்தும்கூட, 12 ஆண்டுகளாக அந்தத் தொழிலாளர்கள் எந்தவிதமான நிவாரணமும் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, இப்போது தீபாவளி வரப்போகிறது. எல்லோருக்கும் போனஸ் கொடுத்திருக்கிறார்கள், பொதுமக்களுக்கு போனஸ் அளிக்கின்ற வகையில் பஸ் கட்டணத்தில் நீங்கள் தயவுசெய்து இரண்டே இரண்டு காசாவது குறைத்துக் கொடுக்க வேண்டும். 2001 வரை கூட்டமாட்டோம் என்று சொல்ல வேண்டியதே இல்லை. ஏனென்றால், 2001-க்குள் மக்களே விரும்பி நாங்கள் வசதியாக இருக்கிறோம் கொஞ்சம் காசை கூட்டுங்கள் என்று கேட்டாலும் கேட்பார்கள். அதனால், தயவுசெய்து நீங்கள் இரண்டே இரண்டு காசையாவது குறைத்து தீபாவளி போனசாக மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் குறித்து நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு லத்தீப் அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும், மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு வேலாயுதன் அவர்களும், மாண்புமிகு வல்லரசு அவர்களும், மாண்புமிகு தாமரைக்கனி அவர்களும், மாண்புமிகு ஐ. கணேசன் அவர்களும், மாண்புமிகு டி. மணி அவர்களும், மாண்புமிகு சி.டி. தண்டபாணி அவர்களும், மாண்புமிகு ஞானசேகரன் அவர்களும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்து, கோரிக்கைகள் சிலவற்றையும் முன் நிறுத்தி, இந்த விவாதத்திலே சுவையும், இடையிடையே சூடும் உருவாக்கி இருக்கின்றார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை பற்றி குறிப்பிட்டார்கள், நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் நானும் விரைவிலேயே ஒவ்வொன்றாக தொட்டுக்காட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதுதான் முறையாக இருக்கும் என்று நான் சொல்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்பதிலே

இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டியது என்பதிலே இந்த மாமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள் மிக நன்றாக அறிவார்கள். 1989-90ஆம் ஆண்டில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் திறக்கப்படுவதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவரான நண்பர் கோபு அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டபோது அவருடைய கோரிக்கையை ஏற்று, நிதி உதவி கூட அந்தத் தொழிற்சாலைக்காக அன்றைக்குச் செய்யப்பட்டதும், அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டுமென்பதிலே இந்த அரசு அக்கறையுடையதாக இருந்தது என்பதும் எடுத்துக் காட்டக்கூடிய மிக முக்கியமான சான்றாகும். அதற்குப் பிறகு, பல நேரங்களில் என்னைத் தொழிற்சங்கத் தலைவர்கள் பலரும் சந்தித்து, குறிப்பாக நண்பர் பாண்டியன் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் சந்தித்து இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த தொழிலதிபர்கள் முன்வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டபோது, நான் உறுதியாக அதை ஏற்றுக்கொள்வேன் என்று குறிப்பிட்டேன். ஆனால், பிறகு யாரும் வரவில்லை. அவரும் அழைத்து வந்ததாகத் தகவல் இல்லை. ஆனால், இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெரிய தொழிலதிபர்களை அழைத்து நடத்தச் சொன்னால் நடத்துவார்கள் என்று குறிப்பிட்டார்கள். சொன்னால், தானே அழைத்து வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அவருடைய உறுதிமொழியை ஏற்றுக் கொண்டு, அப்படி ஒரு பெரிய தொழிலதிபரை, ஸ்டாண்டர்டு தொழிற்சாலையை நடத்துவதற்கு அழைத்து வருவாரேயானால் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், இடையிலே வில்லங்கங்கள் ஏதாவது இருந்தால் அவைகளை அகற்றுவதற்குக்கூட இந்த அரசு முயற்சி மேற்கொண்டு அந்தத் தொழிற்சாலையை தொடர்ந்து நடத்துவதற்கு முன்வரும் என்ற உறுதியை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். 35 பேர் குற்றமற்ற இளைஞர்கள் மீது—அவர்கள் இன்றைக்குக் கூட, ஜாமீனில் வந்திருந்தாலும்கூட, அவர்கள்மீது வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் உடனடியாக அதற்கான பதிலை அளிக்க முடியாவிட்டாலும் பாதகமான நிலை எதையும் எடுக்கமாட்டேன், இந்த அரசு எடுக்காது என்ற உறுதியை அவருக்குத் தெரிவித்து அந்த வழக்கு பற்றிய பரிசீலனை நிச்சயமாக நடைபெற்று நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை அவருக்கு மாத்திரமல்ல; அப்பாவி மக்கள் சில பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். வல்லரசு அவர்கள் எப்போதும் 100, 200 என்று சொல்ல மாட்டார்கள். பல்லாயிரம், பல லட்சம் என்றுதான்



சொல்வார்; பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இருப்பதாக சொன்னார். அப்படி பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பல வழக்குகள் என்று சொல்லியிருப்பாரேயானால், அதிலே உண்மை இருக்கக்கூடும். எனவே, அப்படிப்பட்ட வழக்குகள், அது வல்லரசு சொல்வதாக இருந்தாலும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்வதாக இருந்தாலும் அவற்றையெல்லாம் தீர விசாரித்து அதிலே அப்பாவி மக்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்களேயானால் நிச்சயமாக அவர்கள் வழக்கிலேயிருந்து விடுபடுவதற்கு ஏற்ற முடிவுகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது பத்திரிகைகளிலே பரபரப்பாக படங்களோடு வெளியிடப்பட்டிருக்கின்ற குறுவை நெல் கொள்முதல் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இது அத்தியாவசியமான ஒன்று என்பதால் நான் அதுபற்றி நேரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் முதலிலேயே குறிப்பிட வேண்டுமென்று கருதுகிறேன். கொள்முதல் என்பது இரண்டு நிலை; ஒன்று, கட்டாயக் கொள்முதல்; மற்றொன்று இருநிலைகளில் கொள்முதல் செய்வது, வியாபாரிகள் ஒருபுறத்திலே கொள்முதல் செய்வது; அரசாங்கம் இன்னொருபுறத்திலே கொள்முதல் செய்வது என்று இருநிலை. கட்டாயக் கொள்முதல் என்னும்போது, அரசுக்கே நெல் கிடைக்காத ஒரு சூழ்நிலையில் நியாயவிலைக் கடைகளில் வழங்கக்கூடிய அரிசிக்குத் தேவையான நெல் இல்லாத சூழ்நிலையில் சில பகுதிகளில் கட்டாயக் கொள்முதல் செய்வது அவசியமாகி, அப்படிக் கட்டாயக் கொள்முதல் செய்கிற நேரத்திலே, விவசாயிகள் கேட்கின்ற, அவர்கள் வைக்கின்ற கோரிக்கை அனைத்தையும் ஏற்று, நல்ல விலை கொடுத்து, அந்த நெல்லை வாங்குவது. அப்படி வாங்கியிருக்கிறது இந்த அரசு. இது உங்களுக்கு எல்லாம் தெரியும். இன்றைக்கு உள்ள சூழ்நிலை என்னவென்றால் அமோகமான விளைச்சல் குறுவையிலே ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அந்த நெல்லை வாங்குங்கள் என்கிறார்கள். வியாபாரிகள் வாங்க முன்வரவில்லை. அவர்கள் வாங்காவிட்டாலும் நீங்கள் வாங்க வேண்டும் என்கிறார்கள். வாங்கச் சென்றாலும் அதிக விலை கொடுத்து வாங்குங்கள் என்கிறார்கள். அப்படி வாங்கும்போது தரக்கட்டுப்பாட்டிலே இவ்வளவு சதவீதம்தான் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இவ்வளவையும் ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு ஏற்கெனவே ஏற்றியிருக்கின்ற விலையுடன் 35 ரூபாய்

மாநில அரசு சார்பாக தந்து, தரக்கட்டுப்பாட்டிலே விவசாயிகள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, கிட்டத்தட்ட 350-க்கு மேற்பட்ட கொள்முதல் நிலையங்களை அந்தப் பகுதியிலே திறந்து இன்றுவரையிலே ஏறத்தாழ 5 இலட்சம் டன் நெல்லை இந்த அரசு கொள்முதல் செய்து இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நெல்லைக் கொள்முதல் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு அந்த விவசாயிகளுடைய கோரிக்கைகள் வருகிற நேரத்திலே, அதைப் பெரிதாக வெளியிடுகிற பத்திரிகைகள், கொள்முதல் செய்த நெல்லை வைப்பதற்கே ஏன் இடமில்லை என்று கேட்பது என்பது வேடிக்கையான விமர்சனமாகும்.

இன்று அல்ல; நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் பல நேரங்களில் பார்த்திருக்கலாம், தஞ்சை போன்ற மாவட்டங்களிலே, திருச்சி போன்ற மாவட்டங்களிலே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை சாலைகளில் பெரிய பெரிய துணிகள் போட்டு மூடி வைக்கப்பட்ட காட்சிகளையெல்லாம் பல நேரங்களிலே பார்த்திருக்கலாம். இருந்தாலும்கூட, நான் உணவுத்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மற்றுமுள்ள அதிகாரிகளிடத்திலும் குறிப்பிட்டுச் சொல்லி, இப்படிக் கொள்முதல் செய்யப்படுகின்ற தானியங்களை உடனடியாக வைப்பதற்கு, தேவைப்பட்டால் ஆலயங்களைக்கூட பயன்படுத்திக்கொள்ளலாம்; பல சிறைச்சாலைகளிலே இன்றைக்கு மிகுந்த இடங்கள் இருக்கின்றன, அவற்றைக்கூட பயன்படுத்திக்கொள்ளலாம், இன்னும் பல இடங்களில் பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னாலும், இருக்கிற பிரச்சினை என்னவென்றால் எடுத்துச் செல்வதற்கான வண்டி வாகனங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை. சில வண்டிகளை நிறுத்தி, வாகனங்களை நிறுத்தி, நெல்லை எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னால் அதற்கும் கோபித்துக்கொள்கிறார்கள்; எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது; எடுத்துச் செல்ல முடியாது என்று சொல்கிறார்கள். அவர்களையெல்லாம் சமாதானப்படுத்தி அவர்களுக்குத் தரவேண்டிய கூலியைத் தந்து அதன்பிறகு எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் ஏறத்தாழ 5 இலட்சம் டன்—இன்றைக்குக் கொள்முதல் இருநிலைகளிலே—கொள்முதல் வியாபாரிகளும் வாங்கிக்கொள்ளலாம்; அரசும் வாங்கிக்கொள்ளலாம் என்ற இரு நிலையில் கொள்முதல் செய்யப்பட்டு, குறுவை நெல் விளைச்சலில் விவசாயிகளுக்கு எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று இருக்கின்றன. பத்திரிகைகளிலே



ஏதோ இரண்டு மூன்று படங்களை எடுத்துப் போட்டுவிட்டு நெல் எல்லாம் முளைத்துவிட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் சொல்கிறேன்; முளைத்தாலும்கூட, அது உண்மையாக இருந்தாலும்கூட, வேறு என்ன செய்ய முடியும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். நெல்லை வாங்குவது என்பது ஒன்றும் கட்டாயம் இல்லை அரசுக்கு. ஏன் வாங்குகிறோம் என்றால் விவசாயிகளுடைய வேதனையைப் போக்குவதற்காக, அவர்களுக்கு அந்தக் கொள்முதலுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் நெல்லை வாங்குகிறது. அப்படி வாங்குகிற நேரத்திலேகூட அதை நீங்கள் சரியாக வைக்க வில்லை என்று சொன்னால், அதற்கு விவசாயிகள் வருத்தப்படத் தேவையில்லை. வாங்கி புசிப்பவர்கள்தான் வருத்தப்படவேண்டும். ஆனால், விவசாயிகளுக்காக இன்றைக்கு வேதனை கண்ணீர் வடித்துக் கொண்டு, வாங்கிய நெல்லை ஒழுங்காக வைக்கவில்லை என்று பேசுகின்ற பேர்கம், எழுதுகின்ற எழுத்துக்களும் அவசரப்பட்டு அது ஏதோ ஆர்வக் கோளாறின் காரணமாக செய்யப்படுகின்ற பிரச்சாரமே தவிர வேறல்ல.

அதற்காக இந்த அரசு வாளா இருந்துவிடவில்லை. மங்கநல்லூரிலே இப்படிப்பட்ட தானியங்கள் குவிக்கப்பட்டு இன்னும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்ற செய்தி கிடைத்தவுடன், நான் உடனடியாக உணவு அமைச்சர் நேருவுக்கு திருச்சிக்குத் தகவல் சொல்லி, இந்தச் செய்தி அந்த ஊர் பத்திரிகையிலே வராத காரணத்தால், தகவல் சொல்லி, உடனடியாக அவர் மங்கநல்லூருக்குச் சென்று, அங்கே குவிக்கப்பட்ட நெல்லையெல்லாம் வேறு இடத்திற்கு மாற்றி இருக்கின்றார். முதல் நாள் சென்னையிலே பத்திரிகையிலே செய்தி வந்தது. மங்கநல்லூர்க்காரர் கடிதம் எழுதியிருந்தார். இப்படி நெல் குவிக்கப்பட்டு இருக்கிறது; முளைத்துக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் எழுதியிருந்தார். மறுநாள் அதே நண்பர் அதே பத்திரிகைக்குக் கடிதம் எழுதி, "நான் எழுதி பத்திரிகையிலே செய்தி வெளியிட்டவுடன், மறுநாளே நெல்லை எடுத்து விட்டார்கள். இதைப் பாராட்டுகிறேன்; நன்றி" என்று கடிதம் எழுதினார் அதே பத்திரிகைக்கு. அதை அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கவில்லை. அந்தக் கடித நகல் என்னிடத்திலேதான் இருக்கிறது. எனவே, உடனடியாக எந்தக் கோரிக்கை வைக்கப்பட்டாலும், எந்தக் குறைபாடு சுட்டிக் காட்டப்பட்டாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதற்கு இதைவிட வேறு சான்றுகளை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டத் தேவையில்லை என்றே கருதுகின்றேன்.

பிற்பகல் 1-10

துணை மானியக் கோரிக்கை 953 கோடி ரூபாய்க்கு உங்களுடைய ஒப்புதலைக் கேட்டு, இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. 953 கோடி ரூபாய் துணை மானியக் கோரிக்கை என்பது பெரும் தொகையாக தெரியக்கூடும். ஆனால், இந்த 953 கோடி ரூபாயில் மின்சார வாரியத்திலே இருந்து அரசுக்குச் சேர வேண்டிய கடன் 448.28 கோடி ரூபாய் ஆகும். அந்த 448 கோடி ரூபாயை மாநில அரசினுடைய மூலதனமாக வைத்துக் கொள்வது என்று அரசு ஆணை பிறப்பித்துவிட்ட காரணத்தாலேதான், அந்த 953-ல் இந்த 448-ம் அடங்கி இருக்கிறது. இதைக் கழித்து விட்டால் 505 கோடி ரூபாய்க்குதான் இந்தத் துணை மானிய மதிப்பீடு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள முடியும்.

ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்குக் கோரப்படுகின்ற இந்தத் துணை மானியக் கோரிக்கையில், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 58 கோடியே 75 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது—25 லட்ச ரூபாய் போதுமானதல்ல என்று நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே வாதிட்டார்; வெட்டுப் பிரேரணையில்கூட அவர் குறிப்பிட்டு இருக்கின்றார்; அவர் மிகமிக முக்கியமாக கருதுகிற காரணத்தால்தான் வெட்டுப் பிரேரணையிலே குறிப்பிட்டு அதைப்பற்றி இங்கு விரிவாகப் பேசி இருக்கின்றார். ஒன்றை மறந்துவிடக் கூடாது. ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 25 லட்ச ரூபாய் என்றால், ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு கணக்குப் பார்த்தால் 1½ கோடி ரூபாய் என்பதை ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும்; ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு மத்திய அரசு தருகிற தொகை ஒரு கோடி ரூபாய்; நாம் தருகிற தொகை 1½ கோடி ரூபாய் என்பதை ஞாபகத்திலே வைத்துக்கொண்டால், ஞானசேகரன் மேலும் பணம் வேண்டும் என்று கேட்கமாட்டார் என்று கருதுகிறேன். (சிரிப்பு) ஒருவேளை மத்திய அரசு இன்னும் அதிக நிதி ஒதுக்குமேயானால், அப்பொழுது மாநில அரசும் அதைப்பற்றிச் சிந்திக்கும் என்று அந்த உறுதியை மாத்திரம் இந்த மாமன்றத்திலே நான் வைக்க விரும்புகின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தைப் பற்றிப் பேசும்பொழுது நம்முடைய பழனிசாமி ஒன்றைச் சொன்னார். இந்தத் திட்டத்திற்காக இன்றைக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத்



திட்டம் நிறைவேறுகின்ற நிலையில் படிப்படியாகத்தான் செலவாக முடியும். அவர் சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தை அதிகாரிகள் ஒதுக்குவது இல்லை என்று குறைபட்டுக்கொண்டார்; அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்றபொழுது, அந்தக் கூட்டத்தினுடைய முடிவுகள் என்னென்ன என்று பத்திரிகைகளிலே விவரமாக வெளியிடப்பட்டு இருக்கிறது. அதிலே ஒன்று, இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பி கேட்கின்ற அந்தப் பகுதியிலேதான் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை நடத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது என்பதை அப்பொழுதே வெளியிட்டு இருக்கின்றோம். இருந்தாலும் மறந்து இருப்பார், மறந்துவிட்ட பழனிசாமி அவர்கள் அதை இங்கு ஞாபகப்படுத்தி இருக்கிறார் என்று நான் கருதுகின்றேன்.

நமக்கு நாமே திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் முதல்கட்டமாக ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. இதைக்கூட இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் சில பேர் மத்திய அரசு ஒதுக்குகின்ற பணத்தை எல்லாம் இப்படி நாம் இந்தத் திட்டங்களுக்காக செலவழிக்கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டது என்னுடைய கவனத்திற்கு வந்தது. இந்த 5 கோடி ரூபாய் மாத்திரமல்ல, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 கோடி மாத்திரமல்ல, மத்திய அரசின் சார்பாக தொகை ஒதுக்கப்படவில்லை என்று நான் கூறமாட்டேன்; அந்தத் தொகையையும் சேர்த்துத்தான் நாம் மக்களுக்காக செலவிடுகின்றோம். இதிலே மத்திய அரசு பணம், மாநில அரசு பணம் என்றெல்லாம் பிரித்துப் பார்த்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஒரு கணக்குக்காக, விவரத்திற்காக வேண்டுமானால் இதிலே மாநில அரசு பணம் இவ்வளவு, மத்திய அரசு பணம் இவ்வளவு என்று பார்க்கலாம். எல்லாம் மக்கள் தருகின்ற பணம்தான். மத்திய அரசு பணம் என்றாலும், மாநில அரசு தருகிற பணம் என்றாலும், மக்கள் தருகின்ற வரிப் பணம்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. அப்படி ஒதுக்கப்படுகின்ற அந்தப் பணத்திலேகூட இந்தத் திட்டத்தையும், மத்திய அரசினுடைய திட்டங்களையும் யாரும் மறைக்கவும் இல்லை, அதை மறுக்கவும் இல்லை.

குறிப்பாக இந்திரா வீடு கட்டும் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கின்றது. அதற்காகத் தரப்படுகின்ற தொகை, மத்திய

அரசிலேயிருந்தும் தரப்படுகிறது. மாநில அரசும் ஓரளவுக்குத் தொகையைச் செலவழிக்கிறது. அப்படிச் செலவழிக்கின்ற நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்படுகின்ற அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு, 'இந்திரா வீடு கட்டும் திட்டம்' என்ற பெயர்தான். அது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் வந்தாலும், 'நமக்கு நாமே' திட்டத்தில் வந்தாலும், அந்தப் பெயர்தான் இப்போதும் சூட்டப்படுகின்றது. அதை யாரும் மாற்றிவிடவில்லை. ஆனால் வரலாற்றை நீங்கள் பார்ப்பீர்களேயானால், இந்தியாவிலேயே முதன்முதலாக ஆதிதிராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைத் தொடங்கியது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அந்தத் திட்டம் நேர்த்தியான திட்டம் என்பதை உணர்ந்த அகில இந்தியாவில் உள்ள மத்திய அரசு, அந்தத் திட்டத்தைத் தன்னகப்படுத்திக் கொண்டு அதை இந்தியா முழுவதும் இன்றைக்கு விரிவாக்கியிருக்கின்றது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பெயரைப் பற்றி முக்கியம் இல்லை. அது தமிழக அரசின் திட்டமாக இருந்தாலும், மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும் அது மக்களுக்கான திட்டம், அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திட்டம் என்ற முறையில் அதை நாம் வரவேற்கிறோம்.

பிற்பகல் 1-15

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உதவித் திட்டத்திற்கு ஏற்கெனவே செலவழிக்கப்படுகின்ற தொகையைவிடக் கூடுதலாக 21 கோடியே 15 லட்சம் ரூபாய், இந்தத் துணை மானிய மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி சேலை வழங்குவதற்கு, கூடுதலாக 24 கோடி ரூபாய் இந்த மதிப்பீட்டில் கோரப்பட்டிருக்கின்றது. இந்த இலவச வேட்டி சேலைகளை, பொங்கலன்று வழங்குவதற்கு ஆகின்ற செலவு மொத்தம் 89 கோடி ரூபாய். இந்த 89 கோடி ரூபாயிலே கூடுதலாக இந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிற 24 கோடி ரூபாயும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதைப்போலவே, கடந்த கால ஆட்சியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு, 1992-93-லிருந்து 1995-96 வரையிலான கால அளவிற்கு உரிய நிகரச் செலவு மானியத் தொகையை வழங்கவே இல்லை. அப்படி வழங்காமல் தேங்கிய தொகை 13 கோடியே 70 லட்சம் ரூபாய். கடந்த ஆட்சியில் 1992-93-ல் இருந்து 1995-96 வரையில் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கவேண்டிய தொகை 13





கோடியே 70 லட்சம் ரூபாய். அதுவும் நம்முடைய தலையில்தான் இன்றைக்கு விழுந்திருக்கிறது. அந்தக் காரணத்தால் இந்தத் துணை மதிப்பீட்டிலே அந்தத் தொகையும் இடம் பெற்றிருக்கின்றது.

சேலம், நெல்லை, திருச்சியில் காவல் துறை ஆணையாளர்கள் அலுவலகங்களைப் புதிதாகத் தொடங்க 11 கோடியே 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. காவல் துறையினுடைய பல்வேறு பிரிவுகளுக்குப் புதிய மோட்டார் வண்டிகளை வாங்குவதற்கு 3 கோடி ரூபாய் முன்பணமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. காவல் துறை பணியாளர்களுக்கு, உணவுக் கட்டணங்களை உயர்த்திய வகையில் 2 கோடியே 73 லட்ச ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மாவட்டங்களுக்கும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை எல்லாம் எடுத்துவிட்ட காரணத்தால், ஏதோ அவற்றை எடுப்பதற்கு முனைந்தவர்கள், அந்த யோசனைகளைச் சொன்னவர்கள் எல்லாம் நாட்டுப் பற்று இல்லாதவர்கள், தலைவர்களை மதிக்காதவர்கள் என்றெல்லாம் இங்கே அ.தி.மு.க சார்பிலே எடுத்துக் கூறப்பட்டது. நான் ஒருவனாக அல்லது சிலராக இந்த முடிவை எடுத்துவிடவில்லை. 40,50 பேர் கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, ஒரு முறைக்கு இருமுறை கூட்டி, அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் மாவட்டங்களுக்கும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களுடைய பெயர்களை எடுத்துவிட்டு, 15 பல்கலைக்கழகங்களில் அந்தத் தலைவர்களுடைய பெயரால் 28 அறக்கட்டளைகளை ஏற்படுத்த முடிவு செய்து, அதற்காக 7 கோடி ரூபாய் இந்தத் துணை மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகியவற்றுக்கு அவசர சிகிச்சை வாகனங்கள் 'ஆம்புலன்ஸ்' வாங்குவதற்கு 9 கோடியே 91 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மீனவர்களுக்கு, சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 4,000 வீடுகள் கட்டுவதற்குக் கூடுதலாக 10 கோடியே 80 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைத் திருத்தியமைக்க, கூடுதலாக 4 கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டு, ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும்கூட,

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 அக்டோபர் 17

அதில் பல சிக்கல்கள் இருந்தன. அந்தக் குழந்தையின் பெயரால் ரூ.5000 போடுவதாகச் சொன்னார்களே தவிர, அதற்கான சான்று அந்தக் குழந்தைகளுக்குத் தரப்படவில்லை. அரசு போட்டு வைக்கும்; 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்றுதான் இருந்தது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு எந்த அரசு வருவது? எந்த அதிகாரி இருப்பது? எந்தச் சான்றிதழை யாரிடத்திலே போய் காட்டி அந்தப் பணத்தைப் பெறுவது என்பதற்கான விபரங்களும் இல்லை; அதற்கான வழிமுறைகளும் இல்லை. அதனால்தான் ஒரு குழந்தைக்கு, ஒரு பெண் குழந்தை என்றால் 3,000, 2 பெண் குழந்தைகள் என்றால் அவர்கள் கருத்தடை செய்து கொள்ளவேண்டும், தலா 1,500, 1500 என்று 3,000 ரூபாய் அவர்களுக்குப் போக்குவரத்துக் கழக நிறுவனத்திலேயுள்ள நிதி நிறுவனத்திலே அந்தப் பணத்தை அரசாங்கம் உடனடியாகப் போட்டு அதற்கான சான்றிதழை அந்தப் பெற்றோரினுடைய கையிலே கொடுத்துவிடுகிற திட்டத்தை இப்போது நாம் உருவாக்கி இருக்கின்றோம். அந்தச் சான்றிதழ் அவர்களுடைய கையிலே இருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் போய் சான்றிதழைக் காட்டி இது எங்களுக்கான பணம், அன்றைக்கே எங்கள் பெயரில் போடப்பட்ட பணம் என்று வாங்கிக்கொள்ளக்கூடிய அந்த உறுதியும், உத்தரவாதமும் இந்தத் திட்டத்தின்படி இன்றைக்கிருக்கிறது. அதற்காக இப்பொழுது கூடுதலாக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் இன்றைக்கு இந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-20

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்ற ஏழை மக்களுக்கு ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் மனைகள் ஒதுக்கப்பட்டன. இப்போது ஏழைகள் அனைவருக்கும், பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அதுமாத்திரமில்லாமல் முன்னேறிய வகுப்பினருக்கும், ஏழைகளாக இருந்தால், அவர்களுக்காக வீட்டுமனை வழங்க 16 கோடி ரூபாய் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே இடம் பெற்றுள்ளது.

குடிசை மாற்று வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டு, ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்த வீடுகளெல்லாம் நீண்ட நாட்களாகவே பழுது பார்க்கப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். பராமரிக்கப்படவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். அந்தப் பழுது பார்க்கும் பணிகளையும், பராமரிப்புப் பணிகளையும்



1997 அக்டோபர் 17] [கலைஞர் மு. கருணாநிதி]

மேற்கொள்ள 9 கோடியே 50 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.

காவிரிப் பிரச்சினையைப் பற்றி நாம் பேசுகிறோம். ஆனால் காவிரிப் பிரச்சினை தீர்ந்தாலும்கூட காவிரித் தண்ணீர், தஞ்சை மாவட்டத்திலுள்ள கடைக்கோடிப் பகுதிகளுக்குச் (Tail End) செல்ல முடியாமல் வாய்க்கால்களெல்லாம் தூர் விழுந்து மேடு கட்டி வகைப்படுத்தாத ஒரு சூழ்நிலை இருந்தது. அதை தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். அதற்காக 10 கோடி ரூபாய் அளவிலும், அந்தக் கால்வாய்களையெல்லாம் தூர் எடுக்கவும், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளையெல்லாம் அகற்றுவதற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் செலவிலே பொதுப்பணித் துறைக்கும், வேளாண் துறைக்கும் அதன் சார்பிலே செலவிடப்பட்டு அதற்கு அனுமதிக்கப்பட்ட தொகையும் இந்த மதிப்பீட்டிலே இடம் பெற்றிருக்கிறது.

இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி 50 இடங்களிலே சமத்துவபுரம் அமைப்பது என்று அறிவிக்கப்பட்டு முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப வேலைகளுக்காகத்தான் அந்த 5 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமத்துவபுரம் என்பது 50 இடங்களில் 100 வீடுகளைக் கொண்டு அமைக்கப்படுகின்ற புதிய இடங்களாகும். அதிலே எல்லா சமூக மக்களும் அங்கே கூடி வாழ வேண்டும்; சமத்துவத்தை அந்தவகையிலே நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சமத்துவபுரம் என்ற திட்டம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 5 கோடி ரூபாயிலே என்ன செய்ய முடியும் என்ற கேள்வி நியாயமான கேள்வியாக இருந்தாலும், நிலத்தை ஆர்ஜிதப்படுத்தவும், தொடர்ந்து அந்த இடத்திலே சமத்துவபுரத்தை அமைப்பதும், நம்முடைய 2 கட்டப் பணிகள் என்பதால், ஆரம்பப் பணிகளுக்காக இந்த 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றத்தினுடைய அதிகாரங்களைப் பற்றியெல்லாம் நேற்றும் இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே பெரும்பான்மையான அதிகாரங்கள் ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன. அதற்கான பட்டியல் என்னிடத்திலே இருந்தாலும்கூட, படித்துக்காட்ட நேரம் இல்லை. இருந்தாலும், இருக்கின்ற குறைகளை அகற்றி, இன்னும் சில அதிகாரங்கள் தேவை என்று எழுந்துள்ள குரலை மதித்து நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

அவர்களை அமைப்பாளராகக் கொண்ட அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 4,5 கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுடைய பெயர்கள்தான் எங்களுக்கு வந்து சேரவில்லை. மற்ற எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய பெயர்களும் எங்களுக்கு வந்து சேர்ந்து விட்டன. இன்னும் அனுப்பி வைக்காத கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன. இது தொடங்கி அறிவித்து ஏறத்தாழ 2 அல்லது இரண்டரை மாதங்கள் ஆகின்றன. இந்த இரண்டரை மாத காலமாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றும்கூட, நேற்றைக்கோ அல்லது போன வாரத்திலோதான் முக்கியமான கட்சிகளெல்லாம்கூட யார் யாரை இந்தக் குழுவிலே நியமிக்கலாம் என்கின்ற வகையில் சிலருடைய பெயர்களை அனுப்பி இருக்கின்றார்கள். முதலிலே அறிவித்திருந்தால், ஏற்கெனவே இந்தக் குழு கூடி, எந்தெந்த அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலேகூட வைத்து இருக்க முடியும். அரசு எல்லாவற்றிலும் தாமதமாக இருக்கிறது என்று குறை சொல்கிறவர்கள், அவர்கள் எப்படித் தாமதமாக இருந்தார்கள் என்பதை மாத்திரம் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்த கட்சிகள் தரவில்லை என்றெல்லாம் சொல்லி நான் குறிப்பிட்டு எந்தக் கட்சியையும் சுட்டிக்காட்டி குறை சொல்ல விரும்பவில்லை. விரும்பாத காரணத்தால் இந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு முதலமைச்சர் விட்டு விட்டாரே என்பதை உணர்ந்து பார்த்து அந்தக் கட்சிகளுடைய தலைவர்கள் உடனடியாக அந்தப் பெயர்களை, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

எல்லா பெயர்களும் எம்.எல்.ஏ. பெயர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. ஒரு கட்சிக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி இருப்பாரேயானால் அந்தக் கட்சியிலுள்ள எம்.எல்.ஏக்கள் அல்லாதவர்கள்கூட, ஆனால் பஞ்சாயத்திலோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ அல்லது உள்ளாட்சி மன்றங்கள் எதிலும் இடம் பெறாதவர்களாக இருந்து, பொதுவாக இந்த நிலையை ஆராயக்கூடியவர்கள் அதிலே அனுபவம் பெற்றவர்கள், அவர்களுடைய பெயர்களை அதிலே இணைத்தால் இப்போது எம்.எல்.ஏக்கள் பெயர்களை கொடுத்திருந்தால் அவர்கள்கூட மாற்றிக்கொள்ளலாம்



இந்தக் குழு கூடுவதற்கு முன்பாக, அந்தவகையிலே, இந்தக் குழு அமைந்து என்னென்ன அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்ற முடிவை எடுக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக கிருஷ்ணசாமி போன்றவர்கள் பேசும்போது சமத்துவம் இல்லாத ஒரு சூழ்நிலை சுதந்திர இந்தியாவிலே பொன்விழா கொண்டாடும் நேரத்திலேகூட இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி வேதனையைத் தெரிவித்துக் கொண்டார்கள். அந்த வேதனை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும், எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இருக்கின்றது.

ஒரு குறிக்கோளை, ஒரு இலட்சியத்தை அடையவேண்டும் என்கிறபோது, அதற்கு சில அணுகுமுறைகள் இருக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்த அணுகுமுறையிலே, அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் முரட்டுத் தனமாக, மூர்க்கததனமாக, ஆர்வக் கோளாறு காரணமாக அவசரம் காட்டினால், அந்த அணுகுமுறை நிச்சயமாக வெற்றியைத் தராது. அந்த அணுகுமுறையை, சாத்வீகமாக, அதேநேரத்தில் உறுதியோடு, மெல்ல மெல்ல, நிதானமாக அதேநேரத்தில் நெஞ்சழுத்தத்தோடு அந்தக் காரியத்தை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் நிறைவேற்றியாக வேண்டும். அதிலே மாறுபாடான கருத்து இந்த அரசுக்கு இல்லை. இந்த அரசை நடத்திச் செல்கின்ற என்னைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே நான் எந்த அளவிற்குத் தொடர்புடையவன்; எந்த அளவிற்கு அவர்களுடைய நன்மை தீமைகளில் எனக்கு அக்கறை உண்டு என்பதை மாமன்றத்திலே இருக்கின்ற யாரும் அறியாதவர்கள் அல்ல.

கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே என்னைப் பாராட்டினார்; ஒரு துணை வேந்தரை அவருடைய சமுதாயத்திலிருந்து நியமித்து விட்டோம் என்பதற்காகப் பாராட்டினார். இன்றைக்கு துணை வேந்தர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது மாத்திரமல்ல; தமிழ்நாடு தேர்வாணைக் கமிஷனின் தலைவரும், இந்த ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல, என்னுடைய அந்தரங்கச் செயலாளர்களிலே, மூத்தவராக இருக்கின்ற அதிகாரியும், அந்தச்

சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் என்பதை மறந்து விடக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், சென்னை உயர் நீதிமன்றத்தின் நூற்றாண்டுக்கால வரலாற்றில் முதன்முதலாக ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நீதிபதி அமர்ந்ததும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது. ஒரு டி.ஜி.பி.யாக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் வரவேண்டுமென்று, திரு. துரை அவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான். அதையெல்லாம் நண்பர் கிருஷ்ணசாமி மறந்திருக்க மாட்டார். இருந்தாலும்கூட, இன்றைக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்; பாராட்டு தெரிவித்தார். தெரிவித்து விட்டு, இன்னமும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற சில வேதனைகளைச் சுட்டிக்காட்டினார். அதை அவருக்கு மாத்திரமல்ல; எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? இந்திய தேசிய லீக் கட்சிக்குத் தெரியாதா? பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தெரியாதா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? எல்லா கட்சிகளுக்கும் தெரிந்த விஷயம்தான். எல்லோரும் வேதனைப்படுகின்ற விஷயம்தான் இது.

நான் ஒரு புள்ளி விவரம் எடுக்கச் சொன்னேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற சற்றொப்ப 58 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் ஆயிரம் கிராமங்களிலாவது டீக்கடைகளில் இரண்டு டம்ளர்களை வைத்து, டீ வழங்குகின்ற அந்தக் கொடிய பழக்கம் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொள்ள முடிந்தது; இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஐந்து நிமிடம் தாங்கள் அனுமதிக்கலாமா?

*பிற்பகல் 1-30*

## 7. அரசினர் தீர்மானம்

## விதி 189(3)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 189-(3)-ன்படி துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம், பிற்பகல் 1-30 மணிக்குள் முடிந்து வாக்கெடுப்பு நடத்தப் பெறவேண்டும். எனவே, விவாதத்தை நீட்டிக்க, அவ்விதியைத் தளர்த்துவதற்கான தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழியலாம்.





***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 189(3)-ஐ இன்று தளர்த்தி, முதல் துணை நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தினை பிற்பகல் 1-40 மணி வரையில் நீட்டிக்கலாம்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் பேச்சைத் தொடரலாம்.

## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98 மீது பொது விவாதமும், கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அண்மையிலே அரசாங்கத்தின் சார்பாக வெளியிடப்பட்ட விளம்பரங்களை நீங்கள் கண்டிருக்கக்கூடும். அவர் குறிப்பிட்டதைப்போல, வேலைவாய்ப்புகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள், வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக, அவர், கிருஷ்ணசாமி உள்ளிட்ட ஒரு குழு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டு அந்த ஆய்வும் நடைபெற்று வருகின்றது. காலியிடங்களை நிரப்புவதற்கு ஆட்கள் இருந்தால், அதிலே எந்தவிதமான தயக்கமும் இருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. ஆட்கள் இருந்தும் நிரப்பப்படாமல் இருந்தால் என்ன காரணம் என்பதை அறிந்து, அதனை நிரப்புவதற்கான வாய்ப்புக் கூறுகளை இந்த அரசாங்கம் உருவாக்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையிலே வெளியிடப்பட்ட விளம்பரத்தில், "கிராமப்புறங்களில் உள்ள ஒருசில கடைகளில் அங்குவரும் அனைவரையும் சமமாக நடத்துவதில்லை என்று புகார்கள் வந்துள்ளன. கடைகளுக்கு வரும்

அனைவரையும் சமத்துவத்துடன் நடத்தவேண்டும் என்றும், அனைவருக்கும் அனைத்து வசதிகளும் ஏற்றத்தாழ்வின்றி தரப்பட வேண்டுமென்றும், அனைவரையும் சமமாக நடத்தாத உரிமையாளர்கள்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அரசு எச்சரிக்கின்றது. கோவையில் அதுபோல் சமத்துவத்தைக் கடைப்பிடிக்காத சில கடைகளின் உரிமையாளர்கள்மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதலின், எல்லாக் கடைகளின் உரிமையாளர்களும் மேலே கூறப்பட்ட அரசின் கருத்தைக் கவனத்திலே கொண்டு தங்கள் கடைகளுக்கு வரும் அனைத்து மக்களையும் சமத்துவமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடைகளுக்கு வரும் மக்களைச் சமத்துவமாக நடத்தவில்லை என்றால், இதுகுறித்த புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அரசுக்கோ கொடுக்கலாம். அப்படி புகார் கொடுக்காமல் நேரடியாகவே சட்டத்தை தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு செயல்பட்டால், அவர்கள்மீதும் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்".

அரசே இதற்கு ஒத்துழைக்கும்போது, அரசே இதற்கு ஆணைகள் பிறப்பித்து, இந்த விதிகளை மீறுகிறவர்கள் சமத்துவத்திற்கு எதிராக நடக்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முற்படும்போது, அவரவர்களும் தங்கள் கைகளிலே சட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது, சமூக விரோதிகள் சில பேர் சேர்ந்து ஒரு துக்கம் கடைப்பிடிக்கின்ற நேரத்திலேகூட—உங்களுக்குத் தெரியும், என்னுடைய இனிய நண்பர் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மறைந்தபோது அந்தத் துக்கத்திலேகூட சென்னை மாநகரத்திலே என்னென்ன நடைபெற்றன என்பது உங்களுக்குத் தெரியும்—எத்தனைக் கடைகள் சூறையாடப்பட்டன; எத்தனைக் கடைகளிலேயிருந்து நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன; எத்தனை பேர் அன்றைக்கு வன்முறைக்கு ஆளானார்கள்? எல்லாம் அந்தக் கட்சிக்காரர்கள் செய்தார்கள் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் சமூக விரோதிகள் அதைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நேரம் பார்த்து திருடலாம், கொள்ளையடிக்கலாம் என்று வருவதைப் போல, ஒரு நல்ல நோக்கத்தோடு செய்யப்படுகின்ற காரியங்களில் சமூக விரோதிகள் நுழைந்து, இதுதான் நேரம், இந்த டீக்கடையிலே போய் எத்தனை கிளாஸ்களைத் திருடலாம், எத்தனை ரூபாயைத் திருடலாம், எத்தனை உண்டியலை உடைக்கலாம் என்று சில பேர் முற்படுவார்களேயானால் அது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படாது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



அதைப்போலவேதான், கோயில் நுழைவு. இன்றைக்கும் தமிழ்நாட்டில் சில இடங்களில் கோயில்களில் சமத்துவம் இல்லை. அந்தச் சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகத் தான், எல்லா ஆலயங்களிலும் சமபந்தி விருந்து நடைபெறவேண்டும் என்று அரசின் சார்பிலே சொல்லப்பட்டு, அறநிலையத்துறை அமைச்சரும், அந்தத் துறையின் அதிகாரிகளும், மற்றும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஒத்துழைத்து, ஏன் ஆன்மீகவாதிகளும்கூட ஒத்துழைக்க முன்வந்து, மடாதிபதிகள், ஆதீனகர்த்தர்கள் எல்லாம்கூட ஒத்துழைக்க முன்வந்து சமபந்தி விருந்துகள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோயில்களிலே நடைபெற்றிருப்பதை நீங்கள் மறந்திருக்க முடியாது.

மனிதச் சங்கிலி அணிவகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் சமத்துவம் தழைத்தோங்க வேண்டுமென்ற குறிக்கோளோடுதான் நடைபெறுகின்றன. மனதைத் திருத்தவேண்டும், மனப் பக்குவத்தை உருவாக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே தான் இவை எல்லாம் நடைபெறுகின்றன. ஆனால் நான் செய்தி பார்த்தேன். கோயம்புத்தூரிலே ஒரு ஊரிலே ஒரு கோவிலுக்கு ஐநூறு பேரை அழைத்துக்கொண்டு நான் நுழைவேன் என்று நண்பர் கிருஷ்ணசாமி அறிவிக்கின்ற நேரத்தில் இன்னொரு சாராரை அது ஆத்திரப்படுத்தி, அதன்காரணமாக ஆலயப் பிரவேசம் நடந்தது என்று அகமகிழ்ச்சி அடைவதைவிட, ஆலயப் பிரவேசம் என்ற பெயரால் இருசாராரும் அடித்துக்கொண்டு இத்தனைப் பேர் செத்தார்கள் என்ற அந்தக் கணக்கைப் பார்க்க நான் தயாராக இல்லை. அது மிகப் பெரும் வேதனை. அந்த வேதனை வெள்ளத்திலே நாமெல்லாம் மிதக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த அணுகு முறையிலே மாற்றம் வேண்டும் என்றும், அதேநேரத்தில் ஊரிலே பெரியவர்களாக இருப்பவர்கள்—நான்கூடக் கேள்விப்பட்டேன்: கோவையைப் பொறுத்தவரையில், அந்த ஊரிலே இருப்பவர்கள்— எல்லாம் ஒன்று கூடி, நம்முடைய அமைச்சர் பழனிச்சாமி அவர்கள் முன்னிலையிலே அந்த மலைக் கோவிலில் எல்லோரும் சமபந்தி விருந்தை விரைவிலே ஒரு நாள் குறித்து நடத்துவதென்று முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த முடிவு மலைக் கோவிலிலே மாத்திரமல்லாமல், மாநிலம் முழுவதுமுள்ள எல்லாக் கோவில்களிலும், பெரியவர்களால் நடத்தப்படுமானால் நம்மைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது.

*பிற்பகல் 1-35*

எனவேதான், நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். சுட்டிக் காட்டக்கூடிய, சுயமரியாதைக்கு இழுக்குத் தேடக்கூடிய, சமத்துவத்

திற்கு, சமதர்மத்திற்கு மாறான காரியங்கள் நடைபெற்றாலும்கூட, அதை மாற்றுவதற்கு நாம் மேற்கொள்கின்ற அணுகுமுறை சரியானதாக இருக்க வேண்டும். உத்தமர் காந்தியடிகள் இந்திய விடுதலையைப் பற்றிச் சொல்லும்போது இந்திய நாட்டின் விடுதலை நமது குறிக்கோளாக இருந்தாலும், அதற்கான அணுகுமுறை அனைவரும் பாராட்டத்தக்க அளவிற்கு, ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிற்கு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார் என்பதை மறந்து விடக்கூடாது. ஒருவர் இறந்தாலும், சமுதாயத்திற்குச் சேதம் தான். பத்து பேர் இறந்தாலும், சமுதாயத்திற்குச் சேதம்தான். எனவே, நூறு பேர், இருநூறு பேர் சாகக்கூடிய அளவிற்கு, தொடர்ந்து சாதிக் கலவரங்கள் ஏற்படுகின்ற அளவிற்கு அணுகுமுறைகள் இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எதை வேண்டுமானாலும் விவாதிக்கலாம்; நேரில் வந்து பேசலாம். என்னைவிட ஒரு மலிவான முதலமைச்சர் உங்களுக்கு யார் கிடைக்கப் போகிறார்கள்? என்னைவிட வந்து சந்தித்துப் பேசக் கூடிய ஒரு முதலமைச்சர் உங்களுக்கு வேறு யார் கிடைக்கப் போகிறார்கள்? கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே யார் அப்படிக் கிடைத்தார்கள்? எனவே எதையும் பேசலாம்; வந்து பேசி விவாதித்து, அதைப் பற்றி முடிவெடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் நான் ஒன்றும் பெரிய குடும்பத்திலேயிருந்து வந்த ஒரு ஆள் அல்ல. மிக மிக சாதாரணமான, சாமான்யமான குடும்பத்திலே பிறந்து பெரியாரைப் பின்பற்றி, அண்ணாவைப் பின்பற்றி, அவர்களுடைய கொள்கைகளை உள்ளத்திலே ஏந்திய காரணத்தினால், இன்றைக்கு இந்த அவையிலே நான் முதலமைச்சராக நின்று கொண்டிருக்கிறேன்.

நேற்றைக்குக்கூட, பிரிட்டிஷ் ராணியிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது சொன்னேன். 36 ஆண்டுக் காலத்திற்கு முன்பு உங்களை நான் சந்தித்தேன் என்று சொன்னேன். பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது நேற்றைக்கு இங்கே வந்த பிரிட்டிஷ் ராணி அன்றைக்கும் வந்தார்கள். ராஜாஜி மண்டபத்திலே முதலமைச்சர் காமராஜர் விருந்தளித்தார். அப்போது எங்களையெல்லாம் அவர் ராணிக்கு அறிமுகப்படுத்தினார். குறுக்கீடு பொன்னம்மாள், எம்.எல்.ஏ. தானும் வந்ததாகக் கூறுகிறார். ஆமாம், அக்காள் அவர்களும் வந்திருந்தார். அப்போது அக்காள் அவர்கள் மிகவும் இளமையாக இருப்பார்கள். (பலத்த சிரிப்பு) 36 ஆண்டுகளுக்கு முன்பு! பெருந்தலைவர் எங்களையெல்லாம் ராணியாருக்கு அறிமுகப்படுத்தினார்கள். அப்போது அவருடன் வந்த கணவர் கூட கேட்டார். "நீங்கள் திராவிட நாடு கேட்கிறீர்களாமே?" என்று. 1961ஆம் ஆண்டு அது. "ஆமாம் அது



எங்களுடைய ரைட்" என்று அப்போது கூறினேன். அது திராவிட நாடு கேட்டுக்கொண்டிருந்த காலம். ஏன், இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அப்போது ஹை கமிஷனர் என்னிடம் 36 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எம்.எல்.ஏ.வாக இருந்தீர்களா என்று கேட்டார்; நான் ஆமாம் என்றேன். இப்போது நீங்கள் முதலமைச்சராக ஆகிவிட்டீர்களா என்றார்; அதற்கும் ஆமாம் என்றேன். அப்போது அவர் சொன்னார். "நான் ஒரு கதை சொல்கிறேன்; நீங்கள் இங்கே எம்.எல்.ஏ.வாக இருந்த போது 1961-ல் எங்கள் ராணியார் வந்தபோது, என்னுடைய தந்தைதான் ஹை கமிஷனராக இங்கே இருந்தார்" என்று அவருடைய தந்தை ஹை கமிஷனராக இருந்த கதையை அவர் சொன்னார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அன்றைக்கு நானோ, பேராசிரியரோ, மற்றவர்களோ, எம்.எல்.ஏ.க்களாக இருந்தோம். அப்போது நாங்கள் முதலமைச்சராகவோ, அமைச்சர்களாகவோ வரப்போகிறோமென்று கருதவில்லை. எனவேதான், அந்தச் சாதாரண நிலையிலேதான் இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கும் சாதாரணமாக எல்லோரையும் பார்க்கக்கூடிய வகையிலும், எல்லோருடனும் விவாதிக்கக்கூடிய வகையிலும் இருக்கின்ற ஒரு முதலமைச்சரை நீங்கள் பெற்றிருக்கும்போது, இதை மீறிக் காரியங்களை செய்தால்தான் என்னுடைய கவனத்திற்கு வருமென்று நீங்கள் யாரும் கருத வேண்டாம். என்னை அவர்கள் பார்த்தாலே போதும், புரிந்து கொள்வேன் என்னவென்று. அதற்காக அடித்துப் புரிந்து கொள்ள வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் *1-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. திருஞானசம்பந்தம்

**திரு. வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. திருஞானசம்பந்தம் அவர்களின் வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"1997-98-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 14-10-1997 தேதியிட்ட அறிவிப்பில்

குறிப்பிட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1997-98-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கு அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## நிறைவேற்றப்பெற்ற 1997-98 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

அ. வருவாய்க் கணக்கில் செலவு

| கோரிக்கை | | |
|---|---|---|
| 2 | மாநில ஆயத்தீர்வைத் துறை— | 12,70 |
| 7 | மாநிலச் சட்டமன்றம்— | 28,00 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்— | 51,90 |
| 11 | மாவட்ட நிருவாகம்— | 1,82,58 |
| 12 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்— | 90,00 |
| 13 | நீதி நிருவாகம்— | 74,32 |
| 14 | சிறைச்சாலைகள்— | 71,00 |
| 15 | காவல் துறை— | 25,88,37 |
| 17 | கல்வி— | 6,08,00 |
| 18 | மருத்துவம்— | 11,49,22 |
| 19 | மக்கள் நல்வாழ்வு— | 4,49,00 |
| 20 | வேளாண்மை— | 16,29,56 |
| 21 | மீனளம்— | 12,56,58 |
| 22 | கால்நடை வளர்ப்பு— | 1,59,82 |





அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை— | | |
|---|---|---|
| 23 | கூட்டுறவு— | 28,36 |
| 24 | தொழில்கள்— | 12,93,00 |
| 25 | கைத்தறியும் துணித்தொழிலும்— | 24,57,27 |
| 26 | கதர்-கிராமத் தொழில்கள்— | 13,70,00 |
| 27 | ஊரக வளர்ச்சி— | 1,45,24,01 |
| 28 | தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்— | 24,55 |
| 29 | சமூக நலன்— | 29,83,97 |
| 30 | பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன்— | 6,40,13 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்— | 16,98,18 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி— | 24,02,41 |
| 34 | நுகர்பொருள் வழங்கல்— | 6,14,17 |
| 35 | பாசனம்— | 14,36,43 |
| 39 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்— | 75,00 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்— | 45,59 |
| 42 | பல்வகை— | 7 |
| 43 | எழுதுபொருள்-அச்சுத்துறை— | 19,39 |
| 44 | காட்டு வளத் துறை— | 1,21,75 |
| 46 | செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல்— | 71,55 |
| 47 | ஊரகத் தொழில்கள்— | 13,32,00 |
| 48 | குடிநீர் வழங்கல்— | 10,68,28 |
| 49 | நகராட்சி நிருவாகம்— | 38,60,00 |
| 50 | சுற்றுலா— | 60,49 |
| 52 | சுற்றுச் சூழல்— | 8,65,17 |
| | மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **4,53,39,85** |

(ரூபாய் ஆயிரத்தில்)

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**

கோரிக்கை—

| | | |
|---|---|---|
| 53 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 1,00 |
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 10,00 |
| 56 | பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச்செலவு | 9,21,59 |
| 57 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 16,76,22 |
| 59 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு | 1,09,99 |
| 61 | பல்வகை மூலதனச் செலவு | 4,52,88,09 |
| | **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **4,80,06,89** |
| **இ.** | **கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 62. | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 19,93,31 |
| | பெருமொத்தம் .. | **9,53,40,05** |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-10-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

105. ஆமணக்கு (நெற்று அல்லது விதைகள்) கொள்ளு (எல்லா வடிவங்களிலும்), வரகு, சாமை, மரவள்ளிக்கிழங்கு, மரவள்ளிச்சீவல், மரவள்ளிமாவு, மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச் மற்றும் மக்காச் சோளம் (எல்லா வடிவங்களிலும்) ஆகியவற்றைப் பொறுத்தவரை திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களை அறிக்கையிடப் பட்ட பகுதிகளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 18-6-1997-ஆம் நாளிட்ட 253-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைப்பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1997 அக்டோபர் 17

106. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத்தொலைக்காட்சி அமைப்புக்கோவையின் மூலமாகத் தொலைக்காட்சி பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 6-5-1997-ஆம் நாளிட்ட 646-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக்கோவையின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதலை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1997) 22(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தைந்து முதல் அறுபத்தேழு வரையிலான அறிக்கைகள், 1997-98 (13 அறிக்கைகள்).

18. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை, 1997-98.

19. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ரெண்டாவது முதல் இருபத்து ஆறாவது வரையிலான அறிக்கைகள், 1997-98 (5 அறிக்கைகள்).

—o—

D
V211, 31 N97
N97.38.2
218445

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.